Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 | கதிர் : 094 | ஞாயிற்றுக்கிழமை | மாசி 16 ஆம் நாள் 28 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16+24 | விலை : ரூ.40 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

# யாழ். சிறைச்சாலையில் 51 பேருக்கு கொரோனா!

## நேற்று மட்டும் வடக்கில் 61 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், பெப்ரவரி 28

வடக்கு மாகாணத்தில் மேலும் 61 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் 51 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 15



## ஜெனிவாப் பிரேரணை நிறைவேற வேண்டும்

*தமிழரசின் மத்திய செயற்குழுவில் தீர்மானம்*

வவுனியா, பெப். 28

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுச 15

## தேர்தல் கூட்டுகளுக்கு ஒருபோதும் இடமில்லை

**தமிழ்த் தேசியப் பேரவையில் இணைவதில்லை என்று தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் முடிவு**

வவுனியா, பெப். 28

வவுனியாவில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள அரசியல் கட்சிகளுடன் கூட்டிணைந்து செயற்படுவது தொடர்பான கலந்துரையாட 06

இலங்கை மீதான நடவடிக்கை:

## ஐரோப்பிய ஒன்றியமும் காட்டியது பச்சைக்கொடி

கொழும்பு, பெப். 28

இலங்கையின் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு 15

## பிரேரணையை நிறைவேற்றினாலும் எம்மை எதுவும் செய்ய முடியாது!

பிரதமர் மஹிந்த இறுமாப்பு

கொழும்பு, பெப்ரவரி 28

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக வெளிநாடுகள் எத்தனை பிரேரணைகளை 15

இனப்படுகொலைக்கு நீதிவேண்டி

## சாகும்வரை உணவொறுப்பு பிரிட்டனில் முன்னெடுப்பு

லண்டன், பெப். 28

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதிவேண்டி பிரித்தானியாவில் உள்ள அம்பிகை செல்வகுமார் என்ற இலங்கைத் தமிழ்ப் பெண்ணொருவர் சாகும் வரை உணவுத் தவிர்ப்புப் போராட் 15

## ஜெனிவா உள்ளிட்ட விடயங்களை கையாள்வதற்கு தனியான குழு!

**தமிழரசின் செயற்குழுவில் வலியுறுத்தல்**

வவுனியா, பெப். 28

தனியே ஓரிருவரின் தலைமையீட்டுடன் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படாமல், ஜெனிவா உள்ளிட்ட வெளிவிவகாரங்களைக் கையாள்வதற்கு தனியான குழு அமைக்கப்பட வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் மத்திய செயற் 15

## இலங்கையை நிர்க்கதியாக இந்தியா கைவிடவேகூடாது

*கெஞ்சுகின்றார் வெளிவிவகார அமைச்சின் செயலாளர்*

கொழும்பு, பெப். 28

ஜெனிவா நெருக்கடியில் எமது அயல் நாடான இந்தியா, 'அங்குமில்லை, இங்குமில்லை' என்ற பாணியில் பங்கேற்காமைப் போக்கைப் பேணாமல், முழு ஈடுபாட்டு 15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் இ.ங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)'

Fun BLASTER இப்போது புதுப்பொழிவுடன்
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*

ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.

# ஐ.நா. அறிக்கையை நடைமுறையாக்க இலங்கை அரசு ஈடுபாடு காட்டவேண்டும்

## மு.கா.வின் தலைவர் ஹக்கீம் சுட்டிக்காட்டு



**கொழும்பு, பெப். 28**
**ஐ.நா. அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ள பொறுப்புக் கூறல், நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங் களி லும் இலங்கை அரசு ஆக்கபூர்வமான ஈடுபாட்டைக் காட்ட வேண்டும். அத்துடன் மனித உரிமை தொடர்பான விடயங்களை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசு, ஐ. நா. மனித உரிமைகள் சபையுடன் ஆக்கபூர்வமாக ஒத்து ழைத்துச் செயற்படுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.**

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான ரவூப் ஹக் கீம் தெரிவித்தார்.
இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்கத்தை அனுமதிக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தனிப்பட்ட நாடுகளில் மனித உரி மைகளைக் கடைப்பிடிப்பது தொடர் பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையை, ஒரு போதும் குறைத்து மதிப்பிடப்படக் கூடாது.
ஜனாஸா விவகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மற்றும் இலங்கை மீதான பிரேரணையைக் கொண்டு வரும் பிரதான நாடுகளின் அறிக்கை ஆகியவற்றில் உள்ளடக் கப்பட்டதே. இது இந்த விடயத்தில் தீர்வு கிடைப்பதற்கு வழிவகுத்தது.
இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்க உரிமைக்குக் குரல் கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட அனைத்து அர சியல் கட்சிகளுக்கும், சிவில் சமூக அமைப்புகளுக்கும் முஸ்லிம் காங் கிரஸ் நன்றி தெரிவித்துள்ளது.
ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ள பொறுப்புக்கூறல், நீதி மற் றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்க ளிலும் இலங்கை அரசு ஆக்கபூர்வமான ஈடுபாட்டைக் காட்ட வேண்டும், என்றார். (ஓ.22)



# பங்காளிகள் மீது பஸில் சீற்றம்!

கொழும்பு, பெப்.28
சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசுக்கு ஆதரவு வழங்கும் சில பங்காளிக் கட்சிக ளின் செயற்பாடுகள் தொடர்பில் பஸில் ராஜபக்ச கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.
அரசுக்குள் இருந்துகொண்டு எதிரணியின் பணியை எவரும் முன்னெடுக்க முடியாது எனவும், அவ்வாறா னவர்களை வெளியேற்றுவதைத் தவிர வேறு வழி யில்லை என கடும் தொனியில் விமர்சித்தார் எனவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடி கின்றது.
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுனர் பஸில் ராஜபக்சவுக்கும், அக்கட்சியின் புதுமுக நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.
இதன்போதே தேசிய சுதந்திர முன்னணியின் தலை வர் விமல் வீரவன்ச, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார உட்பட சில தலைவர்களை இலக்கு வைத்து பஸில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் எனத் தெரியவ ருகின்றது.
பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதைத் தடுப்ப தில் மேற்படி தலைவர்களே முன்னின்று செயற்பட்ட னர். இவர்களுக்கு சார்பான தேசியவாத அமைப்புக ளின் பிரதிநிதிகள் பஸில்மீது விமர்சனக் கணைக ளைத் தொடுத்து வருகின்றனர் என்பதும் குறிப்பி டத்தக்கது. (ந-44)

# நுவரெலியாவுக்கு படையெடுக்கும் சுற்றுலாவிகள்

கொழும்பு, பெப். 28
கொரோனா அச்சுறுத்தல் காரண மாக நுவரெலியா மாவட்டம் முடங்கியிருந்த நிலையில், நீண்ட இடைவெளிக்குப் பின் நுவரெலி யாவுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தர ஆரம்பித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் தொடக்கம் மூன்று நாள்கள் தொடர் விடு முறை என்பதனால், சுற்றுலா விகளின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது என்று தெரிவிக்கப்பட் டது.
இதனால் நடைபாதை வர்த்தக நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பிவருகின்றன என்று வர்த்த கர்கள் தெரிவிக்கின்றனர். (த-இ)

# இலங்கைக்கு கடனாக 50 மில்லியன் டொலர்

## அறிவித்தது பாகிஸ்தான்

கொழும்பு, பெப். 28
இலங்கைக்கு 50 மில்லியன் டொலர் கடனுதவி அளித்திருப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.
பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், இரண்டு நாள் உத்தியோகபூர்வ பய ணம் மேற்கொண்டு இலங்கை வந்து திரும்பியிருந்தார். இரண்டு நாள் பயணத்தில் பாகிஸ்தான் - இலங்கை இடையேயான உறவை வலுவாக்குவது குறித்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார் இம்ரான். சில ஒப்பந்தங்களிலும் கைச்சாத் திட்டார்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச இருவரை யும் சந்தித்து இரு நாடுகளின் உறவு குறித்து ஆலோசித்தார்.
இந்தநிலையில், தனது இரண்டா வதுநாள் பயணத்தில் இலங்கைக்கு சுமார் 50 மில்லியன் டொலர் கடனு தவி அறிவித்திருக்கிறார் இம்ரான் கான்.
இது குறித்து பாகிஸ்தான் அரசு வெளியிட்ட அறிக்கையில், "பிரதமர் இம்ரான் கான் இலங்கை அரசுக்கு சுமார் 50 மில்லியன் டொலரை கட னாக அறிவித்திருக்கிறார்.
பாதுகாப்பு, பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் உளவுத்துறை பகிர்வு தொடர்பான விஷயங்களை கையாள்வதில் ஒரு வருக்கொருவர் ஆதரவளிப்பதற் கும், ஒருங்கிணைப்பதற்கும் வலு வான உறவு தேவை என்பதை இரு தரப்பு அரசுகளும் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளன" என்று குறிப் பிடப்பட்டுள்ளது. (த-இ)

# வாகனங்களுக்கு கடன்; 80 வீதமாக அதிகரிக்க மத்திய வங்கி முடிவு

கொழும்பு, பெப். 28
பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்படும் நிதிக் கடன் வசதியை வாகனத்தின் மதிப்பில் 80 சதவீதமாக அதிகரிக்க மத்திய வங்கி முடிவு செய்துள் ளது. சம்பந்தப்பட்ட உத்தரவு கடந்த 17ஆம் திகதி மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி லட்சுமனின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள் ளது. அதன்படி, நாட்டில் முதல் பதிவுக்குப் பிறகு ஒரு வருடத்துக்கும் மேலாக பயன்படுத்தப்பட்ட வாகனங் கள் அவற்றின் மதிப்பில் 80 சதவீதம்வரை நிதிக் கடன் வசதிகளைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (ப)

# இரவில் காணாமல்போன இளைஞர் தேடுதலில்

கொழும்பு, பெப். 28
பதுளை நாராங்கல மலைத் தொட ரில் நண்பர்கள் 6 பேருடன் இர வில் கூடாரம் அமைத்து, தங்கியி ருந்தவர்களில் இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்துள் ளனர்.
அவிசாவளையைச் சேர்ந்த அந்த நபர், இரவு 9.30 மணியள வில் மலசலகூடத்துக்குச் சென்று வருகிறேன் எனக் கூறி சென்றி ருந்தார். பின்னர் அவர் திரும்ப வர வில்லை என்று தெரிவிக்கப்பட் டது. (த-இ)

# நாய்க்கு சுட்ட 'தோட்டா' முதியவர் மீதும் பாய்ந்தது

## களுத்துறையில் சம்பவம்

கொழும்பு, பெப். 28
தெற்கு களுத்துறை பொலிஸ் நிலைய அதிகாரியொருவரால் ரேபிஸ் நோய் கொண்ட நாய் ஒன்றின்மீது மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் போது, அதன் அருகில் இருந்த நபரொ ருவர் காயம டைந்துள்ளார்.
அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 10க்கும் அதிகமானோரை குறித்த நாய் கடித்துள்ளது என பொலிஸாருக்கு முறைப்பாடொன்று கிடைக்கப் பெற் றுள்ளது. அதன்படி, நேற்றுக் காலை ரேபிஸ் நோய்த் தொற்றுக் கொண்ட குறித்த நாய் தெற்கு களுத்துறை, வெட் டுமடட பிரதேசத்தில் உள்ளது என்று கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய பொலிஸார் உடனடியாக குறித்த பிரதே சத்துக்கு விரைந்துள்ளனர். இதன்போது, உபபொலிஸ் பரிசோதகரால் மேற்கொள் ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோ கத்தில் அந்த நாய் அவ்விடத்திலேயே உயிரி ழந்துள்ளது. அத்தோடு அங்கிருந்த நபரொருவர் மீதும் துப்பாக்கிச் சூடு தவ றுதலாகப்பட்டது என்று தெரி விக்கப்ப டுகிறது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கா கிய நபர் களுத்துறை மாவட்ட மருத் துவமனையில் சேர்க்கப்பட்டார். (ப)

# மலக்கழிவு மீள் சுழற்சித் திட்டம் தொடர்பில் லஞ்ச ஊழல் விசாரணை!

யாழ்ப்பாணம், பெப். 28

**யாழ்ப்பாணத்தில் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டமொன்று தொடர்பில் விசாரணைக்கு வருமாறு லஞ்ச ஊழல் ஆணைக் குழு யாழ். மாவட்டச் செயலகத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளது.**

சுன்னாகம் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மலக்கழிவு மீள் சுழற்சி வேலைத்திட்டம் தொடர்பிலேயே லஞ்ச ஊழல் ஆணைக் குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

மேற்படி திட்டத்தில் நிதி மோசடி இடம் பெற்றுள்ளது எனக் குறிப் பிட்டு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் புலன் விசாரணைப் பிரிவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த விசாரணை முடியும்வரை யில் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் செயலர் நா.வேதநாயகனின் ஓய்வூதியக் கொடுப்பனவும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. திட்டத்தில் மோசடி இடம் பெறவில்லை என்று புலன் விசாரணை முடிவில் கூறப்பட்டது.

அதேவேளை பொதுக் கணக்காய்வுக் குழுவுக்கும் இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டது. மோசடி இடம்பெறவில்லை எனத் தெரிவித்து திட்டத்தை தொடர அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு மேற்படி விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக விசாரணை கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. விசாரணைக்கு சமூகமளிக்குமாறே யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மோசடி இடம்பெறவில்லை என்று கூறப்பட்ட திட்டம் தொடர்பில் அரசியல் காழ்ப்புணர்வின் காரணமாகவே இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது என அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

# எம்.சி.சி. விடயம் பற்றி இல்லாததால் தாக்குதல் அறிக்கை முழுமையற்றது

*அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிக்கிறார்*



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றதாகும். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சதி மற்றும் எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான முயற்சி உள்ளிட்ட காரணிகளும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தாக்கம் செலுத்துகின்றனவா என்பது தொடர்பான எந்தவொரு விடயமும் குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்படாமையினாலேயே இதனை முழுமையற்ற அறிக்கையாகக் கருதுகின்றேன் என்று நீர்வழுங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றதாகும். அதில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டிய பிரதான காரணி தொடர்பில் எதுவும் உள்ளடக்கப்படவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் எதிர்பார்க்கப்பட்ட பிறிதொரு விடயம் என்ன என்பதே இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய பிரதான காரணியாகும். அதாவது எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக, நடைபெறவிருந்த தேர்தலை நோக்காகக்கொண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் பிறிதொரு சிவில் கலவரத்தை உண்டாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தனவா என்பது தொடர்பில் ஆராயப்பட்டிருக்க வேண்டும். சஹ்ரான் மற்றும் அவர் சார்ந்தவர்களுக்கு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்வது மாத்திரமே இலக்காகக் காணப்பட்டது. ஆனால் அந்தத் தாக்குதலுடன் நாட்டிலுள்ள கத்தோலிக்க, சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் கலவரத்தை ஏற்படுத்தி அடுத்து என்ன நடக்கும் என்பதை சஹ்ரான் அறிந்திருக்க வாய்ப்பில்லை - என்றார். (த-இ)

# புலிகளின் உரிமை மீறல்களையும் கவனத்தில் எடுத்திருந்தது ஐ.நா.

## கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் வேட்பாளராகவிருந்த அம்பிகா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 28

விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்கொண்ட மனித உரிமை மீறல்களை ஐ.நாவும், மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற அமைப்புகளும் பதிவு செய்திருந்தன எனத் தெரிவித்திருக்கும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர்களில் ஒருவரான அம்பிகா சற்குணநாதன், அவற்றை ஐ.நா.வும் அல்லது மனித உரிமை அமைப்புகளும் மறுக்கவோ கருத்தில் எடுக்காமல் விடவோ இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அவ்வாறான சம்பவங்கள் குறித்த பட்டியல் ஒன்றையும் அவர் தனது ருவிற்றர் தளத்தில் தொடராக வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் ஐ.நா. சிறுவர் நிதியம் (யுனிசெப்) போன்ற அமைப்புகளின் அறிக்கைகளை மேற்கோள் காட்டி அவர் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் போர் வலயத்திலிருந்து தப்பியோட முற்படுகின்ற பொதுமக்களை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்திக் கொல்லும் முறைமையை புலிகள் தொடங்கியமையை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு 2011 ஆம் ஆண்டிலேயே பதிவு செய்திருந்தது.

புலிகளின் இந்த நடவடிக்கை இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களின் தொகை கணிசமாக அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

இரக்கமற்ற இராணுவ அமைப்பான புலிகள் இயக்கம் சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றியதுடன், அரசியல் படுகொலைகளை நிகழ்த்தியும் இராணுவ மற்றும் பொதுமக்களின் இலக்குகளையும் தாக்கியுள்ளது.

மட்டக்களப்பில் தம்மிடம் சரணடைந்த நூற்றுக்கணக்கான பொலிஸாரை படுகொலை செய்தமை அவ்வாறான அட்டூழியங்களில் ஒன்றாகும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியமை தொடர்பான கடுமையான குற்றச்சாட்டுக்கள் புலிகள் இயக்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளன.

மிரட்டிக் கப்பம் பெறுதல், படுகொலைகள் மற்றும் சிறுவர்களைத் தமது இயக்கத்தில் சேர்த்தல் போன்ற 3ஆயிரத்து 800 க்கும் மேற்பட்ட புலிகள் இயக்கத்தின் போர் நிறுத்த மீறல்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பதிவு செய்துள்ளது.

இலங்கை அரசு 350 போர் நிறுத்த மீறல்களே செய்துள்ளன என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடத்தல்களும் பலவந்த ஆள்சேர்ப்பும் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டன. வீடுகள், கோவில்கள், பாடசாலைகள், தேவாலயங்கள், வேலைத்தளங்கள் மற்றும் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் இவ்வாறாகக் கடத்தப்பட்டு ஆள்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்கள்.

அவ்வாறான ஒரு மோசமான சம்பவமாக 2009 மார்ச் மாதத்தில் வலைஞர் மடம் புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து நூற்றுக்கணக்கான சிறுவர்களும், இளைஞர்களும் பலவந்தமாகக் கடத்தப்பட்டு ஆள்சேர்ப்புக்குள்ளாக்கப்பட்டனர் என்ற விடயமும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

2,689 சிறுமிகள் உட்பட 6ஆயிரத்து 905 சிறுவர்கள் புலிகளின் பலவந்த ஆள்சேர்ப்புக்கு உட்பட்டார்கள் என யுனிசெப் பதிவு செய்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

அம்பிகா சற்குருநாதன், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியலில் முதலாவது வேட்பாளராக பெயரிடப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

# நீரில் மூழ்கி சிறுவன் சாவு

கொழும்பு, பெப். 28

தியலும நீர்வீழ்ச்சியில் மூழ்கி 9 வயதுச் சிறுவன் உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை நீர்வீழ்ச்சியில் குளிக்கும்போது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று கொஸ்லாந்தை பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)

# வடக்கிலிருந்து இந்தியாவுக்கான தங்கக் கடத்தலை தடுக்கவேண்டும்

*வர்த்தகர்களுடனான சந்திப்பில் கப்ரால் வலியுறுத்து*

கொழும்பு, பெப்.28

வடக்கு மாகாணத்திலிருந்து தங்கம் கடத்தலைத் தடுக்க தங்கம் மீதான வரியை இந்தியா போன்று பராமரிக்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர், அஜித் நிவாட் ஹப்ரால் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த அவர், யாழ்ப்பாண வணிகர்களுடன் நடத்திய சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் இறக்குமதியை இடைநிறுத்தாது விட்டால் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 300 ரூபாவாக வீழ்ச்சி கண்டிருக்கும். ரூபாவின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சியடைந்திருந்தால் நாட்டில் பெரும்பாலான இறக்குமதியாளர்கள் இறக்குமதியைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். வடக்கு மாகாணத்திலிருந்து தங்கக் கடத்தலைத் தடுக்க தங்கம் மீதான வரியை இந்தியா போன்று பராமரிக்கவேண்டும் - என்றார். (ப-319)

# 10 ஆயிரம் வடக்கு மீனவருடன் இந்தியா செல்வாராம் டக்ளஸ்

கொழும்பு, பெப்.28

இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால், வடக்கில் இருந்து 10 ஆயிரம் மீனவர்களுடன் இந்தியாவுக்கு படகில் சென்று அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யோசித்துக் கொண்டிருக்கின்றேன் என்று கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு நிறுத்தப்படும். தீர்வு என்று எதுவும் இல்லா விட்டாலும், இந்திய மீனவர்களின் வருகை நிரந்தரமாகக் காணப்படுகின்றது. இதனைத் தீர்த்துத் தராவிட்டால் ஆர்ப்பாட்டம், தொழில்முடக்கம் மற்றும் அமைச்சரின் வடமாகாண நடமாட்டம் என்பதை முடக்குவோம் என்று மீனவர்கள் கூறியுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால், இங்கிருந்து கதைப்பதைவிட 10 ஆயிரம் வடமாகாண கடற்றொழிலாளர்களுடன் இந்தியாவுக்கு படகில் சென்று அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யோசித்துக்கொண்டிருக்கின்றேன் என்றார். (ஐ-19)

## இன்றைய நாள்

**மேடம்**: தடைக்கல்லாக இருந்த விஷயங்கள் இனி படிக்கல்லாய் மாறும். சலிப்பான தருணங்களை மகிழ்ச்சி தரக்கூடியதாக மாற்றுவீர்கள். முடிவடையாத பிரச்சினைகள் முடியும்.

**இடபம்**: வீண் பழிகள் ஏற்படுத்தும் சூழலுக்குள் செல்லவேண்டாம். ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகப் பேசுவதால் தப்புவீர்கள். பெரியோர் ஆசி கிடைக்கும்.

**மிதுனம்**:பெற்றோருக்கு விருப்பமான செயல் ஒன்றைச் செய்வீர்கள். உங்களிடம் முன்பு கைமாற்று வாங்கியவர் திருப்பித் தருவார். கவனக்குறைவு அறவே வேண்டாம். தர்மம் செய்வீர்கள்.

**கடகம்**: திடீர் செலவுகளைச் சமாளிப்பீர்கள். நண்பர் சந்திப்பு உண்டு. புதிய முயற்சி எடுக்கும் ஒருவருக்கு நன்கு ஆதரவு காண்பிப்பீர்கள். பாராட்டு பெறுவீர்கள்.

**சிம்மம்**: திறமை அதிகரிப்பதால் மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். பணிபுரியும் பெண்கள் மகிழ்வீர்கள். பகைவர் மாறுவர். மனக்குழப்பம் அகலும்.

**கன்னி**: பணியிடத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும். நலம் கூடும். தகுந்த ஓய்வெடுத்து உடல் நலத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள். மனம் மகிழும். பிள்ளைகளால் ஏற்பட்ட மனஅழுத்தம் தீரும்.

**துலாம்**: பணியிடத்தில் பல காலம் கழித்து பாராட்டைப் பெறுவீர்கள். கூடுதல் பணவரவால் பொருளாதாரம் உயரும். நிறைய உழைப்பீர்கள். வெற்றி வாய்ப்புக் கூடும்.

**விருச்சிகம்**: பிறர் நலனுக்காக பாடுபட்டாலும் நற்பெயர் இப்போதைக்கு இல்லை. வீண் பழி வராதவாறு நடந்து கொள்வீர்கள். பல காலம் மனதுக்குள் இருந்த கனவு நனவாக ஆரம்பிக்கும்.

**தனுசு**: அநாவசிய செய்திகளை யாரிடமும் சொல்ல வேண்டாம். வம்புகளில் ஈடுபடாமல் கவனமாகத் தப்பிக்க வேண்டிய நாள். பணியில் அக்கறை தேவை. பிறர் விஷயத்தில் தலையிடாதீர்கள்.

**மகரம்**: எதிர்பார்த்த செய்திகள் சற்றுத் தாமதமாகவே வந்து சேரும். அதிர்ஷ்டம் வரும்போது அதைப் புரிந்துகொண்டு வரவேற்கவும். உங்கள் மேல் பாசம் காட்டுபவர்களை புரிந்து கொள்வீர்கள்.

**கும்பம்**: உறவினர் வேண்டாம் என்று ஒதுக்கி அவர்களை புண்படுத்தாதீர்கள். பெரியவர்களுக்குத் தரவேண்டிய மரியாதையைக் குறைக்காதீர்கள்.

**மீனம்**: பழி தரும் செயல்களைச் செய்யாமல் காத்துக் கொள்வீர்கள். வைராக்கியத்தோடு செயற்பட்டு சிரமத்திலிருந்து மீள்வீர்கள். வீடு வாங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். உழைப்புக் கூடும்.

# ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான அனுமதியை எவரும் உரிமை கோராதீர்!

## மஹ்ரூப் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, பெப். 28**

**20க்கு ஆதரவாக வாக்களித்தோர், ஜனாஸாக்களை அடக்கம் செய்ய கிடைத்த அனுமதிக்கு உரிமை கோர முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரி வித்துள்ளார்.**

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளித்த வர்த்தமானி அறிவித்தல் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் தகனம் செய்யப்பட்ட விடயத்தில் முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமை மீறலுக்கான தீர்வானது, பல போராட்டங்களின் பின் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு மத்தியில் கிடைத்துள்ளது. அதுவும் 350 ஜனாஸாக்கள் பலவந்தமாக எரிக்கப்பட்ட பின்னர்தான் கிடைத்துள்ளது.

எனவே 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளித்தவர்கள் உள்ளிட்ட எவரும் இதற்கு தனிப்பட்ட ரீதியில் உரிமை கோர முடியாது.

காரணம் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த அடுத்த தினமே இதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. தற்போதைய அரசு இனவாதத்தை கையிலெடுத்து ஆட்சியைக் கைப்பற்றியது. ஆட்சியைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும் அவர்களுக்கு இனவாதமே தேவைப்பட்டது. கடந்த வியாழக்கிழமை வரை இதற்காக இவர்களுக்கு ஜனாஸா தகனம் தேவைப்பட்டது. தற்போது அந்தத் தீர்மானம் மாற்றப்பட்டுள்ளதால் தற்போது முகம் மூடுதல் தடை , மதரஸாக்கள் தடை எனக் கூறி இதன் அடுத்த பாகத்தை ஆரம்பித்துள்ளார்கள். இவற்றுக்கு முகங்கொடுக்கவும் நாம் தயாராகவேண்டும். - என்றார். (த-இ)

கொழும்பு, கம்பஹாவில்

# தடுப்பூசி பெற்றுக்கொள்ள மக்கள் முன்வாருங்கள்

கொழும்பு, பெப். 28

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் கொரோனா அச்சுறுத்தல் அதிகமுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 30 வயதுடைய மற்றும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச தகவல் திணைக்களம் நேற்று முன்தினம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில், தடுப்பூசி செலுத்தும் பணிகளுக்காக அதி அச்சுறுத்தல் மிக்க கிராம அலுவலர் பிரிவுகளை அடையாளம் காணுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள், கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவ அதிகாரி ஆகியோருக்கு இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி செலுத்தும் பணிகளுக்காக அடையாளம் காணப்படும் கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 30 வயதுடைய மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்துப் பொது மக்களும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்படும் கிராம அலுவலர் பிரிவுகளில், குறித்த வயதெல்லையில் நிரந்தரமாக மற்றும் தற்காலிகமாக வசிப்பவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்குமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆலோசனை வழங்கியுள்ளார் - என்று செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

# முன்னாள் ஆளுநரின் மகன்மீது முரட்டுத்தனமான தாக்குதல்!!!

## 4 பொலிஸார் பணி இடை நிறுத்தம்

கொழும்பு, பெப்.28

பேலியகொட பொலிஸ் நிலையத்தினுள், சட்டத்துறை மாணவன் மிகார குணரத்ன மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் பிரதான பொலிஸ் பரிசோதகர், மற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளனர் என்று பேலியகொட பொலிஸ் நிலையப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெளிவுபடுத்தி அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளுக்கு அமையவே இந்தப் பணி இடை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஆளுநர் மைத்திரி குணரத்னவின் மகன் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# 4 மணித்தியாலங்களில் 3,871 பேர் கைது

கொழும்பு, பெப். 28

4 மணித்தியால கால இடைவெளியில் நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 3 ஆயிரத்து 871 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய கடந்த 25 ஆம் திகதி மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையான காலப்பகுதியில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இதன்போது, பிடியாணை பிறப்பிக்கப் பட்ட ஆயிரத்து 430 பேரும், பல்வேறு குற்றங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த 562 பேரும், போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட ஆயிரத்து 108 பேரும் துப்பாக்கியுடன் 16 பேரும் வெவ்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் 755 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சந்திப்புகளும் சமாளிப்பும்

ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்வு, இலங்கையில் பல சித்துவேலைகளைக் காட்டத் தொடங்கியிருக்கிறது. இதுவரை எல்லாவற்றுக்கும் இறுமாப்போடு பதில் சொல்லிக் கொண்டிருந்த ஆட்சியாளர்களின் தொனி, இப்போது கீழிறங்கத் தொடங்கியுள்ளது. அதன் விளைவுகளில் ஒன்றே, கொரோனாவால் உயிரிழந்தோரின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்கும் வர்த்தமானி அறிவிப்பு.

கடந்த பல மாதங்களாக ஜனஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள், முஸ்லிம் அரசியல் தலைமைகள், மனித உரிமைகள் அமைப்புக்கள், ஐ.நா. சபை உறுப்பினர்கள், உலக சுகாதார ஸ்தாபனம் என அனைத்துத் தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர். அவற்றையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் வருகைக்கு மறுநாள் ஜனாஸா புதைப்பதற்கு அனுமதி அளித்தமைக்கான காரணம் இம்ரான்கானின் வேண்டுகோளுக்கு மறுத்துப் பேச முடியாத பலவீனமா? இந்த நாட்டின் சிறுபான்மை இஸ்லாமிய மக்களின் பெரியோர்கள், அறிஞர்கள், தலைவர்கள் என அனைவரையும் விட பாகிஸ்தான் பிரதமர் எந்த வகையில் தனித்துவ ஆளுமை கொண்டவர் என அரசு நினைக்கிறது?

ஒன்றுமில்லை, போர்க் காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என அனைத்துக்கும் ஏதோ ஒரு வகையில் இலங்கைக்கு ஆயுத மற்றும் இராணுவ ரீதியில் உதவி செய்த, மனிதநேயம் மறந்த பல நாடுகளில் பாகிஸ்தானுக்கு முதன்மை இடமுண்டு. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் இலங்கை மீது சுமத்தப்படும் குற்றங்களில் பாகிஸ்தானும் ஒரு பங்காளியென்பது இரகசியமான விடயமல்ல. எனவே இப்படி ஒரு தடை நீக்கப் பரிசை வழங்கி தன் நட்பு நாட்டுக்கு 'ஐஸ்' வைத்திருக்கிறது இலங்கை.

ஜனாஸா விவகாரத்தில் முஸ்லிம் மக்களிடம் சரணாகதியடைய வேறு எந்தக் காரணியும் அரசுக்குக் கிடையாது. தமிழினத்தை அழிக்க உதவியமைக்கு கைமாறாகவே ஜனாஸா புதைப்புக்கு வழங்கப்பட்ட அனுமதியைக் கூற முடியும். ஜனாஸா புதைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகூட நிபந்தனைகளுக்குட்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்க. ஒரே கல்லில் இரு மாங்காய்களை விழுத்தும் இலங்கையின் தந்திரோபாயமே இது. ஐ.நா.வில் மனித உரிமைப் பேரவை அமர்வில் இஸ்லாமிய நாடுகளை வாயடைக்கச் செய்யும் வியூகமும் இதனுள் அடங்குகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு செய்தியும் வெளிவந்திருக்கிறது. ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் சந்திப்பொன்றை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளாராம்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ச்சியாக எழுப்பிவரும் நீதிக்கான குரலையும், நியாயமான போராட்டங்களையும் கண்டுகொள்ளாதிருந்தவர் இதே ஜனாதிபதிதான். மாறாக அவர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த "காணாமல் போனவர்கள் எனச் சொல்லப்படும் எவரும் இங்கில்லை. அவர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடி புலம்பெயர் நாடுகளில் சொகுசாக இருக்கக்கூடும்" என விட்டேத்தியாக, எந்தவித ஈவு இரக்கமுமின்றி சொன்னவரும் இதே ஜனாதிபதிதான்.

இப்போது திடீரென கனவு கண்டவர் போல, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்திக்க கோத்தாபய விரும்புகிறாராம். அவர்களைச் சந்தித்து என்ன சொல்லப் போகிறார்? "உங்கள் உறவுகளை வெளிநாடுகளில் போய் தேடுங்கள்" என்றா, அல்லது "அவர்கள் போரில் கொல்லப்பட்டு விட்டார்கள்" என்றா?

இதுநாள்வரை இல்லாத அக்கறைக்கு காரணமும், மனித உரிமைகள் பேரவை அமர்வை சமாளிக்க முனையும் மற்றொரு தந்திரோபாய வியூகமே இதுவாகும்.

இவையெல்லாம் சமாளிப்புகளுக்கான சந்திப்புகளேயாகும். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் உறுதியை குலைக்க வைக்கும் யுக்தியும் கூட. இந்நிலையின் ஔவையாரின் பாடல் ஒன்று நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாததாகின்றது.

*"நாக்கு நுனிக்கண் நறுந்தேனும் நெஞ்சகத்து*
*நீக்கரிய நஞ்சும் நிலைபெற்ற தீக்குணத்தோர்*
*இன்சொல் உரைக்கின்றார் என்றவரை நம்பாதீர்*
*என் சொலினும் செய்வார் இடர்"*




நன்றி - அவந்த ஆட்டிகல

# ஓய்வூதிய கால வாய்ப்புகளால் இலங்கைக்கு எதிராக பரப்புரை!

## சர்வதேச பிரதிநிதிகளை சாடுகின்றது சிங்கள ஊடகம்

**கொழும்பு, பெப். 28**

**நாடு கடந்த தமிழீழ அரசுக்குச் சார்பானவர்கள் என்று, சர்வதேச பிரதிநிதிகள் சிலரைக் குற்றம்சாட்டியுள்ள சிங்கள ஊடகம் ஒன்று, அந்தப் பிரதிநிதிகள் தமது ஓய்வூதிய காலத்தில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டு இலங்கை அரசுக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர் என்று தனது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளது.**

அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் ரம்சி கிளாக், போர்க் குற்ற விவகா ரங்களுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஸ்ரீபன் ராப், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மற்றும் ஐ.நாவின் முன்னாள் வல்லுநர் ஜஸ்மின் இலங்கையை ஆகியோரை இலக்குவைத்து குறித்த ஊடகம் தனது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளது. குறிப்பாக, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்று ஐ.நாவின் முன்னாள் ஆணையாளர்கள், சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் வல்லுநர்கள் என பலர் வெளியிட்ட கூட்டு அறிக்கைக்கு பின்னராக இவ்வாறான கோபம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசுடன் இவர்களது உறவுகளுக்கான ஆதாரங்களையும் ஊடகப்பதிவுகளையும் குறிப்பிட்டு, இலங்கை அரசு மீதான இவர்களது குற்றச்சாட்டுக்கள் போலியானவை என்றும், இவர்களின் நிலைப்பாடு ஒரு பக்கச் சார்பானது எனவும் இந்த ஊடகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

(கு-இ)

# பிரிட்டனுக்கு ஒரு நீதி இலங்கைக்கு வேறா?

## கேட்கின்றார் தொலவத்த எம்.பி.

கொழும்பு, பெப். 28

தனது நாட்டு இராணுவத்தினரை எந்தவொரு போர்க் குற்ற நீதிமன்றத்திலும் நிறுத்தப் போவதில்லை என்று தெரிவிக்கும் பிரிட்டன், எமது நாட்டு இராணுவத்தினர் குறித்து, ஏன் சிந்திப்பதில்லை என்று கேள்வியெழுப்பியுள்ளார், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி தொலவத்த. இந்த விடயத்தில் பிரிட்டன் இரட்டை மனநிலையுடன் செயற்படுவது ஏன் என்று தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு முன்பாக கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற அமைதிப் பேரணியில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் தொடர்பான தகவல்கள் அவர்களுக்குத் தெரியாதெனக் கூறமுடியாது. அனைத்து விடயங்களும் தெரிந்தும், தமது இலாபத்துக்காகச் செயற்படுவதாகவே எமக்குத் தோன்றுகின்றது. அவர்கள், இலங்கையில் இடம்பெற்றதை போர் என்று கூறாது, இனப்பிரச்சினைக்கான போராட்டம் என்றே அடையாளப்படுத்துகின்றனர்.

30 வருடங்களாக இடம்பெற்ற போர், இனப்பிரச்சினைக்கான, போராட்டம் என்றால் கொழும்பில் எம்முடன் ஒன்றாக அந்தக் காலப்பகுதிகளில் தமிழ் மாணவர்கள் படித்தனரே, அப்படியாயின், அது இனவாதப் போராட்டமாக எப்படி அமையும்? என்றார்.

(கு-இ)

# யாழ்ப்பாணம் – காரைநகர் வீதியை விரைந்து அபிவிருத்தி செய்யுங்கள்

## யாழ். வந்த அமைச்சரிடம் பேராசிரியர் எடுத்துரைப்பு

**யாழ்ப்பாணம், பெப்.28**

**அதிக மக்கள் பயன்படுத்தும், யாழ்ப்பாணம், மானிப்பாய் காரைநகர் வீதியை விரைந்து அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தருமான பாலசுந்தரம்பிள்ளை, அமைச்சர் அஜித் நிவாட் ஹப்ராலிடம் வலியுறுத்தியுள்ளார்.**

நிதி மூலதன, சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறு சீரமைப்பு அமைச்சின் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் ஹப்ரால் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்தார். அவர் கல்வியியலாளர்களுடன் மேற்கொண்ட சந்திப்பின் போதே பேராசிரியர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இம்முறை வெசாக் தினமானது யாழ்ப்பாணத்தில் நயினாதீவிலுள்ள நாக விகாரையில் கொண்டாடப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் யாழிலிருந்து குறிகாட்டுவான் வரையான வீதி, பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது. நீண்ட காலமாகக் குறித்த வீதியை சுற்றுலாப் பயணிகளும் தென்னிலங்கை மக்களும் பயன்படுத்தும் நிலையில் வீதியானது இது வரை சீர்செய்யப்படாத நிலை காணப்படுகின்றது. அதேபோல் அதிகமாக மக்கள் பயன்படுத்தும் காரைநகர் - யாழ்ப்பாணம் வீதியும் சீரமைக்கப்படாமை மிகவும் வருத்தம் அளிக்கின்றது. எனவே அந்த வீதியை விரைந்து சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற உற்பத்திப் பொருள்களுக்கு தரமான விலையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். வடக்கு மாகாணத்தில் உள்ள ஆட்டிறைச்சியைப் போல இலங்கையில் எந்தப் பாகத்திலும் சுவையான ஆட்டிறைச்சி இல்லை. எனவே வடக்கு மாகாணத்தில் ஆடு வளர்ப்பு தொடர்பில் அரசு அதிக அக்கறை செலுத்துதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ப-319)


# அடகு வைத்து மீட்டெடுக்க இயலாது போன

## உங்களது தங்க நகைகள் மீண்டும் உங்களது கைகளுக்கு

F.A.Ads

நீங்கள் தற்பொழுது அடகு வைத்திருக்கும் ரசீதினை எமது 0777 947120 என்ற இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 071 1695101 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 071 0870633 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாளைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |


தேர்தல்...

லும் நடைபெற்றது. இதன்போது 10 கட்சிகள் கூட்டு மற்றும் தமிழ்த் தேசியப் பேரவை உருவாக்கம் தொடர்பில் நீண்ட ஆராய்வுகள் நடைபெற்றன.


தமிழரசுக் கட்சியின் மூத்த மற்றும் இளைய உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியின் பாரம்பரியம் மற்றும் தனித்துவம் அழிந்து விடக்கூடாது என்பதை முன்னிலைப்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்தினர். விசேடமாக நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழரசுக் கட்சியே அவ்விதமான செயற்பாடுகளுக்கு தலைமை வகிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அடையாளத்துடன் தற்போது செயற்பட்டு வருகையில் அதற்கு வெளியே பிறிதொரு பெயர்ப்பலகையின் கீழான செயற்பாடுகள் அவசியமில்லை என்றும் சக உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இதையடுத்து தமிழ்த் தேசியப் பேரவை் உட்பட எந்தவொரு கூட்டணியின் அடையாளங்களிலும் தமிழரசுக் கட்சி இணைவதில்லை என்றும், தேர்தல் கூட்டுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வெளியே பங்கேற்பதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி தற்போதைய அரசின் செயற்பாடுகளுக்கு முகங்கொடுப்ப தற்கும் தமிழ் மக்களின் பொதுவான விடயங்களுக்கும் தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள அரசியல் கட்சிகளிடையே ஐக்கியம் முக்கியம் என்பதில் தமிழரசுக் கட்சி உறுதியாக இருப்பதோடு, அவ்விதமான ஐக்கியமான செயற்பாடுகள் அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப கட்சி கூடி ஆராய்ந்து பிரதிபலிக்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய கட்சிகளே தற்போது வெளியில் பிறிதொரு அணியை உருவாக்க முயற்சிக்கின்றன என்றும், அந்தக் கட்சிகள் மீண்டும் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட விரும்பினால் அதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்கலாம் என்றும் சில உறுப்பினர்கள் பிரஸ்தாபித்தனர். (ம-22,110)



# நடவடிக்கை இல்லையேல் புவி வெப்பம் அதிகரிக்கும்

கொழும்பு, பெப். 28

உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், அடுத்த சில ஆண்டுகளில் புவி வெப்பமடைதல் மேலும் 1.5 டிகிரி செல்சியஸ் உயரும் என்று சர்வதேச அமைப்பு ஒன்று நடத்திய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையை உலகம் எதிர்கொண்டால், அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே, உலக வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உலகெங்கிலும் உள்ள நாடுகள் இனிமேல் தயாராக இருக்க வேண்டும் என்று ஆய்வு வலியுறுத்துகின்றது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ், புவி வெப்பமடைதல் குறித்த இந்த எச்சரிக்கை உலகுக்கு ஒரு பொது சிவப்பு எச்சரிக்கை என்றும் புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த உலகெங்கிலும் உள்ள நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (த-இ)



உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு திருகோணமலை நகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் சுகாதார மருத்துவ அதிகாரி எஸ். சயனெலி பவன் தலைமையில் இடம்பெற்றது. (ய-40)

# ஜி.பி.சி.எல். இறுதியாட்டம் இன்று றோயல்ஸ், பிரோன்கோஸ் மோதல்

யாழ்ப்பாணம், பெப். 28

ஞானம்ஸ் பெயின்ற் நிறுவனத்தால் நடத்தப்படும் ஜி.பி.சி.எல். கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஜப்னா றோயல்ஸ், நல்லூர் பிரோன்கோஸ் அணிகள் இன்று மோதவுள்ளன.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று நண்பகல் 12.30 மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது. இந்த இரு அணிகளும் பிளேஓவ் சுற்றில் சந்தித்தன.

அதில் நல்லூர் பிரோன்கோஸ் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது வாய்ப்பைப் பயன்படுத்திய றோயல்ஸ் அணி வடமராட்சி வேங்கைகளை வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-320)

## கண்ணீர் அஞ்சலி

எமது துறைத் தலைவர் திரு. சோ. சுதாகரது
பாசமிகு தாயார்

**திருமதி பங்கஜதேவி சோமாஸ்கந்தன்**

அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும்
அவருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கணினி விஞ்ஞானத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## இணுவில் அறிவாலய பாராட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், பெப். 28

இணுவில் அறிவாலயத்தின் சார்பில் கல்வியாளர்கள் மற்றும் சேவையாளர்களுக்கு கௌரவிப்பும், பாராட்டு விழாவும் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இணுவில் அறிவாலய மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இணுவில் கந்தன் அறக்கட்டளை நிலையத்தின் தலைவர் இ.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

## வில்லடிப்பாட்டு நூல் வெளியீடு

மட்டக்களப்பு, பெப்.28

ஆரையூர் அருள் எழுதிய வில்லடிப் பாட்டு நூல் வெளியீட்டு நிகழ்வு கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் ஆரையூர் அருள் முனைக்காடு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.ப.மானகப்போடிக்கு வழங்கி வைத்தார். தொடர்ந்து வெளியீட்டுரையை இ.குகநாதன், நூல் நயவுரையை சிரேஷ்ட விரிவுரையாளர் மோகனதாசன் ஆகியோர் நிகழ்த்தினர். (வ-இ)

**வேலையாட்கள் தேவை**

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள சாப்பாட்டுக் கடை ஒன்றிற்கு சமையல் தெரிந்தவர்கள் தேவை.(கடையை நடத்தத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது) அத்துடன் 3 கடைகள் வாடகைக்கு விடப்படும். T.P:077 330 7073

## மரண அறிவித்தல்

**திரு.சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன்**

(பாதுகாப்பு உத்தியோகத்தர், தொழிற்பயிற்சி நிலையம், காரைநகர்)



பிறப்பு 26.06.1955 — இறப்பு 26.02.2021

யாழ்ப்பாணம் மண்டைதீவு 5ம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் சுழிபுரம் வடக்கு செட்டிகுறிச்சியினை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன் அவர்கள் 26.02.2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தேம்பாமலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகநாதன் இராஜலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜவதனாவின் அன்புக் கணவரும், இரஞ்சிதமலர் மற்றும் காலஞ்சென்ற சத்தியபாமா, கோகிலவாசன், இந்திரவாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோதிலிங்கம், றதிறட்னா, கிரிதரன், இராஜசுசீனா ஆகியோரின் அன்பு மைத்துனரும், டசீகரன், கார்த்திகா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், துஷாந்தினியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சுழிபுரம் வடக்கு செட்டிகுறிச்சியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 330 6064 (மனைவி)

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 10 . 1936 — மறைவு 27 . 02 . 2021

**மாணிக்கர் நாகையா**

இணுவில் வட்டுவினியை பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு பத்தானை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கர் - நாகையா அவர்கள் நேற்று (27.02.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கர் - ஆச்சியம்மா ஆகியோரின் அன்பு மகனும், இராசையா சோதிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும், செந்தூர்ச் செல்வன் (அமரர்) மற்றும் பன்னீர்ச் செல்வி (யா/ஆனைக் கோட்டை உயரப்புலம் குணபால வித்தியாலயம்), தாமரைச்செல்வி (பிரான்ஸ்), மயூரச்செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஈஸ்வரி, சந்திரரூபன், சிவலோகநாதன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரிமளம், வீரமுத்து, சிவஞானம் மற்றும் விசாலாட்சி, அன்னப்பிள்ளை மற்றும் காலஞ்சென்ற சொர்ணலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அக்ஷயன், அக்ஷிகா, கதிர்குழலி, எழினி ஆகியோரின் பாசமிகு பேரனும் செல்வராணி, செல்வநாயகி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை தாவடியில் உள்ள அவரது இல்லத்தில் பகல் 1.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

இணுவில், தாவடி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 881 2329
021 205 2618

## மரண அறிவித்தல்



**அப்பாபிள்ளை நடராசா**

(ஓய்வுபெற்ற ஓவசியர்)

இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் தெகிவளை, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாபிள்ளை நடராசா (ஓய்வுபெற்ற ஓவசியர்) அவர்கள் நேற்று (27.02.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாபிள்ளை சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நரசிங்கம் ராசம்மா தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், மஞ்சுளா (கனடா), சுரேஷ்குமார் (கனடா), சியாமளா (கனடா), ஆனந்தகுமார் (கனடா), பிறேமிளா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் நாகேஸ்வரி, செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், தயாளகாந்தன், ஆனந்தி, விமலதாஸ், யாமினி, மோகனதாஸ் ஆகியோரின் மாமனாரும், ஆரணி, தக்ஷா, மாதேஸ், அஷ்வினி, வர்சினி, சேயோன், நிலாந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

பிறவுண் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

076 622 1193 (மைத்துனர்-செல்வரத்தினம்)
077 541 5453 (ரஜனி - பெறாமகன்)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 09 . 1958



மறைவு 25 . 02 . 2021

### செல்வரத்தினராசா யோகராணி (லீலா)

மாவிட்டபுரம் தெற்கு தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் உடுவில் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினராசா யோகராணி (லீலா) அவர்கள் 25.02.2021 இறைபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரம் பசுபதி அவர்களின் அன்பு மகளும் செல்வரத்தினராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிட்டிணன் பொன்னம்மா (பெரியாள்) இன் அன்பு மருமகளும் றமணன் (சதீஸ்குமார்), ஜெசிந்தன் (மிதில்குமார்), துளசி (ரஞ்சித்குமார்), (ரெனிஷ்குமார்), விஷ்னு, நீகன் (அஜித்குமார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுசா, லோஜினி, ரம்மியா, கார்த்தினி, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமியும், போபிசா, சுபேஸ்னா, ரிதன்யா, மோபிசன், மிதுர்சிகா, தினுசாந், தஸ்மிகா, கபிசேக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிறின்சிகாவின் பாசமிகு பெரியம்மாவும், செல்வரத்தினம், சுசிலா (சரஸ்வதி), செல்வராணி (லைலா), புஸ்பராணி (மாலா) மற்றும் காலஞ்சென்றவரான மங்கையற்கரசி (லலிதா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.02.2021 வெள்ளிக்கிழமை மானிப்பாயில் நடைபெற்று பிறப்பு இடமான தெல்லிப்பழையில் இறுதி அஞ்சலி நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 07 . 1959



மறைவு 25 . 02 . 2021

### திரு. இராசு இந்திரகுமார் (ஐயா)

(தெல்லிப்பழை துர்க்காதேவி, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆஸ்தான நாதஸ்வர வித்துவான்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசு இந்திரகுமார் (ஐயா) 25.02.2021 வியாழக்கிழமை அன்று காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற இராசு - பருவதம் தம்பதியரின் புதல் வனும், அற்புதராசா காலஞ்சென்ற இராசகாந்தம் தம்பதியரின் மருமகனும், இந்திரகுமார் தியாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுவர்ணாங்கி, பாலமுரளி, சுதர்சினி, பானுச்சந்தர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசுப்பிரமணியம், வரதராஜன், கேமாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் ஆரம்பித்து முற்பகல் 10.00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. றோட், மல்லாகம்

தகவல் : குடும்பத்தினர்
076 687 6503

# வடக்கின் தொழிற்சாலைகளை மீளத் திறப்பதற்கு நடவடிக்கை

## யாழ்ப்பாணத்தில் நிதி இராஜாங்க அமைச்சர் உறுதி

**யாழ்ப்பாணம், பெப்.28**

**வடக்கில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீளத் திறக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என யாழ் வந்த நிதி, மூல தனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**



யாழ்ப்பாணத்தில் முதலீடுகள் மற்றும் கடன் வசதிகள் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றது. நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இராஜாங்க அமைச்சர் நிதி, மூலதன முதலீடுகள் மற்றும் கடன் வசதிகள் தொடர்பாக யாழ் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றார். கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்த அவர்; யாழ்ப்பாண மக்களுடைய பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வர்த்தக சங்கங்கள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தோம்.

பனை அபிவிருத்தி தொடர்பிலும் ஆராய்ந்தோம். அதேபோல் பனை உற்பத்திகளை எவ்வாறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்பதை ஆராய்ந்தோம். புகையிலை உற்பத்தி தொடர்பிலும், புகையிலை உற்பத்திப் பொருள்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாகவும் ஆராய்ந்தோம். படகுக் கட்டுமானங்கள் தொடர்பாகவும், விவசாயம் மூலம் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பிலும் ஆராய்ந்திருந்தோம். அரச பொருளாதார ஊக்குவிப்பு நிறுவனங்களின் ஒத்துழைப்பினூடாக சில திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும். விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பாக விரிவாக ஆராய்ந்து இருந்தோம். அத்தோடு இந்த இரண்டு துறைகள் மூலமே எமது நாட்டின் பொருளாதாரத்தை மேன்மேலும் அதிகரித்துச் செல்ல முடியும். அத்தோடு தற்போது குறுகிய காலத்தில் முன்னெடுக்கப்படக் கூடிய சில திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந். தோம். வடபகுதியிலுள்ள சிறு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தாமாகவே தமது நிலையை மேம்படுத்தி செல்வது வரவேற்கத்தக்கது. முதலீட்டாளர்களுக்கு எமது அமைச்சின் ஊடாக பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம். அத்தோடு மேலும் வடபகுதியில் இவ்வாறான சுய தொழில் முயற்சியாளர்கள் நடுத்தர முயற்சியாளர்களுக்கு எம்மாலான உதவியை, ஒத்துழைப்பை வழங்கி அவர்களை மேம்படுத்துவதன் மூலம் எமது பிரதேசத்தில் பொருளாதாரத்தை முன்னேற்றிச் செல்ல முடியும் என்பது எமது நம்பிக்கையாகும். வடக்கில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீளத் திறப்பதற்கு நாங்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட்டு வருகின்றோம். எனினும் எதிர்காலத்தில் அவற்றை மீளத் திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.என்றார். (ப319)

## கல்வியாளர் கௌரவிப்பும் சேவையாளர் பாராட்டும்

இணுவில்,பெப்.28

இணுவில் அறிவாலயத்தின் ஏற்பாட்டில் கல்வியாளர்களுக்கான கௌரவிப்பும், சேவையாளர்களுக்கான பாராட்டு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இணுவைக் கந்தன் அறக்கட்டளைத் தலைவர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினராக சிவபூமி அறக்கட்டளை நிறுவுநர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## ஊக்குவிப்பு நிதி வழங்கல்

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்காக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டத்தின் ஊடாக ஊக்குவிப்பு நிதி வழங்கும் நடவடிக்கை கலாசாரப் பேரவையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு தரமதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்துக்கமைய கலைஞர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

இதற்கு தகுதியான விண்ணப்பத்தாரர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்புகொள்ள முடியும் என்று யாழ்ப்பாண பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ய)

## வீதிகளில் வீசப்படும் முகக் கவசங்கள்

சாவகச்சேரி, பெப்.28

தென்மராட்சி பிரதேச வீதியோரங்களில் பயன்படுத்திய முகக் கவசங்கள் பெருமளவில் வீசப்பட்டுக் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்டு வீதிகளில் தூக்கி வீசப்படும் இந்த **முகக்கவசங்களால் கொரோனா பரவும்** அபாயம் உள்ளது என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் அனைவரும் முகக் கவசம் அணிகின்றனர். இவர்களில், பலர் தாம், பயன்படுத்திய முகக் கவசங்களை தேவை முடிந்ததும் வீதியோரங்களில் **வீசிவிட்டுச் செல்கின்றனர்.**



கொரோனாத் தொற்று யாருக்கு ஏற்பட்டுள்ளது என்பது தெரியாத நிலையில் வீதி யோரங்களில் முகக் கவசங்களை வீசுவது நோயைப் பரவலாக்கும் செயலாகக் கருதப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-9)







# மேய்ச்சல் தரை பிரச்சினை: அதிகாரிகள் குழு ஆராய்வு!



மன்னார், பெப்.28

மன்னார் மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களின் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வரும் மேய்ச்சல் தரை இல்லாமை தொடர்பிலான பிரச்சினையை முடிவுறுத்தும் வகையில், வடக்கு ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய, மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையிலான குழுவினர் கள ஆய்வை முன்னெடுத்துள்ளனர்.

இதில் மாவட்டச் செயலர் உட்பட மேலதிக செயலர், நானாட்டான் பிரதேச செயலாளர், நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர், கமநல சேவை உதவி ஆணையாளர், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர், கால்நடை அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர், வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட செட்டியார் மகன் கட்டை அடம்பன் விவசாய அமைப்பின் தலைவர், மற்றும் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நீண்ட காலமாக மேய்ச்சல் தரைக்கென அடையாளப்படுத்தப்பட்டுள்ள புள்ளருத்தான் கண்டல் பகுதியில் சுமார் 351 ஏக்கர் நிலப்பகுதியில் அடாத்தாகக் காடுகளை வெட்டி விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் சிலர், தொடர்ச்சியாக மேய்ச்சல் தரைக்காக அந்தப் பகுதியை வழங்காத நி... யில் நீண்டகாலமாக இடம்பெற்றுவ... இந்தப் பிரச்சினையை முடிவுக்கு ... ண்டு வரும் விதத்தில் மேற்படி ஆய்... இடம் பெற்றது.

ஆய்வை அடுத்து, சொந்த நில... ளில் விவசாயச் செய்கையை மே... ாள் ளும் விவசாயிகளின் நிலங்க... விடு விப்பது தொடர்பாகவும் அர... ணி களை அடாத்தாகக் கைப்பற்றி... சா யச் செய்கைகளை மேற்கொ... ரும் விவசாயிகளின் காணிகளை... றி முதல் செய்வதற்கு சம்ப... ட்ட திணைக்களத்துக்கும், பிரதேச... லா ளருக்கும் உடனடியாக அறி... நல் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் ... ரிக ளின் பிணக்குகள் தொடர்பிலா... மா னங் களை நடைமுறைப்படு... வது தொடர்பில் எதிர்வரும் நான்க... கதி மன்னார் மாவட்ட அபிவிருத்தி... ழுக் கூட்டத்தில் மேலதிக தீர்மா... கள் மேற்கொள்ளப்படவுள்ளன என... தெரி விக்கப்பட்டது. (...56)

## வேர்ல்ட் விஷன் ஊடாக
# வாகரைப் பிரதேசத்தில் பல்வேறு செயற்றிட்டங்கள்!

மட்டக்களப்பு, பெப்.28

வேர்ல்ட்விஷன் பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தினூடாக வாகரைப் பிரதேசத்தில் வாழ்வாதார உள்ளீடுகள், வாய்க்கால் கட்டுமானப் பணிக்கான அடிக்கல் நடுதல் மற்றும் முன்பள்ளி பாடசாலைகளுக்கான கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

இதில் தெரிவுசெய்யப்பட்ட 56 பயனாளிகளுக்கு 4.8 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடி வள்ளம், ஆடு, தையல் இயந்திரம், நீர்ப் பம்பி, முள்ளுக்கம்பி மற்றும் வட்டை உள்ளீடுகள் என்பனவும் வழங்கப்பட்டன.

அத்துடன் வாகரை குஞ்சன்கல்குளம், 100 மீற்றர் வாய்க்கால் கட்டுமான வேலைக்கான அடிக்கல் நடப்பட்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டம் 1.4 மில்லியன் ரூபாவில் செயற்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் இந்தப் பகுதி விவசாயிகள் தொடர்ச்சியாக வேளாண்மைச் செய்கையை மேற்கொள்ள முடியும்.

மேலும், கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தினூடாக தெரிவுசெய்யப்பட்ட 25 முன்பள்ளி பாடசாலைகளுக்கான, .குறைந்தபட்ச தரம் தொடர்பான செயற்பாட்டுக்கு அமைவாக கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், கால்நடைகளை தொற்றிலிருந்து பாதுகாக்கும் முகமான உள்ளீடுகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-150)



மாற்றுத் திறனாளிகளுக்கான இளநிலா தையல் நிலையம் கறுவாக்கேணியில் திறக்கப்பட்டது. பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தையல் இயந்திரங்களும் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அதனோடு இணைந்த பொருள்களும் வழங்கப்பட்டன. (ற-150)

# மது அருந்தியவருக்கு தண்டம்

பொது இடத்தில் மதுபானம் அருந்திய குற்றத்துக்காக நபர் ஒருவருக்கு ரூபா 25 ஆயிரம் தண்டமும் 40 மணித்தியாலம் சமூகப்பணியில் ஈடுபடுமாறும் தீர்ப்பளிக்கப்பட்டது. யாழ் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி பீற்றர்போல் முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (த-319)

# வீட்டு வளவி... மனிதத் தலை...
## மூவர் கைது

மட்டக்களப்பு, பெப்.28

மட்டக்களப்பு - களுவா... குடியில் வீட்டு வள... னுள் மனிதத் தலை வீ... ட்ட சம்பவத்துடன் ... டைய மூவர் கைது செ... பட்டுள்ளனர் என்று ... ஸார் தெரிவித்தனர்.

குறித்த தலையானது ... னத்தில் புதைக்கப்... லத்திலிருந்து திருகி எ... ப்பட்டுள்ளது என்று ... ஸாரின் முதல்கட்ட விசா... ணையின் போது க... பட்டுள்ளது.

மட்டக்களப்பு - களுவா... க்குடியில் வீட்டு வ... றினுள் மனிதத் தலை ... றி வீசப்பட்டி ருந்... தொடர்பில் வீட்டின் உரிமையாளர் பொலிஸில் ... றைப் பாடு பதிவு செய்திருந்தார். விசாரணைகளை ஆ... த்த பொலிஸார், சந்தேகத்தில் மூவரைக் கைதுசெ... னர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணை... ல். குறித்த மனிதத் தலை களுவாஞ்சிக் குடி பொ... யானத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டது எ... ம். தோண்டி எடுக்கப்பட்ட தலை, அதே பகுதியைச் ... ந்த வரும், தமது 83ஆவது வயதில் கடந்த டிசெம்ப... தம் உயிரிழந்து அடக்கம் செய்யப்பட்ட பெண்ணொ... ரு டையது என்பதும் தெரிய... ந்துள்ளது. மேலதி... சார ணைகளை பொலிஸார் ... ன்னெடுத்துள்ளன... (...)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.05.1931

மறைவு
10.03. 2020

அமரர்

## திருமதி நடராசா இலட்சுமி

(மொந்திபுலம், காரைநகர்)


திதி: பிரதமை (28.02.2021)

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம் அம்மா கண்மணி போல எம்மைக் கண்கலங்காமல் காத்தீர்கள் அம்மா உங்கள் நினைவுகள் எம் உணர்வோடு வாழ்கின்றது அம்மா விழிப்பிலும் கனவிலும் உங்கள் இன்முகம் என்றும் நீங்காது அம்மா இறைவன் சந்நிதியில் எமக்காக என்றும் வேண்டுங்கள் அம்மா உங்கள் ஆன்மா இறைவன் சந்நிதியில் அமைதி காண இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

சிங்கப்பூர் ஜுவல்லறி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
மக்கள், மருக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



எங்கள் அன்பு அப்பாவே
இதயத்துடிப்பின் அருமருந்தே
காலம் செய்த கோலத்தினால்
ஒவ்வொரு கனப்பொழுதும்
துடிக்கின்றோம்.
ஆண்டு மூன்றானாலும் மனம்
ஆற மறுக்கிறது - அப்பா
புன்னகை புரியும் உங்கள்
முகம் தெரிகிறது தினம் தினம்!
உங்கள் ஒழுக்கம் நற்பண்பு
மதிப்புகள் யாவும் எங்கள் வாழ்வில்
என்றென்றும் வழிகாட்டியாக இருக்கும்!
மாதங்கள் பன்னீர் மூன்று ஆனாலும்
அழியாது எம் துயரம்
மறையாத உங்கள் நினைவு
மீண்டும் ஒரு பிறவி உண்டென்றால்
உங்களுக்கு பிள்ளைகளாக பிறக்கும்
பேறு பெற வேண்டும் - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
பிராயடி வைரவரும் நுணுவில்ப் பிள்ளையாரினதும்
அருள் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

தோற்றம் : 01.12.1947 மறைவு : 03.03.2018

## அமரர் சின்னப்பு கெங்காதரன்

பிரபல மில் லொறி உரிமையாளர்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

என்றென்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
மனைவி, மகன்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## வீட்டு தளபாடங்கள் விற்பனை

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 340 3985

## வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி சந்தியில் இருந்த 500m தொலைவில் 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு: 077 996 3186

## வேலையாட்கள் தேவை

K.K.S வீதி கோண்டாவிலில் உள்ள நிறுவனத்திற்கு தச்சுவேலை தெரிந்தவர்கள் தேவை

தொடர்பு: 077 713 0872

## கொள்வனவு

மில் தானிய வகைகள் கொள்வனவு செய்யப்படும்

104 மாப்பியன் மில், சுதுமலை, மானிப்பாய்.

தொடர்புக்கு 077 772 2215

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள வாகன சுத்தரிப்பு நிலையத்திற்கு (Service Station) வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்பு: 071 937 6256

## வாடகைக்கு

யாழ். வைத்தியசாலை வீதியில் யாழ். வைத்தியசாலைக்கு அருகில் உள்ள பகுதியில் 1 ஆம் மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. கடைகளுக்கும் அலுவலகங்களுக்கும் ஏற்றது.

077 828 1956

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ ஆண் 57 வயது சொந்த வீடு மாத வருமானம் உள்ளவர் சேர்ந்து வாழ்வதற்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 618 0675

(மாலை 3 மணிக்கு பின்பு)

## பணிப்பெண் தேவை

சிறு குடும்பத்தினை பராமரிக்க வீட்டுப் பணிப்பெண் தேவை.

தொலைபேசி இலக்கம்

077 336 6626

## பிரத்தியேக வகுப்புக்கள்

A/L 2021, 2022, பிரிவுகளுக்கு தனியாகவோ அல்லது குழுவாகவோ கற்பிக்கப்படும்.

**இணைந்த கணிதம் | பௌதீகவியல்**

077 832 4002, 077 316 4504

## மணமகள் தேவை

யாழ்.றோமன் கத்தோலிக்கம் வயது 38 உயரம் 6 அடி கௌரவ லண்டன் PR உடைய மணமகனுக்கு மணமகள் உடன் தேவை.

(பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

077 597 0169

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வவுனியாவில் வசிக்கும் இருவரும் வேலைக்கு செல்லும் தம்பதியினருக்கு வீட்டிலேயே தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளிற்கு: 077 114 0457, 077 667 6978

## வாடகை / குத்தகைக்கு

வவுனியா ஹொறவப்பொத்தான வீதி, சின்னப்புதுக்குளத்தில் 90 அடி நீளம் 20 அடி அகலம் 25 அடி உயரமுடைய களஞ்சிய அறை, வாகனத்தரிப்பிட வசதிகள் ஆகியவற்றுடன் வாடகைக்குண்டு.

077 757 1889

## பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில் சிறிய தமிழ்க் குடும்பம் ஒன்றினை பராமரிக்க வீட்டுப்பணிப் பெண் தேவை.

2 வருட ஒப்பந்தம்.

077 991 5042

## கட்டுமான பணிகளுக்கு உதவியாளர்கள்

தேவை.

கொழும்பு / களுத்துறை

தங்குமிட வசதி உண்டு.

0714 539 133

## TAPROBANE SEA FOODS (PVT) LTD.

"A Leader in Sustainable & Socially Responsible Seafood"

தப்ரேபேன் கடல் உணவு தனியார் நிறுவனமானது உலகின் முன்னணி கடல் உணவு பதப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி நிறுவனமாகும். இது வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணத்தில் 10 இற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை இயக்குவதுடன் 1000 க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை வழுங்குகின்றது.

தப்ரேபேன் கடலுணவு தனியார் நிறுவனமானது சர்வதேச அங்கீகாரம் பெற்ற தரச் சான்றிதழ்களைக் கொண்டிருப்பதோடு பதப்படுத்தப்பட்ட கடலுணவினை அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளிற்கு ஏற்றுமதி செய்கின்றது. இந்நிறுவனமானது பன்னாட்டு ஊழியர்களுடனும் பல்வகைமைப்படுத்தப்பட்ட தொழில் முயற்சியுடனும் 10 இற்கு மேற்பட்ட ஆண்டுகளைக் கடந்து துரித வளர்ச்சி அடைந்து வருகின்றது.

பின்வருவனவற்றை நீங்கள் கொண்டிருப்பீர்களாயின் உடன் விண்ணப்பியுங்கள்.

- Food Science / Agriculture / Aquaculture / Bio Science / Finance/ Human Resources Management/ Accounting இளங்கலை பட்டம் பெற்றிருத்தல் அல்லது டிப்ளோமா நிலை தகுதியைப் பெற்றிருத்தல்.
- குழுவுடன் சேர்ந்து வேலை செய்பவராக இருக்க வேண்டும். நேர் மறையான அணுகுமுறையுடன் அழுத்தத்தின் கீழ் வேலை செய்யக் கூடியவராக இருத்தல்.
- வடக்கு மாகாணத்தின் எந்த மாவட்டத்திலும் வேலை செய்யக் கூடியவர்
- ஒரு வருட முன் அனுபவம் மற்றும் மூன்று மொழிகளிலும் திறமை பெற்றிருத்தல் மேலதிக சிறப்பாகும்.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும் மற்றும் செயல் திறன் குறித்து தீர்மானிக்கப்படலாம்.

சவாலை சந்திக்க நீங்கள் சரியானவர் எனின் உங்கள் சுய விபரங்களை அனுப்புங்கள்.

1. tsfdangotuwa@gmail.com
2. Contact Numer :- 0778925775 (9.00am to 11am), 0768237637 (3.00pm to 5.00pm)
3. Operations' Manger, Taprobane Seafoods (PVT) Ltd, 765 A, Beach Road, Passaiyoor, Jaffna.

Taprobane Seafoods (PVT)Ltd.
No. 765A, Beach Road, Passaiyoor
Jaffna.
T.p 021 221 9436

Bubulla Watte, Haldanduwana, Dankotuwa, Sri Lanka.
Tel : + 94 312 261 533 | +94 312 258 666 Email :info@tsf.lk

# அறிமுகமாகின்றது.......

The Next generation EVRO RO System

## உலகத் தரம் வாய்ந்த EVRO® நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

Best forever.....




நீங்கள் அருந்தும் நீரில் அடங்கியுள்ள மேலதிக கல்சியம், மக்னீசியம், மாசுக்கள் மற்றும் கொடிய நோய் தொற்றுக் கிருமிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள EVRO® நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை இன்றே பொருத்திப் பயன் பெறுங்கள்.

FREE
1. Installation
2. Service & Maintenance
3. Warranty

இறக்குமதி செய்து விநியோகிப்போர் : நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும், சுற்றாடல் அதிகார சபையினால் அங்கிகரிக்கப்பட்டதுமான

Everpure Hi-Tec (Pvt) Ltd.
Professional in Total Water Management
HOTLINE : 075 331 3310

| JAFFNA | KILINOCHCHI | VAVUNIYA |
|---|---|---|
| NO.581, K.K.S ROAD, JAFFNA, SRI LANKA. | NO.677, A9 ROAD, KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI. | NO.65, VAIRAVAKOVIL ROAD, VAIRAVAPULIYANKULAM, VAVUNIYA. |
| TEL : 021 222 6888 | TEL : 021 228 4888 HOTLINE : 077 844 7280 | TEL : 024 222 6008 HOTLINE: 075 331 3303 |

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் கிரனைட் மற்றும் மாபிள் விற்பனை நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. (வயது 23-30, யாழ் நகரத்துக்கு அண்மித்தவர்கள்)

**Royal Granite Corner**
**077 358 0547**

## மேற்பார்வையாளர் தேவை

கட்டிட நிர்மாண வேலைக்கு மேற்பார்வையாளர்கள் உடன்தேவை. வேலை நடைபெறும் இடம்- வவுனியா, முல்லைத்தீவு.
தகுதி- குறைந்தது NVQ 4 Level in civil/ QS or Equivalent

தொடர்புக்கு: jupitern23@gmail.com
077 923 0640

## காணி விற்பனைக்கு

- 4 பரப்பு சாவகச்சேரி வைத்திய சாலைக்கு முன்பாக
- 10 பரப்பு கோண்டாவில் சந்தி

## வாடகைக்கு

- கடைகள் பிரதான வீதி யாழ்ப்பாணம் 15000/ 25000/ 40000
- வீடு/ காரியாலயம் ஸ்ரான்லி வீதி 40000.00

தொடர்புகளுக்கு:
**Landlord Property Management**
0763136818/0713631818/0774155897

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை.
**ஆண்கள்**

தொடர்பு : 070 304 3633

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

### பிரிவு-32

க.பொ.த (உ/த)- 2020 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ English Courses:
Foundation Diploma /
Diploma in English / Spoken English

★ Computer Courses:
Foundation Diploma / Diploma in ICT / Ms-Office/ Website Development / Programming.
★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து

● ICT வகுப்புக்கள்
பாடசாலை மாணவர்களுக்கானது
Grade 10,11,A/L ஆரம்பமாகின்றன

★ SINHALA சிங்கள வகுப்புக்கள்:
பிரபல சிங்கள விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு - 11.00 - 12.30
★ சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து
★ எழுத்து, பேச்சு கற்பிக்கப்படும்.

★ IELTS / LIFE SKILLS - A1,B1
BATCH - V
பிரபல விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சனி, ஞாயிறு 3.00 - 5.00 PM
● Band Score : 7.5 ● 30% Discount
● Sample papers/Mock Exam
● Smart Class room

HND Courses
● HND IN SOFTWARE ENGINEERING
● HND IN NETWORK ENGINEERING
Duration : 6 Months
★ Certificate ★ UK, America, Canada.

ஆரம்பம் 05,07.03.2021,
10.00 AM, 4 PM
**IPS CAMPUS**
பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4640229
076 685 2529

## சாரதி தேவை

கனரக வாகனம் (Heavy Vehicles) சாரதி தேவை.

தொ[illegible]க்கு: 077 373 4109

## [illegible] 6 வாடகைக்கு

நல்லூர் [illegible]ோயிலடியில் சகல வசதியும் கொண[illegible] [illegible]டி வீடு ஒன்று வாடகைக்கு விடப்[illegible]
[illegible]76 6088 338

## [illegible]மகள் தேவை

1979[illegible] இல் பிறந்த 5'.6" உயர முனை[illegible]வ உயர்குல மிருகசீரிடம் 2ஆம்[illegible] கிரகபாவம் 6 உடைய மண[illegible] அழகிய பொருத்தமான மண[illegible] தேவை.
[illegible]77 330 1798

## தேவை

பழைய கதவுநிலை, யன்னல் நிலை, மரம், சீற், ஓடு போன்றவை தேவைப்படுகின்றன. மற்றும் பழைய வீடும் வேண்டப்படும்.
**077 6250779**

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## (22) விற்பனைக்கு (22)

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 17 அடி அகலமும், 100 அடி நீளமும் கொண்ட 3 மாடி கடையும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் C.T.B பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக 15 அடி அகலமும், 216 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும், யாழ் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் கலாச்சார வீதியில் 10 பரப்பு காணியும், யாழ் கந்தப்பு சேகரம் வீதியில் 6 பரப்புக் காணியும், யாழ் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் 6 பரப்புக் காணியும், 4 பரப்புக் காணியும், யாழ் பிரவுண் வீதியில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 723 2535**

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு மேசன், பெயின்ரர், அலுமினிய வேலை செய்பவர்கள், கூலியாட்கள் உடன் தேவை. தச்சு வேலை, வெல்டிங் வேலை பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். தங்குமிட வசதி செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
**076 826 4857, 0777 120 945**

## பதவி வெற்றிடம் (பெண்கள் மட்டும்)

யாழ் மாவட்டத்தில் இயங்கி வரும் மொத்த விற்பனை நிலையத்திற்கு எழுதுவினைஞர் (பெண்கள் மட்டும்) தேவை. விரும்புபவர்கள் தங்களது சுயவிரக் கோவையை எதிர்வரும் 10.03.2021 இற்கு முன்பாக கீழ் காணும் முகவரிக்கு அன்பிவைக்கவும்.

முகவரி:
**சுப்ப சூஸ்**
**154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

காரைநகர்
## கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்
## ஸ்தாபக தின நிகழ்வு
(ஸ்தாபிதம் - 01.03.2002)

இடம் :- கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் :- 01.03.2021 திங்கட்கிழமை பி.ப 3.30 மணி

தலைமை
**திரு.ந.சோதிநாதன்** அவர்கள்
(ஸ்தாபகரும் தலைவரும், கிழவன்காடு கலாமன்றம்,காரைநகர்)

கௌரவிப்புரை
**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்** அவர்கள்

நிகழ்ச்சிகள்
**நாட்டியாஞ்சலி**
"நிருத்திய அர்ப்பணம்"
நெறியாள்கை **ஸ்ரீமதி சத்தியப்பிரியா கஜேந்திரன்** அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், நடனத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

**சிறப்பு பட்டிமண்டபம்**
"கொரோனாவின் வெற்றியில் பெரிதும் வெளிப்படுவது"

**விஞ்ஞானத்தின் தோல்வியே!**
கு.பாலஷண்முகன்
அ.வாசுதேவா



**மெஞ்ஞானத்தின் தோல்வியே!**
பரா.ரதீஸ்
இ.சர்வேஸ்வரா

நடுவர்: கம்பவாரிதி இ. ஜெயராஜ்



கிழவன்காடு கலாமன்றம் வழங்கும்
"சிதம்பரஜோதி"
உயர்விருது பெறுவோர்
2021



வைத்திய நிபுணர்
நமசிவாயம் சரவணபவ

இசை ஆசிரியை
[illegible]க்கிரிக்கா கணேஸ்பரன்

குறிப்பு:- ◆நிகழ்வு சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.
◆நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.
◆சிதம்பரஜோதி விருது பெறுபவர்களை கௌரவம் செய்ய விரும்புபவர்கள் கௌரவிக்கலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

## ikman.lk

SRI LANKA'S LARGEST MARKETPLACE

இலத்திரனியல் பொருட்கள், சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் விற்பனை செய்யும் கம்பனிகள் மற்றும் அவர்கள் சார்பான பிரதிநிதிகளுடனான சந்திப்பு.

இடம் : **லான் லோட் பலஸ்,**
இல.15, கச்சேரி நல்லூர் வீதி,
(YMCA அருகாமையில்)
திகதி : பங்குனி 3
நேரம் : மாலை 5 மணி

மட்டுப்படுத்தப்பட்ட இருக்கைகள்
பதிவுகளுக்கு **S.S. Laxshan 070 4350 189**

**ikman.lk** இல் உங்கள் சேவைகள் தொடர்பாகவும் தொடர்புகொள்ளலாம்.

உ
சிவமயம்



## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## மகா சபைக் கூட்டம்

காலம் : 07.03.2021
நேரம் : பி.ப 1.30 மணி
இடம் : குருகுலம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**நிகழ்ச்சி நிரல்**
01. மங்கள விளக்கேற்றல்
02. வேதபாராணம் - குருகுலமாணவர்கள்
03. தலைமையுரை - சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்
04. செயலாளர் உரை
05. பொருளாளர் உரை
06. பிறவிடயங்கள் கலந்துரையாடல்
07. புதிய நிர்வாகசபை தெரிவு செய்தல்
08. நன்றியுரை -சிவஸ்ரீ சிவ.குகேந்திரக்குருக்கள்

அனைத்து அந்தண குருமார்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் | சிவஸ்ரீ.சிவ. குகேந்திரக் குருக்கள் |

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 02 . 1943



இறப்பு 27 . 02 . 2021

### திரு.மாணிக்கம் கனகராசா (பாலசிங்கம்)

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மாணிக்கம் கனகராசா (பாலசிங்கம்) நேற்று (27.02.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் (குண்டுமணி) அன்புக் கணவரும், பாமிலா (சுவிஸ்), கேசவன், ஜெமிலா (அவுஸ்ரேலியா), ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநாதன் (சுவிஸ்), உதயசாங்கர் (அவுஸ்ரேலியா), குகப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனும், சிவசுப்பிரமணியம்,விமலாதேவி, காலஞ்சென்ற இராசலிங்கம், பரமலிங்கம் ஆகியோரின் சகோதரரும், சிந்தியா, அபிநயா, ஓவியா, காவியா, துவாரகன், துஷாலினியா, ரிசான், ஜரூஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ([illegible].02.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணிக்கு நீர்வேலி தெற்கு, இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு.

தகவல்:
குடும்பதினர்
கேசவன் - 077 811 4379
தர்சன் - 077 116 2470

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 08 . 1941



மறைவு 26 . 02 . 2021

## திருமதி பங்கஜதேவி சோமாஸ்கந்தன்

**(இளைப்பாறிய ஆசிரியை யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயம்)**

வியாபாரிமூலை பருத்தித்துறையை பூர்வீகமாகவும், 327 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பங்கஜதேவி சோமாஸ்கந்தன் அவர்கள் 26.02.2021 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. க. கனகசபாபதி, சௌந்தராம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சோமாஸ்கந்தன் (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்) அவரின் அன்பு மனைவியும், சுதாகர் (கணினி விஞ்ஞானத்துறைத் தலைவர், யாழ் பல்கலைக்கழகம்) அன்புத்தாயாரும், எழினா (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி) பாசமிகு மாமியாரும், சேதுநாயகி (USA), காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, Dr. இரத்தினவடிவேல், சண்முகநாதன் (பொறியியலாளர்) மற்றும் மனோன்மணி (ஓய்வு-பெற்ற ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற சற்குருநாதன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், வை.கா.சிவப்பிரகாசம் மற்றும் Dr. குணரதி (அவுஸ்திரேலியா), செல்வலக்ஷ்மி (கனடா) காலஞ்சென்ற Dr. வசந்தநாதன் மற்றும் கிருபாவதி (UK) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திரோஷன் (புனித பரியோவான் கல்லூரி), கோபினா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**327, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**அ. சோமாஸ்கந்தன் (கணவன்)**

### பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல போட்டோ கொப்பி கடைக்கு பெண் பணியாளர் தேவை. **077 2487 801**

### பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 6-11 வரை விஞ்ஞான பாடம் (தமிழ் மொழி மூலமாக) தனியாக / குழுவாக வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

**074 049 5708**

### காணி விற்பனை

இருபாலை நகரில் இருபாலைச் சந்திக்கு மிக அண்மையாக கோண்டாவில் இருபாலை வீதியில் 1 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. சுற்றுமதில் நல்ல சூழல். தெளிவான ஆவணங்கள். விலை பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
**0777 149 396**

### மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி- 45ரூபாய்
தொடர்புகளுக்கு:- **077 334 1281**

### பௌதீகவியல்

தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும். துரித மீட்டல் மற்றும் கடந்தகால வினாக்களுடன் கூடிய விளக்கம்.

**Mr.S.Rasigan B.sc (Hons)**

**தொடர்பு: 076 064 3450**

### மணமகள் தேவை

அமெரிக்காவில் PILOT ஆக பணிபுரியும் 38 வயதுடைவருக்கு திருமணம் செய்ய பெண் தேவை. சாதி, சமயம், பார்க்கப்படமாட்டாது.

011 581 3871 E-mail: flightsusaflorida@gmail.com

### வீட்டுப் பணிப்பெண் தேவை

கோண்டாவில் பகுதியில் வீட்டு வேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை.
நாட்சம்பளம் ரூ 800.00-850.00
தொடர்பு இலக்கம்: **074 037 2719**

### நிறைவாழ்வு மையம், J.D.C.S.I

**பெண்களிற்கான தொழில்முறை பயிற்சி நிலையம்**
**இலவச கற்கைநெறி - தையல் வகுப்பு**

தென்னிந்திய திருச்சபை, சாவகச்சேரி குருமனையில் பெண்களிற்கான இலவச தையல் வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் பதிவு செய்து கொள்ளவும்.

தொடர்பு இல. **0777 370 494, 077 9177 230**

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

- ❖ Diploma in Psychology & Counselling உளவியலும் உளவளத்துணையும்.
- ❖ Diploma in Montessori Teacher Traning முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி.
- ❖ IT / Computer அரச அங்கீகாரமான கணினி பாடநெறி.
- ❖ Spoken English UK ஆங்கில கற்கைநெறி


**ஆரம்பம் 06.03.2021**

**வெகுவிரைவில் பட்டப்படிப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

**AMAZON CAMPUS**
87, Kandy Road, Jaffna (Opposite to old Pank)
Tel: 077 270 3494, 021 561 2151Email: amazonjaffna@gmail.com

# மரண அறிவித்தல்

## திரு. செல்லப்பா சண்முகலிங்கம்



தோற்றம் 24.02.1941

மறைவு 26.02.2021

**(இளைப்பாறிய இ.போ.ச. உத்தியோகத்தர்)**

யாழ். வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சண்முகலிங்கம் அவர்கள் (26.02.2021) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வநாயகி அவர்களின் அன்புக் கணவரும், பிரான்சில் வசிப்பவர்களான ரேணுகா, சித்திரா, மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (கனடா), சண்முகரெத்தினம் (ஜேர்மனி), காலஞ்சென்ற நீலாம்பிகை, சண்முகபவானந்தன் (கனடா), தேவராணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான நாகராஜா, அருந்ததிநாயகி மற்றும் யோகராணி, ஜீவநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும். ராஜ்மோகன், பிரியதர்சன், கனகா ஆகியோரின் அன்பு மாமனாரும். இராஜகுலேந்திரன் செல்வராணி (பிரான்ஸ்), தர்மதாசா உதயராணி ஸ்ரீதரன் சறோயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சம்பந்தியும் யோகராணி இரத்தினேஸ்வரி. இரத்தினஜோதி சஞ்சிவிலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயபாலன், ராகவன், கௌசல்யா, இளங்குமரன், சண்முகதாசன், சண்முகநேசன் இரஜனி, சண்முகஈசன். இராஜினி, சபேசன், சஞ்ஜீவன், சரவணன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், காலஞ்சென்ற துர்க்கா, ஜெனார்த்தன், துவாரகா ஆகியோரின் அன்புத் தாய் மாமாவும், லக்ஷியா, ஆகாஷ், கரிஷ், தனுஷ்கா, ஆயூஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மணியர்பதி வீதி,**
**கொக்குவில் மேற்கு ,**
**கொக்குவில்**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**மயூரன் - மகன் : +33751037561**
**செல்வநாயகி - மனைவி : +94774983360**

# வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிறுவனமொன்றில் **விற்பனை முகாமையாளர்கள்** மற்றும் **விற்பனை பிரதிநிதிகளுக்கான** வெற்றிடங்கள் உள்ளன

சம்பளம் பேசித் தீர்மானித்துகொள்ள முடியும்

**வயது எல்லை: ஆண்கள்**
**20 தொடக்கம்30 வயதுவரை**
**பெண்கள்**
**18 தொடக்கம் 25 வயதுவரை**

மேற்படி நேர்முக தேர்வுகளுக்கு பின்வரும் முகவரிக்கு சமூகமளிக்கவும்

**தொடர்புகளுக்கு:**
077 225 6562, 077 293 6655
021 492 8918, 077 199 9176

**A9 வீதி, இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி.**

## நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து)

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

27.02.2021

**பொதுச்சபைக் கூட்டம் பிற்போடுவதற்கான அறிவித்தல்**

28.02.2021ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற ஏற்பாடாகி இருந்த சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் கொரோனா இடர்நிலை காரணமாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த திகதியில் நடைபெறமாட்டாது என்பதை சகல பொதுச்சபை பிரதி நிதிகளுக்கும் அறியத்தருகின்றோம். கூட்டத்திற்கான புதிய திகதி பின்னர் அறியத்தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயலாளர்
நல்லூர் ப.நோ.கூ.சங்கம்

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 07 - 1938



மறைவு 20 - 02 - 2021

## திருமதி நடராசா பவளம்மா

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பவளம்மா 20.02.2021 அன்று பிராஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி ஆச்சிமுத்துவின் மகளும், வைத்திலிங்கம், அன்னப்பிள்ளையின் மருமகளும் நடராசாவின் மனைவியும், இரஞ்சனா (ஆசிரியை ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்) வரதராசன் (சுவிஸ்) இரஞ்சினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தயாரும் பரஞ்சோதி, மூர்த்தி (இலங்கை) நளாயினி (சுவிஸ்) சூரியகுமார், பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், இரட்ணசிங்கம் (ஆசிரியர்), சிவலிங்கம் (ஓய்வு பெற்ற சுன்னாகம் பல.நோ.கூ.ச முன்னாள் முகாமையாளர்) மற்றும் காலஞ்சென்வறர்களான வைத்திலிங்கம், நல்லமுத்து, தையல்முத்து ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.03.2021 செவ்வாய்கிழமை பிரான்சில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**தகவல்:**
**திருமதி இரஞ்சனா (மகள்)**

## விற்பனைக்கு

இலக்கம் 09, யாழ்பாடி வீதியில் சகல வசதிகளுடன் கொண்ட வீடுடன் 2¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. யாழ். பேரூந்து நிலையத்தில் இருந்து 1 km போதனா வைத்தியசாலையில் இருந்து 800m. புகையிரத நிலையத்தில் இருந்து 1.4 km நல்லூர் அடியில் இருந்து 2¼ K.m தூரத்தில் இக்காணி அமைந்துள்ளது.

077 900 3780

# வேலைவாய்ப்பு

அரச மற்றும் தனியார் ஒப்பந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் எமது நிறுவனத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் அலுவலக பணியாளர் (பெண்) தேவை.

**இடம் : கொடிகாமம்**

**தகைமை : ஏற்றுக்கொள்ளக்கூடிய கல்வித்தகைமை மற்றும் அனுபவம், வினைத்திறனிற்கு ஏற்றவாறு சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

- வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு பணிபுரிய வேண்டும்
- வேலையை விட்டு விலகுவதாயின் ஒரு மாதகால முன் அறிவித்தல் வழங்க வேண்டும் or ஒரு மாத கால சம்பளத்தை நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும்.

**தொடர்புகளுக்கு: தங்களது CV இனை அனுப்பவேண்டியது**

enterprise jathur@gmail.com
Viber No. 076 824 5457

K.Sasigala
Administration Officer

## நாகபூஷணி திருமணசேவை
## மணமகன் தேவை

1990 Dr. மணமகளுக்கு Dr மணமகனும் 1993 Dr. சூரி/செவ் மணமகளுக்கு BSCக்கு மேல் மணமகனும் 1993 Dr. செவ்வாய்க் குற்றமுள்ள மணமகளுக்கு Dr, Eng மணமகனும் 1989 விரிவுரையாளர் மணமகளுக்கும் மணமகன்கள் எதிர்பார்க்கப்படுகிறது. நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

இல.5, ஐந்தாம் ஒழுங்கை,
பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

021 222 9306
077 138 7596

## DIE Cutting Machine For Sale



Heidelberg Cylinder good Working condition
$21\frac{1}{4} \times 28\frac{1}{2}$
Die Cutting Machine For Sale
19/= Lacks.

Contact : 0776116136 , 0729211087

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**

076 568 4346

## முதலீட்டாளர்கள் தேவை

வடகிழக்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் தனியார் நிறுவனமொன்றுக்கு முதலீட்டாளர்கள் தேவை.

தொடர்புக்கு 077 844 4518

## விற்பனைக்கு

குளிர்சாதனபெட்டி பாவனையில் உள்ளது (மினிபார்) 6 அடி உயரம் 3 அடி அகலம் மேலும் கொங்கிறீற் கல் சகல அளவுகளிலும் விற்பனைக்குண்டு .

தொடர்புகளுக்கு 077 728 3811
077 071 3048

## அறை வாடகைக்கு

பழைய பொலிஸ் நிலையம் ஆனைக் கோட்டை மானிப்பாய் வீதியில் படிக்கும் மாணவர்களுக்கு ROOM வாடகைக்கு விடப்படும். வாடகையானது பேசித் தீர்மானிக்கலாம்.

077 013 6723

## வேலை ஆட்கள் தேவை

கோழி இறைச்சிக்கடையில் வேலை செய்வதற்கு ஆண்கள், பெண்கள் தேவை. குறிப்பு:- ஆண்கள் இரவில் தங்குதல் அவசியம். ஆண்கள் மோட்டார்சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

0041 7792 43687
தொடர்பு:- 077 271 8149

புறொயிலர் கோழி உயிரெடை 1 kg 350/=

## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாக கதைக்கப்பயில ஆசிரியர் விஸ்வப்பிரம்மஸ்ரீ நடராஜா விக்னேஸ்வரன் ஆச்சாரியார்.
இல.424/3. K.K.S. வீதி. யாழ்ப்பாணம்
நாகலிங்க சுவாமிகள் வீதி. சங்கானை

077 6751 649

## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் மொத்த விற்பன்ன நிலையத்திற்கு கீழ்காணும் பணிகளுக்கு பணியாளர்கள் தேவை. விரும்புபவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை எதிர்வரும் 10.03.2021 இற்கு முன்பாக கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. பணம் வசூலிப்பவர்கள்
2. விநியோகப் பையன்கள் (Delivery Boys)

அனுப்ப வேண்டிய முகவரி:
**தும்பிக்கையான் களஞ்சியம்**
**117, கண்டி வீதி, கிளிநொச்சி.**

## தென்னம் தோட்டம் விற்பனைக்கு

**பளையில்** அமைந்துள்ளது
**40 ஏக்கர் தென்னம் தோட்டம்** சகல ஆவணங்களும் வீடு, சொட்டுநீர்ப்பாசனம்,மின்சாரம் ஆகிய வசதிகள் உண்டு.
**தொடர்பு: 076 617 6063**

## கேள்வி அறிவித்தல்
## துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ சங்கம் (வ/து)

எமது சங்கத்திற்கான தேங்காய் எண்ணெய் ஆலை அமைப்பதற்கான கட்டிட வேலைகளுக்கு கேள்வி கோரல்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படுகிறது இது தொடர்பான விபரங்ளை சங்க அலுவலக நேரத்தில் பெற்று பார்வையிடலாம்.

ஆர்வமுள்ள கேள்வி தாரர்கள் 27.02.2021ம் திகதியிலிருந்து 13.03.2021ம் திகதி வரை காலை 09.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணிக்கு இடையில் எழுத்து மூலமான கோரிக்கையினையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00ஐ செலுத்தியும் கேள்வி பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி கோரல்கள் 15.03.2021 காலை 10.30 இற்கு முன்னதாக தலைவர், துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ சங்கம், துணுக்காய் எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

கேள்வி கோரல் பற்றிய முற்கூட்டிய விளக்கக் கூட்டம் 08.03.2021ம் திகதி காலை 10.30 மணிக்கு துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ சங்கம் தலைமை அலுவலகத்தில் இடம் பெறும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் |
|---|---|---|---|
| MPCS /2021/1 | Existing MPCS Building Renovation and Construction Of New Drying Platform (40' X 30') | 02 மாதம் | C7 / C8 |

- கேள்வி பிணை வைப்பு தொகையானது தாங்கள் குறிப்பிடும் தொகையின் 1% ஐ 15.07.2021 வரையான காலப்பகுதிக்கு வங்கி பிணைப்பத்திரத்தை ஒப்படைக்க வேண்டும்.
- கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியில் இருந்து 63 நாட்கள் (17.05.2021) வரை செல்லுபடியாகும்.
- கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியளவில் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

TP No :- 077 358 1232, 021 228 4692

தலைவர்

## யாழ்.சிறைச்சாலையில்...

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் நேற்று 236 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 52 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இந்த 52 பேரில் 51 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள்.

நேற்று 150 கைதிகளின் மாதிரிகள் பெறப்பட்டு சோதிக்கப்பட்டதிலேயே 51 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

52ஆவது தொற்றாளர் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் பணியாற்றும் ஆசிரியை ஒருவர். அவரது கணவர் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக கொழும்பில் பணியாற்றிவிட்டு யாழ். வந்திருந்தார்.

இவற்றை விட யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 463 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 9 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இந்த 9 பேரில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர். மேலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 3 நோயாளிகளுக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கொடிகாமத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவர் மற்றும் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவர் என மேலும் இருவருக்கும் என தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 81 வயது வயோதிபப் பெண் ஒருவருக்கும் அவரது பேரனுக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-26)

## ஜெனிவா பிரேரணை...

ரணை நாடுகளால் முன்மொழியப்பட்டுள்ள இலங்கை தொடர்பான 46/1 பிரேரணை அவ்வாறே நிறைவேற்றப்பட வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், இரா.சாணக்கியன், எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், பா.அரியநேந்திரன், எஸ்.சிவமோகன், ஞா.சிறிநேசன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, க.துரைரெட்ணசிங்கம், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், கே.சயந்தன், த.குருகுலராஜா, சட்டத்தரணி வி.தவராசா, மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி.சரவணபவன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்மொழியப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணை குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது, பிரேரணையில் குறிப் பிட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஒவ்வொன்றாக விளக்கம் அளிக்கப்பட்டது. அத்துடன் வார்த்தைகளில் நேரடியான வெளிப்பாடுகள் இல்லாதபோதும் குறித்துரைக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் கனதியாகவும், திருப்திகரமானதாகவும் இருக்கின்றன என உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அத்துடன், அந்தப் பிரேரணை அவ்வாறே நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அனைத்து உறுப்பினர்கள் மத்தியிலும் பொதுவான இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக, புதிய அரசமைப்புக்கான செயற்பாடுகள் தொடர்பில் மத்திய செயற்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

அண்மையில் புதிய அரசமைப்புக்கான நிபுணர் குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில் நேரில் சென்று சந்தித்து எடுத்துரைத்த விடயங்கள் சம்பந்தமாகவும் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது (ம-22,110)

## ஜெனிவா உள்ளிட்ட...

குழுக் கூட்டத்தில் நேற்று வலியுறுத்தப்பட்டது.

குறித்த கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த சுமந்திரன் ஜெனிவா விவகாரம் தொடர்பாக பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருந்தார். தான் சர்வதேச ரீதியாக பல்வேறு தரப்பினர்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்திருந்தேன் என்றும் தற்போது முன்வைக்கப்பட்ட தீர்மான வரைபில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா, கட்சியின் அனுமதியின்றி ஜெனிவா தொடர்பான அறிக்கைகளை வெளியிட வேண்டாம் என்றும் அனுமதியற்ற சந்திப்புக்களில் ஈடுபடுவது தற்போது தவிர்க்கப்பட வேண்டியது என்றும் தெரிவித்தார்.

இதையடுத்து, ஜெனிவா போன்ற வெளிவிவகாரங்களைக் கையாள்வதற்குத் தனியான குழுவொன்றை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இந்தக் குழுவில் தமிழரசுக்கட்சி சார்பில் மூவரும், பங்காளிக்கட்சிகள் சார்பில் தலா ஒவ்வொருவரும் உள்ளடக்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-110)

## பிரேரணையை...

யும் கொண்டுவரலாம். அவை நிறைவேறினால் என்ன, நிறை வேறாவிட்டால் என்ன? அதனால் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எமது அரசின் வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாட்டில் நாம் மாற்றம் எதையும் செய்யவே மாட்டோம் இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வு நடைபெற்று வருகின்றது. இலங்கை தொடர்பான புதிய பிரேரணை விவகாரமும் சூடுபிடித் துள்ளது. வாக்குரிமையுள்ள 10 நாடுகள் மட்டும் இதுவரை இலங்கைக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளன. இந்த நிலையில் இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் வெளிநாட்டுச் செய்திச் சேவையொன்றின் கொழும்பு ஊடகவியலாளர் வினவியபோதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக வெளிநாடுகள் எத்தனை பிரேரணைகளையும் கொண்டுவரலாம். அவை நிறைவேறினால் என்ன, நிறைவேறா விட்டால் என்ன எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இம்முறை பிரேரணையைத் தோற்கடிக்க வேண்டும் என்பதில் எமது நட்பு நாடுகள் உறுதியாக உள்ளன.

இறுதியில் என்ன நடந்தாலும் எமது அரசின் வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாட்டில் நாம் மாற்றம் எதையும் செய்யவே மாட்டோம். எமது புதிய அரசு பதவியேற்ற கையுடன் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கை விளக்க உரையில் அரசின் நிலைப்பாடுகளை தெளிவாக வெளியுலகத்துக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சரும் தற்போது ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கையின் நிலைப்பாட்டை எடுத்தியம்பியுள்ளார். எனவே, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் மிரட்டல்களுக்கும், அவருக்கு ஆதரவாக இருக்கும் சில நாடுகளின் கூட்டிணைவால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணைக்கும் நாம் அஞ்சவும் மாட்டோம்; அடிபணியவும் மாட்டோம் என்றார். (ம-ஒ,5,22)

## சாகும்வரை...

டத்தை நேற்று ஆரம்பித்துள்ளார்.

இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கை உட்பட 4 கோரிக்கைகளை பிரித்தானிய அரசிடமும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் முதன்மையாக முன்வைத்து அவர் இந்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். லண்டன் நாடாளுமன்ற சதுக்கத்தில் இந்தப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

பிரிட்டன் தலைமையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்போகும் தீர்மானமானது, இலங்கைக்கு மேலும் அவகாசத்தையே வழங்கப்போவதாக அறிகின்றோம். இந்தச் செய்தி எம்மை வேதனையடையச் செய்கின்றது. எனவே இவ்வாறான அவகாசங்களை வழங்காமல், தாயகத்தில் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடும் இன நெருக்குவாரங்கள் மேலும் தொடராமல் இருப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம)

## ஐரோப்பிய...

தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வில் அறிக்கையொன்றை வெளியிட்டு, ஐரோப்பிய ஒன்றியம் இதனைத் தெரிவித்துள்ளது. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீதான அரசின் தீவிர கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன எனவும் அந்த அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

அத்தோடு, இலங்கையின் மனித உரிமை விடயங்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் கவலைகளை வெளியிட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் இழப்பீடு தொடர்பான அலுவலகங்கள் பாதுகாக்கப்பட்டு, அவற்றுக்கான வளங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் இலங்கை அரசு முனைப்புடன் செயற்படும் என்று தாம் நம்புகிறோம் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

## இலங்கையை...

டனும், ஆக்கபூர்வமாகவும் எங்களுக்கு ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும். இலங்கையை நிர்க்கதி யாக இந்தியா கைவிட்டு விடக்கூடாது இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே. கொழும்பில் வைத்து இந்தியாவின் 'த ஹிந்து' நாளிதழுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை விடயம் விரைவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்கெடுப்புக்கு வரவிருக்கின்றது. அச்சமயம் எமது அயல் தேசமான இந்தியா, எங்களை நிர்க்கதியாகக் கைவிடக்கூடாது. இலங்கைக்கு அருகில் உள்ள அயல் தேசங்களான இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகியவை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அங்கத்துவ நாடுகள். கொரோனா நெருக்கடி மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் என்று அவை எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் ஒரே மாதிரியானவை. எனவே, அவை எல்லாம் ஜெனிவாவில் இலங்கையை ஒன்றுபட்டு நின்று ஆதரிக்க வேண்டும். ஆதரிக்கும் என எதிர்பார்க்கின்றோம். எமது பிராந்திய நாடுகள் எம்மை ஆதரிக்காவிட்டால் அது எமக்கு பெரும் அசௌகரியமாகி விடும். எங்கள் ஜனாதிபதியின் (கோத்தாபய ராஜபக்சவின்) ஆதரவு கோரும் முதல் கடிதம் இந்தியப் பிரதமருக்குத்தான் அனுப்பப்பட்டது. இந்த விடயத்தில் இந்தியத் தூதருடன்தான் முதல் சந்திப்பை அவர் மேற்கொண்டார். அதற்கு முக்கிய காரணம் இந்த விடயத்தில் தென்னாசியாவின் ஐக்கியம் குறித்து நாங்கள் அதிக சிரத்தை கொண்டுள்ளோம். இலங்கை தனது அண்டை நாடுகளின் ஆதரவை அவசியமாகத் தேடி நிற்கின்றது. நாங்கள் விசேடமாக எதையும் கோரவில்லை. இந்தப் பிராந்தியத்தில் எல்லோருடைய பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஒருமுகமாக இருக்க வேண்டும் என்ற அயலுறவுக் கொள்கையின் ஆரம்ப அம்சத்தின் அடிப்படையிலான பங்களிப்பையே உரிமையுடன் எதிர்பார்க்கின்றோம்' என்றார்.

வாக்கெடுப்பில் இந்தியா பங்குபற்றாமல் விடுவது, இலங்கைக்கு ஆதரவானதாக அமையுமா என்று கேட்கப்பட்டபோது,

'நாங்கள் இந்தியாவின் முழு ஈடுபாட்டுடனான ஆக்கபூர்வமான பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம். பங்குபற்றாமல் விடுவதன் மூலமான அங்குமில்லை, இங்குமில்லை என்ற நிலைப்பாட்டையல்ல. ஐ.நா.மனித உரிமைகள் சபையின் இரட்டை வேடம் மற்றும் பாசாங்குத்தனமான போக்குக்கு மத்தியில் தென்கோடி நாடு ஒன்று இத்தகைய பிரேரணையை வெற்றி கொள்வது மிகவும் இயலாத காரியம்.

இத்தகைய தீர்மானம் ஒன்றின் பின்னர் வரக்கூடிய பொருளாதாரத் தடை போன்ற தண்டிப்பு நடவடிக்கைகள் நாட்டை விட மக்களையே அதிகம் நெருக்கடியில் ஆழ்த்தும்-என்றும் அவர் தெரிவித்தார். (ம-22)

## வேலையாட்கள் தேவை

கோண்டாவிலில் இயங்கும் அரிசி ஆலையொன்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு:- 077 957 4934

## மணமகள் தேவை

30 வயதுடைய முல்லைத்தீவைச் சேர்ந்த வாய்பேசமுடியாத மணமகனுக்கு மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை)

077 279 4073

## வீடு வாடகைக்கு

இல. 25, செம்மணி வீதி, நல்லூர் மாடி வீடு வாடகைக்கு உண்டு நிறுவனங்களுக்கு உகந்தது. (முத்திரைச் சந்தியிலிருந்து 1கி.மீற்றர்)

தொடர்பு: 075 966 4266

## ரஜீவ் திருமண சேவை

சகல இனத்தவருக்குமான உள்நாடு, வெளிநாடு, அரச பணி, தனியார் நிறுவனம் மணமக்களுக்கும் ஏற்ற வரன்கள் எம்மிடம் உண்டு.

முகவரி:
129, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

D. ரஜீவ்
077 348 5967

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

### af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

## வேலையாள்கள் தேவை

சுன்னாக பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனத்திற்கு ஆண்/ பெண் இருபாலாரும் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

077 343 4174

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி மேற்கு, குட்டியபுலம் வசாவிளானில் அமைந்துள்ள 86 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

(தரகர் தேவையில்லை)

077 321 1135

## காணி தேவை

மாநகர சபை, கோப்பாய், நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட இடத்தில் 20 தொடக்கம் 30 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை

தொடர்புக்கு 076 221 2037

## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு).

**இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்**
**(தரகர் தேவையில்லை)**

பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடைதூரத்தில் உள்ளது.

இருபாலை கிழக்கு C.C பாடசாலைக்கு அருகாமையில் 4¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு).

**(பிரித்துக் கொடுக்கப்படும்)**

பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

**(தரகர் தேவையில்லை)**

077 805 1655
077 596 3845

## வேலை வாய்ப்பு

பரந்தனில் அமைந்துள்ள கட்டட பொருட்களின் காட்சியறை ஒன்றிற்கு பொறுப்பாக நிர்வாகம் செய்யக் கூடிய ஆண் ஒருவர் உடன் தேவை.
(தங்குமிடம் , உணவு , சம்பளம்)

076 826 7703

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் உள்ள உணவகத்திற்கு பின்வரும் பணி வெற்றிடங்கள் உள்ளன.

1. சமையல் உதவியாளர் (ஆண்)
2. உணவு பரிமாறுபவர்கள் (ஆண், பெண்)

முன் அனுபவம் விரும்பத்தக்கது

தொடர்பு: 077 758 5909

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் முத்துமாரி அம்மன் கோவிலுக்கும் பாலர் பாடசாலைக்கு அருகிலும் கல்லூரிகள், பஸ்நிலையம், சந்தை என்பன 1/4 மைல் தூரத்திலுமுள்ள சகல வசதிகளும் கொண்ட விசாலமான 3 அறை வீடு வாடகைக்கு உண்டு. முற்பணம் வாடகை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 617 6548, 077 1630 982

## வேலையாள்கள் தேவை

பொதிப்போக்குவரத்து சேவையில் ஈடுபடும் நிறுவனத்திற்கு கணக்கு லிகிதர், உதவியாளர் பெண்கள் தேவை.

077 756 0682

## விழிநீர் அஞ்சலி



திரு. குருநாதன் பிரபாகரன் (பிரபா)
வணிகமாணி (சிறப்பு)
1982 - 1986 யாழ். பல்கலைக்கழகம்

நெஞ்சில் வலியுடனும்
நீங்காத நினைவுகளோடும்
நண்பர்கள் நாம் கதறுகின்றோம்
நண்பா! நீ மடிந்து போகவில்லை
எங்கள் இதயங்களில் படிந்து போயிருக்கின்றாய்....!
நண்பா ! நீ எங்கும் தூரம் போகவில்லை
எங்கள் நினைவுகளில் என்றும் இருக்கின்றாய்...!
என்றாவது ஒரு நாள் எங்கோ ஓரிடத்தில்
நாம் சந்தித்துக் கொள்வோம்...!
நம் நட்புக்கு என்றும் மரணமில்லை ...!

ஆருயிர் கணவரின் பிரிவால் ஆறாத் துயருற்றிருக்கும் அன்னாரின் அன்பு மனைவிக்கும் தங்கள் அன்பிற்கும் அரவணைப்பிற்குமுரிய தந்தையின் எதிர்பாராத இழப்பினால் கவலையுற்றிருக்கும் அன்னாரின் பாசமிகு பிள்ளைகளுக்கும் ஆழ்ந்த தாங்கொணா மனவேதனையுடன் அன்பு மகனை பறிகொடுத்து தவிக்கும் அன்னாரின் அன்புத் தாயாருக்கும் மற்றும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குழுமமானது ஆத்மார்த்தமான இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீரப் பூக்களால் அர்ச்சித்து உள்ளமதால் வேண்டி நிற்கிறது.

**வணிக, முகாமைத்துவ, கலைப் பட்டதாரிகள்**
**1982 - 1986**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## கொழும்பில் Hotel தங்குமிட வசதி

50% விசேட விலைக்கழிவுடன் புதிதாக அமைக்கப்பட்ட சகல வசதிகளும் கொண்ட

**Hotel Nelly Marine**

இல.53/1,E, இராமகிருஷ்ணா வீதி, "மரைய்ன் டிறைவ்" வெள்ளவத்தை

தொடர்பு: 076 419 2934


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் ஆறுகால்மடம் மெயின் றோட்டுடன் அறுபது பரப்பு காணி (60) விற்பனைக்கு. இரண்டு பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். யாழ் பஸ் நிலையத்திலிருந்து 2km தூரம். தரகர் தேவையில்லை.

தொடர்புக்கு : குரு
077 288 0152
077 468 3354

## மரண அறிவித்தல்

மலர்வு
29 . 06 . 1972



உதிர்வு
26 . 02 . 2021

### நாகராஜா ரவீந்திரன் (ரவி)

(ரவி வீடியோ சென்ரர் - உரிமையாளர்)

167, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராஜா ரவீந்திரன் (ரவி) நேற்றுமுன்தினம் (26.02.2021) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராஜா - யோகம்மா தம்பதியரின் இளைய புதல்வனும், விஜயரட்ணம் - புஸ்பலீலா தம்பதியரின் அன்பு மருமகனும், பிறேமினா அவர்களின் அன்புக் கணவரும், நஸ்மிதா, சர்வினா, கம்ஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தெய்வேந்திரம் (சுவிஸ்), காலஞ்சென்ற சுவேந்திரராணி மற்றும் ஜீவராணி, விஜயராணி, இராசேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவிகா (சுவிஸ்), சிவப்பிரகாசம், கஜேந்திரன், ஜெகதாஸ், மீரா (சுவிஸ்), பிறேமதர்சினி, யோகேஸ்வரன், பிரியங்கா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப் பார்த்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

076 922 2359



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.02.2021இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2051 மாசி 16 ஞாயிற்றுக்கிழமை (28.02.2021) சிகரம் : 37

போட்டவர் எவரோ தடையை அவரே
கேட்டு கெஞ்சிய பின்னர் விலக்கிட –ஆட்டத்தோடு
ஆரம்பிக்கும் உம் அரச ஏவல் படலத்தை
பார்த்திருப்போமினி அடுத்த தடைவரை!

–ஒட்டுக்குழு சுவாமிகள்








# நந்தசேனாதிகாரமும் 4 வல்லரசுகளும்

ஆதித்த கரிகாலன்

ஈழத் தமிழர்களின் மூட நம்பிக்கைகளில் ஆகப் பிரபலமானதும்(?) காலத்தால் பிந்தியதும் எதுவெனில் ஐக்கிய நாடுகள் சபை மூலம் இனப்படுகொலைக்கான நீதி கிடைக்கும் என்பதே! ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சர்வதேசப் பேரவையின் கூட்டத் தொடர் நடக்கும் பெப்ரவரி- மார்ச் மாதங்களில் ஒவ்வொரு வருடமும் 'ஜெனிவா சீசன்' அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு தசாப்தத்துக்கு மேலாகின்றது. சர்வதேசங்களிடம் நீதியை எதிர்பார்க்கும் ஈழத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை போராட்டங்களால் வலுப்பெறுவதும்- அந்தப் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் இலங்கை அரசாங்கத்தின் உள்ளக- வெளியக முயற்சிகள் தலையெடுத்தாடுவதும் இதே 'சீசனில்' தான். எஞ்சியிருக்கும் நீதிக்கான கோரிக்கைகளோடு அமைதி வழியில் போராடும் சாமானிய மக்களின் நியாயமான போராட்டங்களைக் கூட காலத்துக்குக் காலம் வெவ்வேறு பரிமாணங்களுக்கும் போராட்டங்களாக மாற்றியதிலும் இந்த ஜெனிவா சீசனின் செல்வாக்குப் பெரிதுமுண்டு.

'பெப்ரவரி- மார்ச்' மாதங்களில் மட்டும் திடீரென ஞானம் பெற்று - ஏற்கனவே தொடர்ச்சியாக தமது கோரிக்கைகளை செயலுருப்பெற போராடிவரும் மக்களோடு இணைந்து கொள்ளும் தமிழ் அரசியல்வாதிகளின் 'சீசன்' காவடிகள் மூலம், இலங்கையில் தமிழர்களின் போராட்ட வடிவங்களெல்லாம் சர்வதேசத்தின் நிரலை திருப்திப்படுத்தும் உள்நாட்டு கலக வடிவங்கள் என்று நிரூபிப்பதற்கு பௌத்த - சிங்கள பேரினவாதம் பெரிதாக பிரயத்தனப்படும் தேவையிருப்பதில்லை. ஐக்கிய நாடுகள் சபை- சர்வதேச வல்லரசுகளின் கூட்டணி என்ற சரியான தெளிவு, இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்களிடம் எப்போதுமுண்டு. மாறிவரும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் வல்லரசுப் போட்டியின் முன்னிலைச் சார்பு நிலைப்பாட்டினை தனது நிலைப்பாடாகவும் வெளிப்படுத்துவதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையில் மட்டுமல்ல சர்வதேச ஒத்துழைப்புள்ள எந்தவொரு சர்வதேச அமையத்தினதும் அழுத்தத்தினைக் கூட வெற்றிகரமாக சமாளிக்க இயலும் என்ற இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்களின் ஊடகம், பொருத்தமானதும்- சரியானதுமாகும்!

இந்த நிலையில் 2009 க்கு பிறகான சர்வதேச வெளியுறவுக் கொள்கைகளின் சீனச்சார்பு நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்துள்ள 'நந்தசேனாதிகாரத்துக்கு' வெவ்வேறு அவசியங்களுள்ளன. வெறுமனே - சீன ஆதரவு நிலைப்பாட்டை முன்னெடுப்பதோடு மட்டும் நின்று விடாது சமகாலத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லரசுப் போட்டியிலிருக்கும் இந்தியாவுக்கும் எதிரான நிலைப்பாட்டையும் உறுதியான சமிக்ஞையிடுவதன் மூலம் 'ஆசியாவின் ஆச்சர்யம்', பட்டுப்பாதையில் இருந்த செம்முத்தை எடுத்து கழுத்தில் கட்டிக்கொண்டுள்ளது. இந்தியாவின் எதிர்ப்பினை முன்னறிந்து கொண்ட போதிலும் வடக்கின் மூன்று தீவுகளை சீன மின்னுற்பத்தி செயற்றிட்டங்களுக்கு குத்தகைக்கு கொடுக்கும் முடிவில் உறுதியாயிருப்பதும்- பாகிஸ்தான் பிரதமருடனான இலங்கையின் பொருளாதார உறுதிப்பாட்டு ஒப்பந்தங்களை நிறைவேற்றியி ருப்பதும் இந்தியாவுக்கான இலங்கையின் சவால்களாக வெளிப்பட்டுள்ள ஆகப் பிந்திய குறிகாட்டிகள்.



தெளிவாக வெளிக்காட்டப்பட்டுள்ள இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டுக்கு இந்தியாவின் துலங்கல்களோ மிகப் பலவீனமானவை. கிழக்கு முனையத்தின் பெற்றோலியக் குதங்கள்- வடக்கு கிழக்கில் திடீரென உதயமாகியுள்ள தமிழ்க் கட்சிகளின் பேரவை- இலங்கையிலும் பாரதிய ஜனதா கட்சி போட்டியிடும் என்ற அறிவிப்பு போன்ற 'ஒளித்துப் பிடித்து' விளையாடும் அறிக்கைகளால் தன்னைப் பலவீனப்படுத்திக் கொண்டுள்ளது இந்தியா. இந்தியாவின் - இலங்கைக்கான மிரட்டல்கள் எல்லாமே இலங்கை ஆட்சியாளர்களுக்கு நகைப்புக்குரியனவாக மாறியிருப்பதுடன், தமிழ்த் தேசியம் என்ற வடக்கு,கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அரசியல் ஆன்மாவை சிதைப்பிப்ப தற்கான ஏற்பாடுகளேயாகும்.

> சீன சார்பு நிலையெடுத்துள்ள சர்வதேசங்களின் உதவியுடன் இம்முறையும் ஜெனிவாவில் கொண்டு வரப்படுகின்ற இலங்கைக்கெதிரான பிரேரணையை சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையை இந்தியாவின் பலவீனமான எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் இரட்டிப்பாக்கிக் கொண்டுள்ளது. இலங்கையரசு.

தமிழ்த் தேசியத்துக்கு பதிலாக மதத் தேசியங்களாக, தமிழ்பேசும் மக்களை பிரித்தாளுவதன் சாதகத்துக்காக இலங்கையின் ஆட்சியாளர்கள் காத்திருக்கையில் இந்தியாவின் இத்தகைய நகர்வுகள், பௌத்த பேரினவாதத்தின் வயிற்றில் பால் வார்க்கும்.

வடக்கு - கிழக்கிலங்கையில் தனது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கென இந்தியாவின் முயற்சிகளுக்கு பயன்படும் நிலையிலிருப்ப வர்கள் ஏற்கனவே தமிழ்த் தேசிய மக்களால் நிராக ரிக்கப் பட்டிருப்பதைக் கண்டு கொடுப்புக்குள் நகைத்துக் கொள்ளும் சிங்களத் தேசியம்.

சீன சார்பு நிலையெடுத்துள்ள சர்வதேசங்களின் உதவியுடன் இம்முறையும் ஜெனிவாவில் கொண்டு வரப்படுகின்ற இலங்கைக்கெதிரான பிரேரணையை சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையை இந்தியாவின் பலவீனமான எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் இரட்டிப்பாக்கிக் கொண்டுள்ளது, இலங்கையரசு.

தமிழர்கள் மீதான தனது நிலைப்பாட்டில் அரசமைப்பு ரீதியானதும் வெளியுறவுக் கொள்கை ரீதியானதுமான மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டிய மிக அவசியமான தருமணம் இதுவென்பதை இந்தியா மிக வேகமாக உணர வேண்டும். தமிழர் நிலங்களில் ஆளும் பாரதிய ஜனதா கட்சிக்கு சார்பானவர்கள் ஆட்சியில் இருப்பதை உறுதிப்படுத்தும் வேலைகள், அந்தந்த நிலங்களில் வேரூன்றி இருக்கும் திராவிட மற்றும் தமிழ்த் தேசிய சித்தாந்தங்களுக்கு முரணானது என்பதே இந்திய அரசு அவசரமாக கற்க வேண்டிய பாடமாகும். தமிழகத்தின் திராவிடப் பண்பாடும், தமிழ்த் தேசியப் பண்பாடும் இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்க உறுதிப்படுத்தலுக்கு எவ்வாறு பயன்படும் என்பதை புரிந்து கொண்டு இணங்குவதே இந்தியாவின் முன்னால் தற்போதுள்ள ஒரேயொரு வெளிச்சமுள்ள வழி. ■

# ஐ.நா.தீர்மானத்தின் 'ஸீரோ' வரைபு



○ நிலாந்தன்

கடந்த திங்கட்கிழமை இலங்கைத் தீவின் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே 'THE DEBRIEF 'என்ற யூடியூப் சனலில், ரோயல் ரெய்மெண்ட்டுக்கு மிக நீண்ட நேர்காணலை வழங்கியிருந்தார். நேர்காணலில் அவர் பல விடயங்களைப் பற்றியும் கதைக்கிறார். அதில் ஓரிடத்தில் அவர் கூறுகிறார்...." இலங்கை ஒரு சிறிய நாடு. அதன் பொருளாதாரமும் சிறியது. ஆனால் அதன் அமைவிடம் காரணமாக அதற்குள்ள கேந்திர முக்கியத்துவத்தை கருதிக்கூறின் அது ஒரு பெரிய நாடு"என்று.

அதுதான் உண்மை. இந்து மகா சமுத்திரத்தில் இலங்கைத் தீவின் அமைவிடம்தான் அதன் பலம். அதே சமயம் அதுதான் அதன் துயரமும். இது சிங்கள மக்களுக்கும் பொருந்தும் ,தமிழ் மக்களுக்கும் பொருந்தும். கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களின் எல்லாத் துயரங்களுக்கும் ஊற்று மூலம் அதுதான். இனிமேல் சிங்கள மக்களின் எல்லாத் துயரங்களுக்கும் அதுவே ஊற்று மூலமாக அமைந்து விடுமா?

சீனாவின் பட்டியும் பாதையும் என்றழைக்கப்படும் உலகளாவிய வியூகத்தின்படியும் இலங்கைத் தீவுக்கு மிகப் பெரிய கேந்திர முக்கியத்துவம் உண்டு. அதுபோலவே பட்டியும் பாதையும் திட்டத்துக்கு எதிரான அமெரிக்காவின் இந்தோ- பசிபிக் மூலோபாய திட்டத் தின் படியும் இலங்கைத் தீவுக்கு மிகப்பெரிய கேந்திர முக்கியத்துவம் உண்டு. அதாவது பூமியில் உள்ள மூன்று பெரிய பேரரசுகளின் இழுவிசைகளுக்குள் சிறிய இலங்கைத் தீவு சிக்கியிருக்கிறது என்று பொருள். இதனைத் தமது பேரபலமாக பயன்படுத்தி இதுவரையிலும் இருந்த எல்லா இலங்கை அரசாங்கங்களும் தமிழ் மக்களை ஒடுக்கின; ஜெனிவாவை எதிர்கொண்டன. இம்முறையும் ஜெனிவாவை எதிர்கொள்வதற்கு அப்படியொரு வியூ கத்தைத்தான் ராஜபக்சக்களும் வகுத்து வைத்திருப்பதாக தெரிகிறது.

> **இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து அதை ஒரு பேரபலமாக இலங்கை ஆட்சியாளர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இப்போதிருக்கும் அரசாங்கத்தின் இரண்டு பெரிய பலங்களாவன, முதலாவது உள்நாட்டில் யுத்த வெற்றி. இரண்டாவது, பிராந்தியத்திலும் பூகோள அளவிலும் சீனாவுக்கு நெருக்கமாக இருப்பது.**

ஜெனிவா எனப்படுவது இனப்பிரச்சினையின் நீட்சியே. இன முரண்பாடுகளின் விளைவாகத் தோன்றிய போரில் வெற்றிகொள்வதற்கு ராஜபக்சக்கள் கையாண்ட வழிமுறைகளின் விளைவே ஜெனிவா. எனவே ஜெனிவா இனப்பிரச்சினையின் 2009 க்குப் பின்னரான நீட்சி எனலாம். இந்த அடிப்படையில் பார்த்தால், இனப்பிரச்சினையை எதிர்கொள்வதற்கு எப்படிப்பட்ட ஒரு வியூகத்தை இலங்கை அரசாங்கங்கள் வகுத்தனவோ அப்படிப்பட்ட ஒரு வியூகத்தைத்தான் இப்போதிருக்கும் ராஜபக்ச அரசாங்கமும் வகுக்கப் போகின்றதா?

அட்மிரல் ஜெயந்த கொலம்பகே கூறுவதுபோல இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து அதை ஒரு பேரபலமாக இலங்கை ஆட்சியாளர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இப்போதிருக்கும் அரசாங்கத்தின் இரண்டு பெரிய பலங்களாவன, முதலாவது உள்நாட்டில் யுத்த வெற்றி. இரண்டாவது, பிராந்தியத்திலும் பூகோள அளவிலும் சீனாவுக்கு நெருக்கமாக இருப்பது.

இதன் காரணமாக உள்நாட்டில் அவர்கள் தொடர்ச்சியாக சிங்கள பௌத்த பெருந்தேசியவாத உணர்வுகளுக்கு தலைமைதாங்கி தேர்தல் வெற்றிகளை குவித்து வருகிறார்கள். இந்த மக்கள் ஆணையை வைத்துக்கொண்டு வெளி உலகத்துக்கு வகுப்பு எடுக்கிறார்கள். அதேசமயம் சீனாவை நெருங்கிச் செல்வதன்மூலம் தமது பேரபலத்தை அதிகப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவர்கள் மேலும் சீனாவை நோக்கி நெருங்கிச் செல்வதைக் குறைக்க அவர்கள் மீது அதிகரித்த அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாத ஒரு நிலைக்கு இந்தியாவையும் அமெரிக்காவையும் தள்ளிவிட்டிருக்கிறார்களா?

இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட 'யூடியூப்' நேர்காணலில் அட்மிரல் ஜெயந்த ஒரு விடயத்தை திரும்பத் திரும்ப கூறுகிறார், இந்தியாவின் பாதுகாப்பு நலன்களை மீறி இலங்கை எந்த ஒரு முடிவையும் எடுக்காது என்று. ஆனால் கடந்த ஓராண்டு கால நடைமுறை அப்படிப்பட்டது அல்ல. இந்தியா தொடர்பில் ஜெயந்த கொலம்பகேயும் ராஜபக்சக்களும் வார்த்தைகளால் இந்தியாவுக்கு அபிஷேகம் செய்கிறார்களே தவிர நடைமுறையில் அவர்கள் சீனாவை நெருங்கிச் சென்று தமது பேரத்தை அதிகப்படுத்துகிறார்கள் என்பதே சரி. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விடயத்திலும் யாழ்ப்பாண தீவுகளில் மின் ஆலை அமைக்கும் விடயத்திலும் அவர்கள் இந்தியாவுக்கு விசுவாசமாக இல்லை என்பதை கண்டுபிடிப்பதற்கு பெரிய அரசறிவியல் அறிவு தேவையில்லை. எனினும் ஜெனிவாவில் இம்முறை இந்தியா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் விடும் வாய்ப்புக்களே அதிகம் என்ற ஊகங்கள் உண்டு.

ஜெனிவாவில் இலங்கை அரசாங்கம் தனது பேரபலம் சீனா என்று நம்புகின்றது. ஏனெனில் ஜெனிவா கூட்டத் தொடருக்குப் பல மாதங்களுக்கு முன்னரே சீனா, தான் இலங்கை அரசாங்கத்தை ஜெனிவாவில் பாதுகாக்க போவதாக பகிரங்கமாக அறிவித்து விட்டது. எனவே சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதரவை நம்பி இலங்கை அரசாங்கம் ஜெனிவாவுக்கான தனக்கு வியூகத்தை வகுக்க போகின்றதா? என்ற கேள்வி இங்கு முக்கியம்.

இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட அந்த நேர்காணலில் அட்மிரல் கொலம்பகே மேலும் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுகிறார் "முன்னைய அரசாங்கம் உருவாக்கிய நிலைமாறுகால நீதிக்கான கட்டமைப்புக்கள் சிலவற்றை தாங்கள் தொடர்ந்தும் நிர்வகிக்கின்றோம்; அவற்றைப் பலப்படுத்தப் போகிறோம்; அவற்றுக்கு வேண்டிய நிதியை வழங்கப் போகிறோம்; அந்த கட்டமைப்புகளுக்கான இந்த ஆண்டுக்குரிய செயல்திட்டத்தை உருவாக்குமாறு கேட்டிருக்கிறோம்" என்றெல்லாம் கூறுகிறார்.



காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் (ஓ.எம்.பி), இழப்பீட்டு நீதிக்கான அலுவலகம், சாட்சிகளையும் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாப்பதற்கான அலுவலகம் போன்றவற்றைத் தொடர்ந்தும் இயக்குவதற்கு அரசாங்கம் தயார் என்ற செய்தி அந்த நேர்காணலில் உண்டு. இது நிலைமாறுகால நீதி தொடர்பில் ஒரு உள்நாட்டு வடிவத்தை, அதை இன்னும் தெளிவாகச் சொன்னால் ராஜபக்ச பாணியிலான ஒரு உள்நாட்டுப் பொறுப்புக்கூறும் பொறிமுறைக்கு அவர்கள் தயார் என்ற செய்தி அதில் உண்டு.

ஆனால் அந்த அலுவலகங்களை பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தவிர அந்த அவலுவலகங்களுக்கு போதிய வளங்கள் இல்லை. ஓ.எம்.பிக்கு வாகனங்களே இல்லை. இழப்பீட்டு நீதிக்கான அலுவலகத்துக்கு ஒரு வாகனம்தான் உண்டு. இந்த அலுவலகங்கள் புதிய அலுவலர்களை இணைக்க முடியாது. ஐ.நா., ஐ.சி.ஆர்.சி போன்றவற்றிடம் இருந்து துறைசார் ஒத்துழைப்பைப் பெற முடியாது என்பதே உண்மை நிலையாகும். எனவே ஒருபுறம் முன்னைய தீர்மானங்களின் விளைவாக உருவாக்கப்பட்ட சில கட்டமைப்புகளை தொடர்ந்தும் அவற்றின் செயலற்ற நிலையில் பேணிக்கொண்டு, இன்னொருபுறம் சீனாவுடனான பேரபலத்தை வைத்துக்கொண்டு நிலைமைகளை கையாளலாம் என்று அவர்கள் நம்புகிறார்களா?

இப்படிப்பட்டதொரு பின்னணியில்தான் இம்முறை ஜெனிவாக் கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட இருக்கும் ஐ.நா .தீர்மானத்தின் பூச்சிய வரைபு வெளிவந்திருக்கிறது. இந்த வரைபு தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றாத ஒரு வரைபு. அண்மையில் மூன்று தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகங்களும் ஒன்றிணைந்து ஜெனிவாவுக்கு அனுப்பிய கோரிக்கைகளை ஐ.நா. கவனத்தில் எடுக்கவில்லை என்பதைத்தான் பூச்சிய வரைவு காட்டுகிறது. அதை விடக் குறிப்பாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைக்கும் இந்த முதல் வரைபுக்கும் இடையே பாரதூரமான இடைவெளிகள் உண்டு.

ஆனால் இது ஆச்சரியப்படத்தக்க அல்லது எதிர்பாராத ஒரு இடைவெளி அல்ல. இதற்கு முன்னரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைகளுக்கும் ஐ.நா. தீர்மானங்களுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன. அதுமட்டுமல்ல ஐ.நா. வின் சிறப்பு தூதுவர்களின் அறிக்கைகளுக்கும் ஐ.நா. தீர்மானங்களுக்கும் இடையில்கூட இடைவெளிகள் உண்டு. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைகள் பெரும்பாலும் துறைசார் நிபுணர்களால் தொகுக்கப்படுகின்றன. சிறப்புத் தூதுவர்களும் அவ்வாறு துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களே.

எனவே துறைசார் நிபுணத்துவம் ஊடாக தொகுக்கப்படும் அறிக்கைகள் பெருமளவுக்கு உண்மைக்கு கிட்டவாக வருகின்றன. ஆனால் ஐ.நா. தீர்மா னங்கள் அவ்வாறு அல்ல. எல்லா ஐ.நா. தீர்மானங்களும் அரசுகளின் தீர்மானங்களே.

(22ஆம் பக்கம் பார்க்க)

# தவக்கால சிந்தனைகள்

## உடக்கு பாஸ்க்கும் பஸாமும்

## நினைவுச் சின்னங்களும்



தமிழ் கிறிஸ்தவத்துக்கு ஒரு ஈழமரபுண்டு. அது ரோமின் திருச்சபை ஆளுகைக்குட்பட்டதாயினும், தமிழ் கிறிஸ்தவத்தின் உலகளாவிய தன்மைகளை பகிர்ந்து கொண்டதாயினும், அதன் அமைவிடம் சமூக பண்பாட்டு வரலாறு அதன் வரலாற்று உரு வாக்கத்தில் மேலாதிக்கம் செலுத்திய காரணிகள் அதன் உள்ளூர் பண்பாட்டுக் களங்கள் மற்றும் அவற்றின் மோதல்கள் என்பனவற்றினால் அதன் சிறப்புப் பண்புகள் உருவாகின எனச் சுருக்கமாகக் கூறலாம். . அதற்கு அதற்கான தனிமுகம் உண்டு. ஆனால், அந்தத் தனியடையாளச் சிறப்பினை இனங்காணவும், அதனைப் பாதுகாக்கவும் எம்மிடையே முயற்சிகள் இன்றுவரை இல்லை என்பதுதான் எமது துரதிஸ்டம். பெரும்பாலான மரபுரிமைகள் மற்றும் பண்பாட்டுத் தனியடையாளங்கள் தொடர்பான ஆய்வுகள் பல்கலைக்கழகங்களில் எழுதி பட்டங்கள் வாங்கி அவற்றைப் பறக்கவிட்டுக் குதூகலிப்பதோடு சரி. அறிவையும் புலமை மரபினையும் மக்கள் மயப்படுத்தாத கல்வியும் கல்வியாளர்கள் என்போரும் வேறெதைச் செய்ய முடியும்? அவரெவரும் அதனை செயற்பாட்டுநிலையில் பாதுகாக்க எந்தச் செயற்பாட்டிலும் ஈடுபடத் தயாராயில்லை. வெற்றுச் சடங்காகத் தேசியத்தின் துதிகளை மேடைக்கும் தேர்தல் ஓட்டுக்கும் பாவிக்கும் அறிவியல் மற்றும் அரசியல் களத்தில் வேறெதையும் நாம் எதிர்பார்த்தல் என்பது எமது முட்டாள்தனமாகவே இருக்கும்.

இந்தக் குருட்டுத்தனங்களின் பின்னணியில் தான் எமது தேவாலயங்களது பழைய நெடுத்த மரத் தூண்களை தென்னிலங்கை வியாபாரிகளைத் தேடி அழைத்து மகிழ்ச்சியாக விற்றுக்கொண்டிருக்கும் வரலாற்று அறிவீனத்துக்குக் காரணம். இதுதான் காலனியகாலத்த கட்டடச் சிறப்புடைய முக்கியமான குருமனைகள் வேரோடு பிடுங்கி உறியப்படவும், அவ்விடத்தில் பண்பாட்டு சிறப்போ கட்டடவியல் தனித்துவமோ இல்லாத கொங்கிறீற் கட்டிகள் மிதக்கவும் காரணமாய் உள்ளன. இந்த மனநிலைதான் ஊர்காவற்துறை கத்தோலிக்க தேவாலயங்களது பழைய உடக்குபாஸ்க்குப் பொம்மைகளது சிரசுகள் தென்னிலங்கை அரும்பொருளாகச் சந்தை வியாபாரிகள் கூட்டியள்ளிச் சென்று விற்கும் வரை பாராமுகமாய் இருந்தது. அல்லது அதன் சமய பண்பாட்டு முதன்மை தெரியாது அதனை மரபுரிமை சின்னமாகப் பார்க்காது பழையதாய் அதனால் கழிக்கப்பட வேண்டியதாய்ப் பார்த்தது. அதுவேதான் பழைய மரத்தாலான சிம்மாசனங்களை தேவாலயங்களில் இருந்து பிடுங்கி வீசவும் காரணமாகி இருக்கிறது.

இந்த கிறிஸ்தவ மரபுரிமை இழப்பில் தவக்காலம் சார்ந்த சிறப்பு வழக்காறுகளும் மெல்ல மறைவடைந்து செல்வதை அல்லது வலுக்குன்றி விரும்பத்தகாத மாற்றங்கள் அடைவதைக் காண்கின்றோம். யுத்தம், இடப்பெயர்வுகள், சாதி முறைமை உள்ளிட்ட சமூக அமைவு மற்றும் பொருளாதார நிலவரங்களும், நிலைமாற்றங்களும் இந்த மெல்ல இனிச் சாகும் என்ற நிலவரத்துக்குப் பெரியளவில் பங்களிப்புச் செய்துள்ளன. ஆயினும், இதில் பெரும் பொறுப்பேற்க வேண்டிய திருச்சபை, கிறிஸ்தவ சமூகத்தலைவர்கள், மரபுரிமையிலாளர்கள் முதலானோர்கள் இதற்கான பரிகாரத்தைத் தேடுதல், அதனைக் காப்பாற்றி அடுத்த தலைமுறைக்கு கைமாற்றுதல் என்பன பற்றிச் சிந்திக்காமல் இருத்தல் என்பதுதான் இதன் கவலைக்குரிய விடயம் ஆகும். இது எமது அடையாள அரசியலின் சிந்தனை வறுமை அடிப்படை அற்ற வெற்றுக் கோசமாய் மட்டும் இனத்துவம், பண்பாடு ஆகியவற்றை காவிச் செல்லும் பண்புகளை மறுபடியும் உறுதி செய்வது போலுள்ளது.

இந்தவகையில், உடக்கு பாஸ்க் எனும் தவக்காலத்தை முன்னிட்டு யேசுபிரானின் திருப்பாடுகளை மரப் பொம்மைகளைக் கொண்டு ஆட்டுவித்துக் காட்டும் பழம்பெரும் வடிவம் தன் முன்னைய சோபையையைப் பெருமளவுக்கு இன்று இழந்துள்ள முக்கியமான தவக்காலகட்டத்து வடிவமாகும். அதற்கு ஒரு சடங்கு நிலைப்பட்ட பரந்த பின்புலமும் உண்டு. ஏறத்தாழ யாழ்குடாநாட்டின் பிரதானமான கத்தோலிக்கத் தேவாலயங்கள் சார்ந்து, அவ்வவ்விடத்திற்கேயான தனி வேறுபாடுகள் மற்றும் பிராந்தியப் பண்பாட்டுப் பொதுமைகளோடு அவை ஆற்றப்பட்டுள்ளது. இன்று பெரும்பாலான தேவாலயங்களில், அவை ஆற்றப்படுவதில்லை: பல உடக்குகளை இன்று காணவில்லை என்றும் சொல்கிறார்கள். இறுதியாக இன்று உடக்கு ஆற்றுகையில் மிஞ்சியிருப்பது யேசுவை சிலுவையில் அறைதல் இறக்குதல் மட்டும்தான். கேள்வி என்னவென்றால், உடக்கு பாஸ்க்கை மறுபடி நிலை




நிறுத்த முயற்சிக்காமல் நாம் இருப்பதன் பின்னணி என்ன? அதனை இக்காலகட்டத்துக்கு தேவையற்ற ஒன்று என நம்புகிறோமா?. பேசாலையிற் கூட பல ஆண்டுகள் ஆற்றுகை செய்யாது விட்ட பின்தானே மறுபடி அதனை சமீப ஆண்டுகளில் மறுபடி மீள ஆற்றுகைநிலைக்குக் கொண்டுவந்தார்கள்.

ஆனால், மீள் ஆற்றுகைக்குக் கொண்டுவந்த போது நிகழ்தப்பட்ட வைபர் முதலியவற்றால் உடக்கை தயாரித்தல் முதலியன தொடர்பான அவர்களது செயற்பாடுகள் தொடர்பில் தனியாக விவாதிக்க வேண்டும். ஆனால், மீள ஆற்றுகைக்கு கொண்டு வந்தமை என்பது முக்கியமான ஓர் முடிவும் செயற்பாடும் ஆகும்.

இதனைப் போலவே பெரியவெள்ளியை முன்னிட்டுப் பாடப்படும் பஸாமைப் பாடும் முறையும் செயற்பாடும் கூட நலிவடையத் தொடங்கியிருக்கிறது. ஒருபுறம் அதனைப் பாடுதல் குறைவடைந்து செல்லுதல் நிகழும் அதேவேளை, அதனுடைய ஒலிப்பதிவை ஒலிபரப்பும் பெரும்போக்கும் உருவாகிறது. அது இயந்திரத்துக்கும் மனித உடனிருப்புக்கும் இடையிலான வேறுபாடு முதற்கொண்டு அதனை நுகர்வோரது, நுகர்வு வேறுபாடுவரை செல்வாக்குச் செலுத்தி அதன் ஆற்றுகை மற்றும் மதரீதியான பெறுமானங்களைக் கீழிறக்குகிறது. அதுமட்டுமின்றி அடுத்தலைமுறையினரிடையே பஸாமைப் பாடுவோர் இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு அதனைப் பாடத் தக்க இளையோர் இல்லை என்பதுடன், அதனை உருவாக்குவதற்கான எந்தவிதமான எத்தனிப்புக்களும் இல்லை என்பதுதான் மிகவும் கவலைக்குரிய அம்சம். "ஐயோ கிறிஸ்தவர்களே" என பஸாமில் இடம்பெறும் வார்த்தைகளது அர்த்தம் மேலும் விரிவடைந்து விட்டது போலத் தோன்றுகிறது.

இந்த வரிசையில் ஏறத்தாழ இழக்கப்பட்டே விட்டது என்ற நிலையில் இருப்பது உயிர்த்த ஆண்டவர் சொரூபத் திருவுலா நிகழ்வு. ஏறத்தாழ ஒரு தசாப்தத்துக்கும் மேலாக அதன் உலாவும் உயிர்த்த ஆண்டவர் பாடல் பாடும் மரபும் பின் தள்ளப்பட்டிருக்கிறது என அறிய முடிகிறது. உயிர்த்த ஞாயிறன்று ஊர் முழுதும் காவிச்செல்லப்படும் ஆண்டவரது திருச்சொரூபங்கள் இன்று வெளிச் செல்வதுமில்லை. அதற்கான பாடல்கள் பாடப்படுவதும் இல்லை யாழ்ப்பாணப் பட்டினத்தின் கடற்கரைத் தெருக்களில் குருநகரில் இருந்து புறப்பட்டு வரும் யேசுநாதரும், பாசையூரில் இருந்து புறப்பட்டு வரும் யேசுநாதரும் சந்திக்காமல் போய் பலவருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் அதைப்பாடுவோரும் அந்த நிகழ்ச்சியை செய்வோரும் பாடிப்பரவி அதனைச் செய்யத் தயாராக இருந்தும் ஏன் அதற்கான ஏற்பாடுகளை சம்மந்தப்பட்ட கிறிஸ்தவத் தரப்புக்கள் செய்வதில்லை? என்பது மிகப் பெரிய கேள்வியாக உள்ளது. ஒன்றைக் கண்டும் காணாமல் விடுதல் என்பது அதனை மெல்ல அழியவிடும் தந்திரோபாயம் என்று சொல்வர்கள். அப்படியானால் ஆண்டவர் உயிர்த்தெழுந்த இந்த நிகழ்ச்சி முக்கியமற்றது என நாம் கருதுகிறோமா அல்லது ஆண்டவரை நினைவு கூர குறிப்பிட்ட சிலருக்கே அனுமதிக்கப்பட்டுள்ளாதாக நினைக்கின்றோமா? "வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே என்னிடம் வாருங்கள்" என்று யேசுபிரான் அழைத்தாரே அதன் அர்த்தம் ஆதிக்கம் உடையவர்களும் மட்டும் தான் மதப் பயில்வுகளும்? கடவுளும் என்றாகுமா?

இந்தவகையான உள்ளார்ந்த பிரச்சினைகளைச் சீரமைத்து கிறிஸ்தவ மரபுரிமைகளைப் பேணுவதும், பாதுகாப்பதுவும் எமது கடமையமல்லவா? சமூகம் என்பது எப்போதும் ஏற்றத்தாழ்வுகளது மோதற் களந்தான். முரண்பாடுகளுக்கு நடுவிலும் அதிகாரப் போட்டிகளுக்கு நடுவிலும் நீதியின் பாற்பட்டதும் சமூகத்தின் ஒட்டுமொத்தத் நலன்களுக்கு சேவை செய்வதும், அனைத்துத் தரப்புக்களது நியாயபுர்வமான நடத்தைகளுக்கும் இடம்கொடுப்பதுமான பரந்த செயற்பாடு எமக்கு அவசியம். எந்தவொரு மதமும் அதனை நோக்கித்தான் பயணம் செய்ய வேண்டும்.

இந்தப் பின்னணியில் உயிர்த்த ஆண்டவருக்கான சிறப்பு வழிபாட்டு மரபுகள் மறுபடியும் வெளிக்கொணரப்பட வேண்டும். எங்கோ ஒரு மூலையில் யாரொருவர் தமது வழிபாட்டு முறைகளை ஒளித்து நிறைவேற்றுதலோ அல்லது அதனைக் கூடச் செய்ய முடியாது மனம் வெம்புதலோ நடக்கக் கூடாது. அத்துடன் அவ்வாறு நாம் செய்யத் தவறின் அது ஒருவகையான சமய வழிபாட்டு உரிமை மறுப்புத்தான் அவ்வகையில் பரந்துபட்ட அளவில் அது மனித உரிமை மீறலும் கூட.

ஒருவகையில் ஆக்கபூர்வமான சடங்குகள் சம்பிரதாயங்கள், விழாக்கள் என்பவை ஒரு சமூகத்தை இறுகப் பிணைப்பதும், ஒன்றிணைப்பதும் தான். அது ஒருவகையில் மரபுரிமை இன்னொரு வகையில் வரலாற்றின் சுவடு. அது மக்களை சுட்டு பிணிநீக்கம் (heeling) செய்பவை. எமது பண்பாட்டுப் பெருமையும் சுய அடையாளத்தின் பலவகைக் கூறுகளில் ஒன்றுமாகும்.

# என்ன நடந்தது ராகுலுக்கு?




○ பா.குமுதன்

இருட்டத் தொடங்கியிருந்தது. ஆனால் இன்னும் ராகுல் வீட்டுக்கு வரவில்லை. பேர்த்தியார் (அப்பம்மா) புறுபுறுக்கத் தொடங்கினார்.

"ரீயூசனுக்குப் போனவனை இன்னும் காணேலையே? எங்க விளையாடிக்கொண்டு நிக்கிறானோ தெரியேலையே. இந்த வயசான காலத்தில என்னை அலைக்கழிக்கிறதுக்குத்தான் உவன் இருக்கிறான்" என்று அருகில் இருந்த தன் கணவருக்கு ( அப்பப்பா) சொன்னாலும், உள்ளூர ஒரு பயம் எட்டிப்பார்த்தது.

'இவ்வளவு இருட்டின பிறகு ஒருநாளும் அவன் வீட்ட வராமல் நிண்டதில்லை. எதுக்கும் ஒருக்கா தேடிப்பாப்பம்' அப்பம்மாவும், அப்பப்பாவும் ராகுலைத் தேடத் தொடங்கினர்.

அவர்கள் முதலில் போன இடம் பாடசாலை. அங்குதான் மேலதிக வகுப்பு நடப்பதாக ராகுல் சொல்லியிருந்தான். சில சமூக ஆர்வலர்களின் முயற்சியில் கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை நடத்தும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மாலை 3 மணியில் இருந்து 5 மணி மட்டும் அந்த வகுப்புக்கள் பாடசாலையில் நடக்கும். ஆனால் அங்கு எவருமில்லை. ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று விசாரித்தால், ஏதும் தகவல் கிடைக்கலாம். அங்கும் போனார்கள். ஆனால்..

" அவன் இண்டைக்கு வகுப்புக்கே வரேலையே"

ஆசிரியர் கை விரிக்க, அப்பம்மாவுக்கு நெஞ்சில் 'பகீர்' என்றிருந்தது.

"அப்படியெண்டால் எங்க போயிருப்பான் இவ்வளவு நேரமும்? லொயித் வீட்டுக்குப் போய் வீட்டுப் பாடம் செய்து போட்டுத்தான் வகுப்புக்கு போக வேணும் எண்டுதானே வேளைக்கே வெளிக்கிட்டவன். அப்ப சிலவேளை லொயித் வீட்டில நிப்பான். அங்க போய் கேட்டுப் பார்ப்பம்" இருவரும் அங்கு விரைந்தனர்.

## மோப்ப நாய் அடையாளம் காட்டியது பிழையா?

### எங்கும் இல்லை ராகுல் 1

லொயித் வீட்டில் யாருமே இல்லை.

அதற்கிடையில் ஊரெங்கும் தகவல் பரவ, ராகுலை எல்லோருமாகத் தேடத் தொடங்கினர். குளங்கள், பற்றைகள், கிணறுகள் எல்லாம் சல்லடை போட்டு தேடியும், ராகுலைக் காணோம்.

ஓமந்தைப் பொலிஸாருக்கும் தகவல் தெரியப்படுத்தப்பட்டது. அவர்களும் வந்து தேடுதலில் இறங்கினர்.

'ஒருவேளை தன் தாயின் இடமான வவுனியா, முருகனூருக்கு போயிருப்பானோ?' என்ற சந்தேகம் சிலருக்கு வர, அங்கும் தேடுதல் தொடங்கியது.

ம்கூம். அங்கும் அவனில்லை.

'இப்போது என்ன செய்வது? எங்கு இனி அவனைத் தேடுவது?' எல்லோரும் கையைப் பிசைந்து கொண்டிருந்தபோதுதான், லொயித் என்ற சிறுவன் தன் தாய் மற்றும் தங்கையோடு வந்து கொண்டிருந்தான். லொயித்தின் தங்கையும், ராகுலும் ஒரே வகுப்புத்தான். அவன் வீட்டில் தான் படித்துவிட்டு, மேலதிக வகுப்புக்கு செல்வதாக ராகுல் அப்பம்மாவுக்கு சொல்லியிருந்தான்.

'சரி, லொயித்தைக் கேட்டால் ஏதும் தெரியும்'

எல்லோருக்கும் கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது.



### "முகமூடி போட்டவர் கடத்தினார்" 2

"ராகுலைக் கண்டனியோ? உன்ர வீட்ட தானே போறதாச் சொன்னவன். வந்தவனோ? " என்று எல்லோரும் விசாரிக்க, லொயித் மிரண்டான். அவன் பார்வையில் அச்சம். தயங்கித் தயங்கி அங்கிருந்தவர்களுக்கும், பொலிஸாருக்கும் அவன் ஒரு தகவலைச் சொன்னான். அந்தத் தகவலைக் கேட்டு எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது.

"மோட்டார் சைக்கிளில வந்த மாமா ஒராள் ராகுலைத் தூக்கிக்கொண்டு போட்டார். கறுப்புத் துணியால முகத்தை கட்டியிருந்தார். ராகுல் கத்தினவன்.ஆனால்; அவன்ர புத்தக 'பாஃக்'கையும் தூக்கி எறிஞ்சு போட்டு அவனை பிடிச்சுக்கொண்டு போட்டார்"

லொயித் அப்படியொரு இடியை வார்த்தைகள் வழியே இறைக்க, எல்லோரும் கல்லாய்ச் சமைந்தனர்.

லொயித் சொன்ன தகவல்களின் அடிப்படையில், கடத்தல் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் இடத்தருகே (லொயித்தின் வீட்டுக்கு முன்னே உள்ள காணியில்) ராகுல் புத்தகப்பை பற்றைக்குள் வீசப்பட்ட நிலையில் அநாதரவாக இருந்தது.

### 3 நம்புவதா? விடுவதா?

ஆனால் சிலர் லொயித் சொன்ன கடத்தல் கதையை நம்பத் தயாராயில்லை.

" எங்கட ஊரில இப்பிடியொரு வேலையைப் பட்டப்பகலில செய்ய அப்பிடி ஆருக்கு துணிவு? இப்பிடிக் கடத்தல் நடந்திருந்தால் லொயித் அப்போதையே சொல்லியிருக்க வேணுமே. ஏன் சொல்லேலை?"

ஆனால் அந்தச் சந்தேகத்தை எப்படி நிவர்த்தி செய்வதென்று தெரியாத நிலை. லொயித் சொல்வதை நம்புவதா? விடுவதா ? என்று இரண்டும் கெட்டான் நிலை.

கடத்தல்காரன் வந்து போனான் எனச் சொல்லப்படும் வீதியோரமாக இருந்த பண்ணை ஒன்றில் இரகசியக் கண்காணிப்பு கமெரா பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் கமெராவை பரிசோதித்தும் அப்படி எவரும் முகமூடியோடு வந்து போன தடயமில்லை.

நள்ளிரவு ஒரு மணி.

ராகுல் எங்கே? அந்தக் கேள்விக்கு மட்டும் இன்னும் விடை காணாமலேயே கிராம மக்கள் அனைவரும் வீடுகளுக்குத் திரும்பினர்.

### 4 கிணற்றில் பலூன்

காலை விடிந்தது.

மீண்டும் கிராம மக்கள் ஒன்று கூடினர்.

லொயித் கூறிய தகவலில் ஏற்கனவே சந்தேமடைந்திருந்த சிலருக்கு இன்னொரு தகவல் புதிதாகக் கிடைத்தது.

முதல்நாள் மாலை ( சம்பவ தினம்) லொயித் வீட்டின் கிணற்றடியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்துள்ளனர்.

அதனைக் கண்ட சிலர் காலையில் தகவலைச் சொல்ல, எல்லோரும் லொயித் வீட்டுக் கிணற்றடியில் குவிந்தனர்.அங்கே அவர்களின் சந்தேகத்தை இன்னும் உறுதிப்படுத்துவது போல, ராகுலின் பொக்கற்றில் இருந்த பலூன் ஒன்று கிணற்றில் மிதந்தபடி யிருந்தது.

### 5 புதிர் அவிழ்ந்தது

இது ராகுலின்ர பலூன் தான். ஐயோ, எங்கட பேரனும் உதுக்க தான் போல' அப்பம்மா உடைந்து போய், ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டார்.

அதற்கிடையில் கிணற்று நீரை இறைக்கும் வேலை தொடங்கி விட்டது. சில மணி நேரத்தில் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டான் ராகுல். ஊரே சோகத்தில் உறைந்தது. 'பச்சிளம் குழந்தைக்கு இந்தநிலையா?' என்று துயரில் மூழ்கினர் கிராம மக்கள்.ராகுலின் உறவுகளோ கதறியழத் தொடங்கினர். சடலத்தை பார்வையிட்ட நீதவான் அதனை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.லொயித்தும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டான்.

கிணற்றிலிருந்து சடலம் மீட்கப்பட்ட நிலையில் அவனை கடத்திச்சென்றதாக லொயித் சொன்னதெல்லாம் பொய் என்பதை அறிந்த கிராம மக்கள் ஆத்திரத்தின் உச்சாணிக் கொம்புக்கே போய் விட்டனர்.

'அவன் தான் ராகுலை கொலை செய்து போட்டான்'

சனங்கள் முடிவெடுத்தனர்.



6

# என்ன நடந்தது?

சமநேரத்தில் ஓமந்தைப் பொலிஸாரால் லொயித்திடம் வாக்குமூலம் பெறப்பட்டது.
அப்போதுதான் நடந்ததை லொயித் கக்கத் தொடங்கினான்.
"நான் பள்ளிக்கூடத்தால வந்து வீட்டை நிண்டனான். அப்பதான் ராகுல் எங்கடை வீட்ட வந்தவன். பசிக்குது எண்டு சொன்னவன். பிறகு ரெண்டு பேரும் ஓடிப்பிடிச்சு விளையாடுவமா எண்டு கேட்டான். நானும் ஓமெண்டன். அப்பிடி விளையாடேக்க அவன் முன்னால ஓடிக்கொண்டிருந்தவன். நான் அவனைப் பின்னால துரத்திக்கொண்டு போனனான். அப்ப இடையில இருந்த வயரில தடக்குப்பட்டு கிணத்துக்குள்ள விழுந்திட்டான். விழுந்த உடனயே கை காலை உதறினவன்.. 'அம்மா.. அம்மா..' எண்டு கத்தினவன்..எனக்குப் பயம் வந்திட்டுது. நான் அவன்ர புத்தக 'பாக்'கை றோட்டுக்கு அங்கால இருக்கிற காணிக்குள்ள எறிஞ்சு போட்டு ரீயூசனுக்குப் போட்டன். பிறகு வந்து பாத்தன்.. கிணத்துக்க ஒருத்தரும் இருக்கேல்லை. அம்மாவும், அப்பாவும் அதுக்குப் பிறகு தான் வீட்டை வந்தவை"என்று அவன் சொன்ன வாக்குமூலத்தில், ராகுலுக்கு என்ன நடந்தது என்ற உண்மை எல்லோருக்கும் தெரியவந்தது.

7

## ராகுல்: ஒரு முன்கதை

ராகுல். 7 வயதேயான சிறுவன். அவன் பெற்றோரின் இல்லற வாழ்வு அவ்வளவு இனிமையாக இருக்கவில்லை. தாயாருக்கும், தந்தைக்கும் மனக்கசப்பு. நாளடைவில் விவகாரத்துக் கோருமளவுக்கு நிலைமை சென்றது. தாயும் தந்தையும் பிரிந்து வாழத் தொடங்கினர். ராகுல் தன் தாயுடன் முருகனூரில் சிலகாலம் வசித்தான். ஆனால் ராகுலுக்கு நான்கு வயதாக இருக்கும் போது, தாய் மத்திய கிழக்கு நாடொன்றுக்கு பணி நிமித்தம் செல்ல வேண்டிய நிலை. அதனால் தன் கணவரின் பெற்றோரிடம் ராகுலை அவர் ஒப்படைத்து விட்டு சென்றுள்ளார். கணவனுடன் முரண்பாடு இருந்தபோதும், தினமும் ராகுலுடன் தொலைபேசியில் கதைத்து வந்துள்ளார் தாய். ராகுலுக்குத் தேவையான சில உதவிகளையும் செய்துள்ளார்.
இந்த நிலையில் ராகுலின் தந்தை வேறு ஒரு பெண்ணை திருமணம் முடித்து , ஒரு குழந்தையுடன் முல்லைத்தீவில் வசித்து வருகின்றார். என்றாலும் அவருக்கும் ராகுல் மீது அளவு கடந்த பாசம். ராகுல் தனது அப்பம்மா, அப்பப்பாவுடன் நவ்வி என்ற இடத்தில் தான் வளர்ந்து, படித்து வந்தான். கடைசியில் இப்படி ஒரு அவலமான சாவு அவனை வந்து சேர்ந்து விட்டது.

## கொலையேதான்.....!

8

இது நிச்சயமா கொலைதான். என்ரபிள்ளை வீட்டுக் கிணத்துப் பக்கமே போறவனில்ல. அப்பிடியிருக்க அந்த வீட்டில எப்பிடி கிணத்துக்கு கிட்டப் போயிருப்பான்? அண்டைக்கு நான் முல்லைத்தீவில நிண்டன். காலமை மகனோட (ராகுலோட) போனில கதைச்சனான்.எனக்கு காலில சின்னக்காயம் ஒண்டு இருந்திச்சு. 'அப்பா..கவனமா இருங்கோ' எண்டு என்ர பிள்ளை(ராகுல்) சொல்லிச்சு.
'நீயும் குழப்படி செய்யாமல் இரு. அப்பா பின்னேரம் வாறன்' எண்டு சொன்னன். பிறகு லொயித் வீட்டுக்கு வீட்டுப்பாடம் செய்யப் போனவன் எண்டு அம்மா சொன்னா. வழமையா ரீயூசன் போய்வாறவன்தானே. அதால நான் பெருசா ஒண்டும் நினைக்கேல்ல. பின்னேரம் 6 மணிக்கு பிறகுதான் பிள்ளையக் காணேல்லை எண்டு போன் வந்திச்சு. உடனயே வெளிக்கிட்டு வந்திட்டன். அவனைத் தேடாத இடமேயில்லை. கடைசியாப் பிணமாத்தான் என்ர பிள்ளைய மீட்டன். இத்தினை வருசத்துக்கு என்ர பிள்ளை அந்த வீட்டுக்குப் போனதே இல்லை. அண்டைக்குத்தான் போனவன்.
என்ர பிள்ளையின்ர சாவில எனக்கு சந்தேகம். அவன் செத்த பிறகு அதை மறைக்கிறதுக்காக அவனைக் கிணத்துக்க தூக்கி போட்டிருக்கினம். விடியப்பிறம் 4 மணி அப்பிடித்தான் அவனை கிணத்தில போட்டிருக்க வேணும்.. அவனைக் காணேல்ல என்று தேடும் வரைக்கும் அதை மறைச்சிட்டாங்கள். லொயித்தின்ர அம்மா அப்பாவுக்கும் தெரிஞ்சுதான் என்னமோ நடந்திருக்கு. மத்தியானம் 2 மணிக்கு கிணத்தில விழுந்திருந்தா அடுத்தநாள் விடிஞ்ச பிறகாவது பிணம் தண்ணில மிதக்கத்தானே வேணும்? ஆனால் அப்பிடி நடக்கவே இல்லை"என்று கண்ணீரும் சந்தேகமுமாகச் சொல்கிறார் ராகுலின் தந்தை.

9

## வழமை மாதிரித்தான் வந்தான்

லொயித் அண்டைக்கு மூன்று மணிக்கே ரீயூசனுக்கு வந்திட்டான். சிரிச்சுக் கொண்டு வழமை மாதிரியே வந்தான்.. ரீயூசன் முடிஞ்சு வீட்ட போகேக்கயும் ஒண்டுமே சொல்லாமல் போட்டான்.எதும் சொல்லியிருந்தால் கூட நானும் எதாவது செய்திருக்கலாம். ராகுல் இண்டைக்கு வந்தவனா? எண்டு கேட்க வரேல்ல எண்டு மட்டும் பதில் சொன்னான். ஊருக்குள்ள அண்டைக்கொரு கலியாண வீடு எண்டதால அங்க போயிருப்பான் போல எண்டு நானும் நினைச்சன். நல்லாப் படிக்கக்கூடிய பிள்ளை, கெட்டிக்காரன்" என்கிறார் மேலதிக வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியை.

## மோப்பநாய் ஏன் அவரிடம் போனது?

10

ராகுலுக்கு நடந்த அசம்பாவிதம் தொடர்பாக லொயித்தின் பெற்றோருக்கும் கட்டாயம்



தெரிந்திருக்கும் என்பது கிராம மக்களின் நிலைப்பாடு. ராகுல் காணாமல்போனமை தொடர்பாக லொயித்திடம் விசாரிக்கும் போது அவனது தாய் "அவனுக்கு ஒண்டும் தெரியாது. அவனிட்ட எதுவும் கேட்காதையுங்கோ" என்று சொல்லி ஒத்துழைக்க மறுத்துள்ளார். கிணற்றை இறைப்பதற்கும் அவர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லையாம். இது கிராம மக்களுக்கு பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியது. அத்துடன் பொலிஸாரால் அழைத்துவரப்பட்ட மோப்பநாய் புத்தகப்பையை மணந்துவிட்டு லொயித்தின் தாயின் அருகில் சென்றதாகவும், பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.
சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்த போது தவறுதலாக ஏதோ நடந்திருக்கலாம். அதனை லொயித் தனது தாயிடம் சொல்லியிருக்கக்கூடும். தனது மகனைக் காப்பாற்றுவதற்காக லொயித்தின் தாயார் உண்மையை மறைத்திருக்கலாம் என்பது கிராமத்தவர்களின் சந்தேகம். ராகுலின் சடலம் கிணற்றிலி ருந்து மீட்கப்பட்ட பின்னர் கிராம மக்கள் லொயித்தின் தாயுடன் முரண்பட்டும் இருந்தனர். இதே வேளை ராகுலின் சடலம் மீட்கப்பட்ட நாளில் இருந்து, லொயித்தின் குடும்பம் அந்த ஊரில் இருந்து வெளியேறிவிட்டது.

## நீதிகோரி ஆர்ப்பாட்டம்

11

சடலம் மீட்கப்பட்ட மறுநாள் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன. ராகுலின் மரணத்துக்கு நீதி வேண்டும் என தெரிவித்து கிராம மக்களால் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. சடலத்தை நடுவீதியில் தாங்கியபடி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. "இது மரணமா கொலையா?, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், இப்படி ஒரு குடும்பம் எமது கிராமத்துக்கு தேவையில்லை" என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

12


## உடற்கூற்று அறிக்கை

ராகுலின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் உடற்கூற்று ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. அதன் அறிக்கையில் நீரில் மூழ்கி, பெப்ரவரி 8 ஆம் திகதி மாலை 3 மணியளவில் மரணம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவனது உடம்பில் அடிகாயங்களோ அல்லது வேறு ஏதேனும் அடையாளங்களோ தென்படவில்லை.
"சிறுவன் என்பதால் வழமைக்கு மாறான முறையில் முழுமையான விசாரணை ஒன்றை நாம் முன்னெடுத்து வழக்கு பதிவுசெய்துள்ளோம். கைவிரல் அடையாளம், தடயவியல் அறிக்கை, மோப்பநாய் மற்றும் நீதவான் விசாரணையும் இடம்பெற்றது. அத்துடன் சம்பவ இடத்தில் நின்றிருந்த சிறுவனைக் கைதுசெய்துள்ளோம். அவனது வயதைக் கருத்திற் கொண்டு கைதுசெய்வதற்கு முதலில் நாம் விரும்பாத நிலையிலும் பின்னர் அதனை முன்னெடுத்திருந்தோம். இதே வேளை லொயித்தின் பெற்றோர் வேறு ஒரு வழக்குக்காக வவுனியா நீதிமன்றம் சென்றுவிட்டு மாலை 5.30 மணிக்கே தங்கள் வீட்டுக்கு வந்துள்ளனர் " என்று ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தின் உப பரிசோதகர் சுகந் தெரிவித்தார்.

13

## 10 வயதுச் சிறுவனை சிறையில் அடைக்கலாமா?

10 வயதுச் சிறுவனான லொயித்தை கைது செய்து விளக்கமறியலில் வைப்பது சரியா என்ற கேள்வியும் எமக்கு எழுந்தது. ஆனால், "தண்டனைச் சட்டக்கோவையின் பிரகாரம் 8 வயதுக்கு குறைந்த ஒரு சிறுவன் செய்யும் குற்றத்தை குற்றமாகக் கருதமுடியாது. அதற்கு மேற்பட்ட வயதை உடையவர்கள் குற்றவியல் வழக்குகளில் தொடர்புபட்டால் அவர்களைக் கைதுசெய்ய முடியும் "என்று சட்டத்தை பொலிஸார் சுட்டிக்காட்டுகின்றனர்.
இது தொடர்பாக கருத்துதெரிவித்த சட்டத்தரணி ஒருவர்" குற்றவியல் வழக்குகளில் சந்தேகநபர்களாக 8 தொடக்கம் 12 வயதுகுட்பட்டவர்களை கைதுசெய்து விளக்கமறியலில் வைப்பதற்கு சட்டம் இடம் கொடுக்கின்றது. எனினும் விசாரணை முடிந்து தீர்ப்பு அறிவிக்கும் போது வயது கருத்திற்கொள்ளப்படும் "என்றார்.



ராகுல் மீட்கப்பட்ட கிணறு

# ராஜபக்சக்களிடம் தோல்வியடையும் இந்திய ராஜதந்திரம்




O நிக்ஸன்

ஈழத்தமிழர் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களை இந்திய மத்திய அரசு கையில் எடுக்குமானால், சிங்கள ஆட்சியாளர்கள் அடங்கிப் போவதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் இருக்காது. ஆனால் இந்தியா எப்போதுமே இலங்கையின் பக்கம் சார்ந்து செயற்படுவதால். இந்தியா ஒரு வல்லாதிக்க நாடு என்பதையும் கடந்து சிங்கள ஆட்சியாளர்கள் தன்னிச்சையாகவே செயற்படுகின்றனர். அவ்வப்போது இராஜதந்திர ரீதியாக அவமானப்படுத்தியுமிருக்கின்றனர். இந்துமா சமுத்திரத்தில் இந்தியா ஒரு பிரதான நாடு. ஆனால் சீனா இந்துமா சமுத்திரத்தில் தன்னையும் ஒரு நாடாக செயற்கையாகக் காண்பித்துள்ளது. இது இந்திய மத்திய அரசின் ராஜதந்திரப் பலவீனம் என்று சொல்வதைவிட ஈழத்தமிழர் விவகாரத்தைத் துணிவோடு கையில் எடுக்கத் தவறியதன் விளைவுதான் இன்றைய இந்திய அரசின் இந்த அவல நிலை.

### மெத்தனங்கள் புதிதல்ல

இந்திய ராஜதந்திரத்தை எப்படியும் ஏமாற்றிவிடலாம். அல்லது தமக்குச் சாதகமாக மாற்றிவிடலாம் என்ற சிந்தனைப் போக்கு, ஜே.ஆர்.ஜயவர்த்தன காலத்தில் இருந்தே தொடர்கின்றது. இன்று கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியிலும் இந்திய இராஜதந்திரம் தோற்கடிக்கப்படுகின்றது என்ற கருத்து நிலவுகின்றது. அதில் உண்மையும் இல்லாமல் இல்லை. திருகோணமலை எண்ணெக் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவது என்ற பேச்சும் கொழும்பு புத்துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்திக்கான ஒப்பந்தம் கைவிடப்பட்டதையும் சில உதாரணங்களாக எடுத்துக்கூற முடியும்.

ஆனால் இந்தியாவை தமது தொப்புள்கொடி உறவு என்று ஈழத்தமிழர்கள் பலர் இன்று வரை நம்புகின்றனர். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில் இந்தியா தனது ஆளுகையைச் செயற்படுத்தினால் என்ன என்று விரும்பும் ஈழத் தமிழர்கள் பலர் இருக்கின்றனர். அதேநேரம் ராஜீவ்காந்தி தமிழ்நாட்டில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார் என்பதைக் காரணம் கூறி இன்று வரை ஈழத்தமிழ் மக்களை இந்தியா பழிவாங்குறதா என்ற கேள்விகள் சந்தேகங்களும் ஈழத்தமிழர்கள் மத்தியில் இன்று வரை நிலவுகின்றன.

வடக்குக் கிழக்கு இணைந்த சுயாட்சியுடன் கூடிய ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியா ஏன் இன்றுவரை அங்கீகரிக்கத் தயங்குகின்றது என்ற ஆதங்கமும் அவ்வாறு அங்கீகரித்தால் இந்தியாவுக்கு ஏதும் பிரச்சினை ஏதாவது இருக்கின்றதா என்ற கேள்விகளும் எழாமலில்லை. ஆனால் இன்று இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வை எட்ட வேண்டுமானால், ஈழத்தமிழ் மக்களை ஒரு தேசமாக இந்தியா அங்கீகரிப்பதோடு தமிழ்நாடு உள்ளிட்ட இந்திய மாநிலங்களின் அதிகாரங்களையும் அதிகரிப்பதே சிறப்பான ஏற்பாடாகும்.


தேசிய இனம் ஒன்றை ஒரு தேசமாக அங்கீகரிப்பது என்பது தனி நாட்டுக்கான அங்கீகாரமல்ல. அது அந்த மக்களின் சுயநிர்ணய உரிமையையும் சுயாட்சியுடன் கூடிய தன்னாட்சிக்கும் வழி சமைக்கும் ஒரு ஏற்பாடு மாத்திரமே. ஐக்கிய அமெரிக்காவில் எவ்வாறு ஐம்பது மாநிலங்கள் சுயாட்சியோடு இயங்குகின்றனவோ அவ்வாறே ஐக்கிய இலங்கைக்குள் வடக்குக் கிழக்கு ஒரு தனி சுயாட்சி அரசாகவும் அங்கு வாழும் முஸ்லிம் மக்கள் தனித்த தேசிய சமூகமாகவும் அங்கீகரிக்கப்பட்டு வாழக்கூடிய ஒரு சூழல் உருவாகும். இந்தச் சந்தர்ப்பத்தை எற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கே உண்டு.

கடந்த எழுபது ஆண்டுகள்கால ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களில் இந்தியா உரிய முறையில் செயற்படாது இலங்கைக்குச் சாதகமாகச் செயற்பட்டு ஈழத்தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது என்பதை மறுக்கவும் முடியாது. நோர்வேயின் ஏற்பாடோடு இடம்பெற்ற பேச்சுக்கள் கூட இறுதியில் குழப்பமடைந்தமைக்கு இந்திய ராஜதந்திரமே காரணம் என்ற கருத்துக்களும் ஈழத்தமிழர்கள் மத்தியில் இன்றுவரை நிலவுகின்றன.

இத்தகைய பின்புலத்தில் ஜெனிவா மனித உரிமைச் சபையின் அமர்வில் இந்தியா இலங்கை குறித்து எடுக்கப்போகும் முடிவும் ஏலவே தெரிந்ததுதான். ஆகவே இந்தியா மீது ஈழத்தமிழ் மக்கள் தொடர்ந்தும் நம்பிக்கை வைப்பதா அல்லது வடக்குக் கிழக்கில் சீனா மேற்கொண்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களை ஏற்று இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் அடங்கிப்போவதா என்பது பற்றிய விஷப் பரீட்சைக்கு ஈழத்தமிழர்கள் முகம்கொடுக்க வேண்டியதொரு அபாய நிலை உருவாகியுள்ளது.

### இந்திய அரசின் பலவீன நகர்வு

சிங்கள ஆட்சியாளர்களின் ஜனநாயக உரிமை மீறல்களுக்கு எதிராகவே வடக்குக் கிழக்கில் தமிழ் இளைஞர்கள் முப்பது ஆண்டுகள் ஆயுதம் ஏந்திப் போராடியிருந்தனர். அவ்வாறு ஆயுதப் போரில் ஈடுபட்ட விடுதலை இயங்கங்களை ஜனநாயக வழிக்கு வாருங்கள் என்று அழுத்தமாகக் கேட்ட அளவுக்கு, அரசு என்ற கட்டமைப்பில் இருந்து




கொண்டு மற்றுமொரு இனம் மீது பயங்கரவாத செயலில் ஈடுபட வேண்டாமென்றோ, இன அழிப்புச் செயற்பாட்டை நிறுத்த வேண்டுமென்றோ இந்தியா உள்ளிட்ட வல்லாதிக்க நாடுகள் பகிரங்கமாகச் சிங்கள ஆட்சியாளர்களை நோக்கிக் வலியுறுத்தவில்லை. இவ்வாறான பலவீனமான நகர்வுகள்தான் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் மிகவும் இலகுவாகச் சிங்களக் குடியேற்றங்களும் பௌத்தமயமாக்கலும் நாள்தோறும் அரேங்கேற்றப்பட்டுவர ஒரு விதத்தில் காரணமாயுள்ளன.

மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் பரிந்துரையில்கூட இந்த அத்துமீறல்களுக்கு எதிரான கண்டனங்கள் இல்லை. ஆகவே ஈழத்தமிழர் விவகாரம் என்பது இந்தியாவை மையப்படுத்திய பிரித்தானிய அமெரிக்க நலன்களுக்கு ஏற்றவாறே கையாளப்பட்டு வருகின்றது என்பதை வெளிப்படையாகவே காண முடிகின்றது. எனவே ஜெனிவா மனித உரிமைகள் சபைக்குத் தமிழ்த்தேசியக் கட்சிகள் சமர்ப்பித்துள்ள பொது ஆவணம்கூட வலிதற்றதாக்கப்படுமென்பது கண்கூடு. அந்தப் பொது ஆவணம்கூட தமிழ் இன அழிப்புத் தொடர்பாகத் தெளிவாகக் கூறவில்லை என்பது வேறு. ஆனால் ஈழத்தமிழ் மக்கள் சார்பான குறைந்த பட்சக் கோரிக்கையைக்கூட மனித உரிமைச் சபையும் அதன் உறுப்பு நாடுகளும் புறம்தள்ளும் நிலை என்பது இந்தோ பசுபிக் பிராந்திய நலன்சார் அடிப்படை என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

> **கடந்த எழுபது ஆண்டுகால ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களில் இந்தியா உரிய முறையில் செயற்படாது இலங்கைக்குச் சாதகமாகச் செயற்பட்டு ஈழத்தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது என்பதை மறுக்கவும் முடியாது. நேர்வே யின் ஏற்பாடோடு இடம்பெற்ற பேச்சுக் கள் கூட இறுதியில் குழப்பமடைந்தமைக்கு இந்திய இராஜ தந்திரமே காரணம் என்ற கருத்துக்களும் ஈழத்தமிழர்கள் மத்தியில் இன்றுவரை நிலவுகின்றன.**

ஆகவே தமிழ்த்தேசியக் கட்சிகள் ஓரணியில் சிந்தித்து இலங்கை ஒற்றையாட்சி அரசின் நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே நின்று தொடர்ச்சியான அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டாலேயன்றி ஈழத்தமிழர்களால் புவிசார் அரசியலை வெற்றிகொள்ள முடியாது. அதேபோன்று அமெரிக்கா, இந்தியா, பிரித்தானிய போன்ற வல்லாதிக்க நாடுகளும் இலங்கை தொடர்பான தமது வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களைச் செய்யாமல் இந்தோ பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தில் வெற்றிகொள்ளவும் முடியாது.

ஒட்டுமொத்தத்தில், ஈழத்தமிழர் விவகா ரத்தில் இலங்கைக்கு விட்டுக்கொடுத்தல் அல்லது இலங்கை சொல்வதைக் கண்டிப்பதுபோன்ற தோற்றப்பாட்டைக் காண்பித்துக் கொண்டு இலங்கையிடம் பின்கதவால் வந்து மண்டியிடும் வல்லாதிக்க நாடுகளின் பலவீனமான அணுகுமுறையே சிங்கள ஆட்சியாளர்கள் இறுமாப்படையக் காரணமாகிறது. ஜெனிவா மனித உரிமைகள் சபையில் ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் நடப்பது இதுதான்.



# பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு....

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத் துஹு ..!!

உங்கட வரவு நல்வரவாகட்டும். ஆனால் பொறுத்த நேரத்திலை வந்திருக்கிறியள். ஜெனிவாவிலை சூடு துவங்கேக்கை நீங்கள் ஸ்ரீலங்காவிலை நிண்ட தாலை சில விசயங்கள் உங்களுக்குச் சாதகமாப் போட்டுது. காக்கை இருக்கப் பனம் பழம் விழுந்த மாதிரிக் காரியங்களும் நடந்து போச்சுது. நீங்களும் இஞ்ச இருந்து வெளிக்கிட வர்த்தமானி அறிவித்தலும் வரக் கணக்கா இருந்ததாலை நீங்கள் வந்துதான் காரியத்தை வெண்டிட்டியள் எண்ட மாதிரிப் போச்சுது.

நீங்கள் அரசியலுக்கு வர முன்னம் உங்களை ஒரு கிரிக்கெட் வீரராகத்தான் எல்லாருக்கும் தெரியும். ஒரு வேகப் பந்து வீச்சாளராகத்தான் எல்லாரும் உங்கடை விளையாட்டைக் கண்டு களிச்சவை. நானுந்தான் அப்ப உங்கடை விளையாட்டைப் பாத்துப் பலமுறை என்னை மறந்து எழும்பி நிண்டு கைதட்டியிருக்கிறன். நீங்கள் சமயத்தைத் தர்மத்துக்குள்ளாலை பாக்கிறியள். ஒரு வெறித்தனத்தோடை பாக்கேல்லை எண்ட விசயம் எல்லாருக்கும் தெரியாது. உங்கடை அம்மா கான்சரிலை செத்தபடியாலை அந்த வலியைப் பாத்து அனுபவிச்ச பிறகு, உங்கட அம்மா மாதிரி கான்சரால கஷ்டப்படுறவையைக் காப்பாத்த, எத்தினையோ கோடி செலவழிச்சு ஒரு கான்சர் ஆஸ்பத்திரியைக் கட்டி விட்டிருக்கிறீங்கள். அந்த நல்ல உள்ளம் ஆருக்கு வரும்?

## அவசரமா ஒரு கடுதாசி

அது மட்டுமில்லை கனக்க இனமக்கள் சீவிக்கிற நாட்டிலை உள்ள ஒரு அதிகாரி எப்பிடி நடக்க வேணும் எண்டதுக்கு நீங்கள் ஒரு நல்ல முன்னுதாரணம். நீங்கள் இலங்கைக்கு வரப்போறியள் எண்டு கேள்விப்பட்ட உடனை அரசாங்கத்திலை உள்ள நானாமார், ஹக்கீம், அதாவுல்லா, ஹிஸ்புல்லா, மஜீத் எண்டு எல்லாரும் எதிர்பார்த்தவை நீங்கள் வந்து தங்கடை பிரச்சினை எல்லாத்தையும் பற்றிக் கதைப்பியள் எண்டு. முக்கியமா ஜனாஸா நல்லடக்கம் செய்யிற பிரச்சினைபற்றிக் கதைப்பியள் எண்டு. அவையின்ரை எதிர்பார்ப்பு வீண் போகேல்லை. ஆனால் அதுக்கப் பின்னாலை உள்ள அரசியல் என்னெண்டு எத்தினை பேருக்குத் தெரியும்.

இப்ப எனக்கு ஒரு பழைய விசயம் ஞாபகத்துக்க வருகுது. அப்ப என்ரை மருமோன் டுபாயிலை இருந்தவன். அப்ப இந்தியாவிலை பாபர் மசூதி பிரச்சினை பெரிசா இருந்த காலம். இந்துக்கள் பாபர் மசூதியை இடிச்ச எண்டு கேள்விப்பட்ட உடன டுபாயிலை இருந்த ஆப்கானிஸ்தான் முஸ்லிம்கள் வெளிக்கிட்டு ஊர்வலமாப் போய் , டுபாயிலை இருக்கிற சிவன் கோயிலிலை இருந்த சிவலிங்கத்தை எடுத்துப் பக்கத்திலை இருந்த கடல் ஏரிக்குள்ளை எறிஞ்சு போட்டினம்.

அவை அதைச் செய்யேக்கை டுபாய் ஷேக் ஒரு முஸல்மான். அவர் தாங்கள் செய்ததைப் பாத்துத் தங்களை “குட் முஸல்மான்கள்” எண்டு சொல்லுவார் எண்டு எதிர்பார்த்தவை. .ஆனால் அவர் அப்பிடி ஒண்டும் செய்யாமல் அந்த ஆர்ப்பாட்டத்திலை கலந்து கொண்ட முஸ்லிம்கள் அத்தனைபேரையும் பிடிச்ச அடைச்சு வைச்சு நாடு கடத்தினவர். அது மட்டுமில்லை நாற்பத்தெட்டு மணித்தியாலத்துக்குள்ளை ஸ்பெஷல் பிளேன் ஒண்டை அனுப்பி ஒரு புதுச் சிவலிங்கத்தைக் கொண்டு வந்து வைச்சவர். அது அந்தக்காலம்.

உலக அரசியல் எண்டதைச் சரியா விளங்கிக் கொண்டவைக்கு நல்லாத் தெரியிற விசயம் ஒண்டு மதம் எப்பவும் அரசியலுக்கு அப்பாற்பட்டது. இலங்கையிலை ஜனாஸாவை எரிக்கிறதோ? புதைக்கிறதோ? எண்ட விசயத்துக்கு அங்காலை ஜெனிவாதான் எல்லாருக்கும் இப்ப முக்கியம். அதிலை உங்கடை நாடு இலங்கைக்கு முண்டு குடுக்க வேணும் எண்டது இண்டைய தேவை. இந்தியாவுக்குத் தலையிடி குடுக்க இலங்கையை விட்டால் வேறை வழி ஒண்டும் இல்லை எண்டது சீனாவுக்கும் தெரியும். உங்களுக்கும் தெரியும். அதாலை நீங்கள் சொன்னா இலங்கை கேக்கும் எண்டு இஞ்சையுள்ள நானாமார் நம்பினம். அரசியலை விளங்கிக்கொள்ளாமல் பள்ளிவாசலுக்கு முன்னாலை கஞ்சி விக்கிற நானா செல்லிறார் “பாருங்க இம்ரான்கான் வந்து ஜனாஸா பத்திச் சொல்லி ஒரு மாதிரிச் சரிக்கட்டிப் போட்டார்” எண்டு. அவருக்கு ஒண்டு விளங்க வேணும் இப்ப ஜெனிவாக் காய்ச்சலிலை இருக்கிற இராஜபக்ச குடும்பம் தங்கடை கெட்ட பேரை அழிக்க என்ன வேணும் எண்டாலும் உடனை செய்து தருவினம் எண்டு. ஆனால் எத்தினை நாளைக்கு இது மாதிரிச் செய்வினம் எண்டு ஒருதருக்கும் தெரியாது.

இலங்கை சர்வதேச அரசியல் சூதாட்டத்துக்குத் தேவையான ஒரு விளையாட்டு அரங்கு எண்டது உங்களுக்கு விளங்கும். இந்தியாவுக்கு எந்தத் தீவு? சீனாவுக்கு எந்தத் தீவு? கிழக்கு முனை ஆருக்கு? வடக்குமுனை ஆருக்கு? எண்டதுதான் இப்ப உள்ள பிரச்சினை . இலங்கையிலை சீனாவோ இல்லாட்டி இந்தியாவோ ஆர் கூட இடங்களைப் பிடிக்கிறது எண்ட போட்டி தான் இப்ப நடக்குது. ஆனால் ஜெனிவா முடிஞ்சகையோடை ஆரும் ஒரு தேரர் ஜனாஸாவை புதைக்கிறதுக்கு எதிரா வழக்குப் போட்டு அதை எரிக்கத்தான் வேணும் எண்டு இன்னுமொரு வர்த்தமானி அறிவித்தல் வந்தாலும் ஆச்சரியப்படுகிறதுக்கு இல்லை கண்டியளோ. ஏனெண்டால் விடுதலைப் புலிகள் இருக்கேக்கை அவையளைப் பேய்க் காட்ட சந்திரிகா அம்மையார் வெறும் பத்துக் கொப்பி மட்டும் அடிச்சு வர்த்தமானி வெளியிட்ட வரலாறும் இருக்கெண்டதை மறக்காதையுங்கோ!

இப்படிக்கு,

**அப்பாவி அன்னமுத்து.**



# வீசுமா சசிகலா புயல்?

○ மயூ

தமிழகத்தின் சட்ட மன்றத் தேர்தல் நெருங்கிவிட்டது. முன்னெப்போதும் இல்லாத இந்தத் தேர்தல் பரபரப்பான “ருவிஸ்ட்”களைக் கொண்டதாக இருக்கின்றது. முன்னைய தேர்தல்களில் நடக்கப்போவதை முன்னரே கணித்துப் பெயர் பெற்றவர்கள் கூட இப்போது என்ன நடக்கப் போகின்றது என்று தெரியாது திக்கித் திணறுகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம், சசிகலா.

சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைக்குச் சென்ற சசிகலா கடந்த 27ஆம் திகதி சிறையில் இருந்து வந்தது முதல் ஒரு மார்க்கமாகவே செயற்படுகின்றார். அவரது நகர்வுகள் அனைத்தும் மர்மமாக இருப்பதால், அவரது திட்டம் என்ன என்று தெரியாது பலரும் திக்குமுக்காடுகின்றனர்.

இது போதாது என்று இப்போது சசிகலா வீட்டில் பலத்த பூசைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றனவாம். அங்கு என்ன நடக்கின்றது என்று அவரது ஆதரவாளர்களுக்கே தெரியாதாம். அந்தளவு இரகசியமாக அவை பேணப்படுகின்றன. சின்னம்மாவுக்கு மீண்டும் “பவர்” கிடைக்கவேண்டும் என்பதற்காகவே இந்தப் பூசைகள் எல்லாம் நடக்கின்றன என்கின்றனர் அவருக்கு நெருக்கமானவர்கள்.

இவை ஒருபுறம் நடக்க, சசிகலாவை மீண்டும் அ.தி.மு.கவில் இணைப்பதற்கு சாத்தியமே இல்லை என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அடித்துச் சொல்லிவிட்டார். அவரது இந்த முடிவுக்கு பா.ஜ.க.வின் அழுத்தமே காரணம் என்று அரசல் புரசலாகப் பேசப்படுகின்றது. ஆனால் “பில்டிங் ஸ்ரோங், பேஸ்மண்ட் வீக்” என்பது போல எடப்பாடி பழனிச்சாமிக்கு சசிகலா பற்றிய அச்சம் இல்லாமல் இல்லை. அதனால் சசிகலாவுக்கு ஆதரவானவர்கள் என்று சந்தேகிக்கும் அனைவரையும் களையெடுக்கும் நடவடிக்கைகளை இன்னொரு பக்கமாக மேற்கொண்டிருக்கின்றார். கட்சியைச் சேர்ந்த எவரும் சசிகலா இருக்கும் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கக் கூடாது என்றும் கட்டளையிட்டிருக்கின்றார்.

ஆனால் சசிகலா எதைப் பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் “சைலெண்டாக” காய் நகர்த்தி வருகின்றார். அவரது ஆதரவாளர்களை ஆர்ப்பாட்டம் இல்லாது சந்திக்கின்றார். கட்சித் தலைவர்களுடனும் பேச்சு நடத்தி வருகின்றார். சில நாள்களுக்கு முன்னர் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமானும் அவரைச் சந்தித்திருக்கின்றார். இது நிச்சயம் எடப்பாடி சார்ந்த அ.தி.மு.கவினருக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும். இது போதாது என்று சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார், இயக்குநர்கள் பாரதிராஜா, அமீர் ஆகியோரும் சசிகலாவைச் சந்தித்திருக்கின்றனர்.

தமிழகத்தில் மூன்றாவது வலுவான கட்சியாக வளர்ந்துவரும் சீமானும், அ.தி.மு.கவின் சின்னம்மாவான சசிகலாவும் இந்தத் தேர்தலில் கூட்டுச் சேர்ந்தால், அது எடப்பாடி அணிக்கு பெரும் சவாலாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட பல விடயங்கள் இரகசியமாகவே பேணப்படுகின்றன என்று தெரிகின்றது. அதனால் இறுதியில் என்ன நடக்கப் போகின்றது என்பது மர்மமாகவே இருக்கின்றது.

தேர்தல் நெருக்கும் சமயத்தில் எடப்பாடி அரசு பல திட்டங்களை அறிவித்து மக்களை கைக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றது. விவசாயிகள் கடன் தள்ளுபடி போன்ற அதிரடி அறிவிப்புக்கள் எடப்பாடியிடம் இருந்து வருகின்றன. ஆனால் “என்ன வேணா நடக்கட்டும் நான் சந்தோசமா இருப்பேன்” என்று இருக்கின்றார் தி.மு.க. தலைவர் ஸ்டாலின். அ.தி.மு.கவில் இப்போது நடக்கும் சம்பவங்கள் ஸ்டாலினுக்கு நிச்சயம் மகிழ்ச்சியைத் தரும். இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. எடப்பாடி அணி, சசிகலா அணி என்று இரு அணிகளாகப் பிரியும் என்பது அவரது கணக்கு. அந்தக் கணக்குச் சரியாக இருந்தாலும், அதனால் தி.மு.கவுக்கு இலாபம் கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சீமான் - சசிகலா சந்திப்பு ஒருபுறம், நடிகர் கமலஹாசன் மறுபுறம் என இப்போதிருக்கும் நிலைமை ஸ்டாலினை இலவுகாத்த கிளியாக மாற்றிவிடுமா என்ற சந்தேகத்தையும் கிளப்புகின்றது. ஆக மொத்தத்தில் இந்தமுறை தேர்தலில் சசிகலா புயலைக் கிளப்புவார். இன்னும் ஓரிரு வாரங்களில் அந்தப் புயல் வீச ஆரம்பிக்குமா, புஸ்வாணமாகுமா என்று தெரிந்துவிடும்.

# மௌன மொழி 36 இற்கான கவிதைகள்



பனையோலை குருத்ததனை
பக்குவமாய் வார்த்தெடுத்து
பனம் குட்டான் பின்னிடும்
பாட்டிகளைப் பார்த்தீர்களா
இவ் முயற்சியின் மூலாதாரமே
இவர்களின் வாழ்வாதாரம்
முழு மூச்சாய் உழைப்பவர்க்கு
உற்ற துணை நாமாவோம்

**வி.பி.சிவேஸ்**
*தண்ணீரூற்று*

---

காலகாலமாய்க் கைத்தொழிலாய்
கற்பகதருவின் ஓலை வழியாய்
கலப்படம் இல்லா பயன் தருவாய்
காரிகை கையில் கலை வடிவாய்
கவிதை வடிக்க கரு உருவாய்
கடையின் ஓரம் விலைப் பொருளாய்
கலிகாலத்திலும் கண்ணைக் கவருதே.

**ஔவை.** கொடிகாமம்

---

இலட்சனைகளில் மட்டும்
பனை மரங்களின்
படம் காட்டும்
பகட்டுத்தான்இங்கு.... எங்கள்
வளங்களின் வாய்ப்பினை
தட்டிக் கொடுக்கவும்
தளைக்க வைக்கவும்
தனித்துவம் மிக்கவர்கள்
இன்னும் இங்கில்லை......
இங்கு பெட்டி பாய்களின்
உழைப்புகளோடு தான் இந்தப்
பெண்களின் கட்டிப் போட்ட
உழைப்புகள்......

**மானியூர் ரட்ணேஸ்**

---

கிராமத்தின் எழுச்சி
கைத்தொழிலின் வளர்ச்சி
கற்பகத் தருவின் ஓலை
தையலவன் கையிலே – தந்தது
பாய் பெட்டி குட்டான்
பனை தந்த அமுதம்
ஓலைக் குட்டானில் சங்கமம்
கடல் கடத்து போகுது
காசை அள்ளித் தருகுது

**எ.ஆர் ஜெகா**
கொக்குவில்

---

பனையோலை பதப்படுத்தி
பக்குவமாய்க் குட்டான் இளைத்து
பதநீரின் பாணியிலே
பனங்கட்டி தயாரித்து
பணங்காசு சம்பாதிக்கும்
குடிசைக் கைத்தொழிலே
குதூகல வாழ்வெமக்கு....,

பற்குணன் அம்பிகாபதி
வவுனியா.

---

பல குடும்பங்களின் வாழ்வுதனை
செழிப்பித்த பனம்பொருட் கைத்தொழிலிது
சமையலறை முதல் கோயில் அர்ச்சனை தட்டு வரை
முதலிடம் பெற்ற பனம் பொருட்களின்று
பிளாஸ்ரிக்கின் வருகையால்
நிலைகுலைந்த அவர்கள் வாழ்வைக்
காப்பாற்ற வழி தேடுவோம்

**கனிவிழி காந்தரூபன்**
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

---

மலையென வளரும்
பனைமரங்கள்
கற்பகத் தருவென்பது
கற்பனைக் கதையல்ல
இதன் பலமும் பயனும்
இறைவன் தந்த வரம்
இது வறுமைக்கும்
இடுவது முற்றுப்புள்ளி

*க.நாகராசா*

# மௌன மொழி 37



உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:

**05.03.2021**

கவிதைக்கு பரிசு 1000/=

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங் கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்தி ருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசு ரமாகும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.*

0773165555

# மணிக்கதை

மௌனா



**தூ**ரத்துக் கோவிலில் திருவிழா... வயல் வெளியின் மத்தியில் அமர்ந்திருந்த அந்தக் கோவிலைச் சுற்றி ஊரே திரண்டு கொண்டிருந்தது. கலகலப்பு, பரபரப்பு, உற்சாகம் என அனைத்து தரப்பினர் மத்தியிலும் பன்முக உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது.

இரவின் இனிய அமைதியை ஊடறுத்தபடி வயல் வான் வெளியை ஆக்கிரமித்து ஒலி பெருக்கியினூடாக மிதந்து வரும் நாதஸ்வர இசை ஆளுமையானது லயம் பிசகாது செவியுள் புகுந்து ஞானமற்றவரையும் மெய் மறந்து கண் மூடி ரசிக்கும் ஞானந்தனாக உணரவைத்தது.

நாதஸ்வர இசையை இறையார்ப்பணம் செய்துகொண்டிருந்தவன் ஒரு இளைஞன். வேற்று ஊரின் மைந்தன். தற்போது உலகறிந்த கலைஞன். இசைஞன்.

அவனது நாபிக் கமலத்திலிருந்து ஊற்றெடுக்கும் இசைக் காற்றை நாதஸ்வரத்தில் நர்த்தனமிடும் அவன் விரல்கள் நெறிப்படுத்த ராக ஆலோசனை பிரவாத மெடுத்துக் கொண்டிருந்தது.

வாதாபி கணபதியில் தொடங்கி பாரதியின் சின்னஞ்சிறு கிளியில் நிலைகொண்டு இசை ஞான வித்தை காட்டிக் கொண்டிருந்தது.

கோவிலின் மேற்குப் புறம், ஒரு அரச மரத்தின் கீழ் தன்னந்தனியாக அமர்ந்தபடி, ஒரு மகா முதியவர் கண்ணில் நீர் பெருக இசையோடிணைந்த மோன நிலையில் இருந்தார்.

அவ் வழியே வந்த இன்னொரு முதியவர் "என்ன ராமையா தனிய இருந்து அழுகிறாய்?" என்றார்.

"அழவில்லை.... ரசிக்கிறன்..."

" கிட்டப் போய் .. கேட்டு ரசிக்கிறது தானே"

"அதுக்கு தான் குடுத்து வைக்கேல்லையே..."

"நீ பெரிய வித்துவான்... அப்படி இருக்க.. நீயா இப்படி?"

"......." மௌனம்

"வாசிக்கிறது யார் தெரியுமா?"

"தெரியேல்லை.... யாரோ ஞானந்தனாக இருக்க வேண்டும்.

"ராமையா அது வேறு யாருமில்லை... உன் மகன் வயிற்றுப் பேரன்" என்றபடி அவன் கோவிலை நோக்கி நகர்ந்தான். கிழவர் மெய்சிலிர்த்துப் போய் அசைவற்றிருந்தார்

சாதி மாறிக் கல்யாணம் செய்ததற்காக வீட்டை விட்டுத் துரத்திய தன் மகனின் நினைவில் உறைந்தார்.

அவ்வழியால் போய்க் கொண்டிருந்த இருவர்,

"நாதஸ்வரம் வாசிக்கிற பெடியன் ஆரோ ராமையா தானாம். என்னமா வாசிக்கிறான்...."

தாத்தாவின் ஞானம் பேரனுக்கு வராதா.... வாசிக்கிறது எங்கடை ராமையாக் கிழவன்ர பேரன்...தான். பரம்பரை சாதியால் வருவதல்ல.. ஞானத்தால் தான் வரும்!


ராமையா கிழவன் தன்னை உணரத் தலைப்பட்டான்



மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை, புற்றுநோயியல் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு- சிலாபம் மாவட்டப் பொது மருத்துவமனை)

# நலம் அறிய...

# இரத்த அழுத்தம் ஏன் குறைகிறது?




**எனது தந்தையாருக்கு (வயது- 62) சாதாரணமாகவே அடிக்கடி தலைச்சுற்றல் ஏற்படுகிறது என்று வைத்தியரை நாடிய வேளையில், குறைந்த இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார் எனக் கூறினார்.**
**இன்றுவரை உயர் இரத்தஅழுத்தம், இரத்தக் கொதிப்பு, பிரசர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இரத்த அழுத்தம் ஏன் குறைகிறது. இதனை எவ்வாறு கையாள்வது? விளக்கம் தாருங்கள்.**

**வருணி, மட்டக்களப்பு.**

## குறைந்த இரத்த அழுத்தம்

**Low Blood Pressure - HYPOTENSION**

தீராத நோய்களின் பட்டியலில் முதலிடத்தில் இருந்து வருவது இரத்த அழுத்தம்- உயர் இரத்த இழுத்தம் மற்றும் குறை இரத்த அழுத்தம். ஆனால் 90 வீதமான விழிப்புணர்வு உயர் இரத்த அழுத்தம் பற்றியதாகவே மக்களுக்கு இருக்கின்றது.

### குறைந்த இரத்த அழுத்தம்- அறிகுறிகள்


1. தலைச்சுற்றல்
2. மயக்கம்/ உணர்விழப்பு
3. வாந்தி
4. வழமைக்கு மாறான நா வறட்சி
5. சோர்வு/ பலவீனம்
6. பார்வை குறைதல்
7. கண்கள் இருட்டாவது போன்ற உணர்வு
9. உடல் சில்லிட்டுப் போவது

மேற்கூறியவற்றில் ஒன்றோ பலவோ ஏற்பட்டால் இரத்த அழுத்தம் குறைகிறது என்று அர்த்தம்.

தோட்டத்தில் குழாய்களில் நீர் பாய்ந்தோடுவது போலத்தான் இரத்தமானது இரத்த நாடி, நாளங்களில் (artery &veins ) பாய்ந்தோடுகின்றது. இதயத்தை நோக்கி வரும்போது ஒரு குறித்த வேகத்திலும் ,விட்டு வெளியேறும்போது வேறொரு வேகத்திலும் பாய்ந்தோடுகின்றது.
இந்த வேகங்களுக்குப் பெயர்தான் இரத்த அழுத்தம். பொதுவாக 120/80 mmHg இருப்பது இயல்பு. 120 - சிஸ்டாலிக் அழுத்தம். அதாவது இதயம் சுருங்கி இரத்தத்தை தள்ளும்போது ஏற்படுகிறது. -சுருங்கழுத்தம்.

80- டியஸ்டாலிக் அழுத்தம் : இதயம் இரத்தத்தை வெளியேற்றிய பிறகு தன்னளவில் விரிந்து உடலில் இருந்து வரும் இரத்தத்தை பெறும் போது ஏற்படும் அழுத்தம் - விரிவழுத்தம்.
ஆனால் 120/80 என்று சொல்லி வைத்தாற் போல் எல்லோருக்கும் இது இருக்க வேண்டுமென்றில்லை.

உடல், எடை, உயரம் போன்ற பல காரணிகளுக்கேற்ப இது வேறுபடும். WHO வானது 120/80 இலிருந்து 140/90 வரை சாதாரண இரத்த அழுத்தமாக வரையறை செய்துள்ளது.
140/90 க்கு மேல் உயர் இரத்த அழுத்தமாகவும் 70/60 க்கு கீழே குறை இத்த அழுத்தமாகவும் கணிப்பிடப்படுகிறது. (arterial hypotension) இதயத்துக்கு தேவைப்படும் இரத்தம் செல்லத் தடை உண்டாவதுதான் குறை இரத்த அழுத்தத்தின் அடிப்படை.




## குறை இரத்த அழுத்தம் ஏற்பட வாய்ப்புக்கள்

1. கர்ப்ப காலம் (பிரசவத்துக்குப் பிறகு சரியாகிவிடும்)
2. நீரிழப்பு - அதிக காய்ச்சல், வாந்தி ஏற்படும்போது, கடுமையான உடற்சோர்வு
   **உதாரணம்: விளையாட்டு வீரர்களுக்கு**
3. நோய்கள்/ இதய வால்வு/ துடிப்பு கோளாறுகள், மாரடைப்பு, இதய செயலிழப்பு, வெரிக்கோஸ்
4. விபத்துக்களால் ஏற்படும் அதிக இரத்த இழப்பு (500mlக்கு அதிகம் பொதுவாக)நாளம், நாடி, சிதைவு ஏற்படுதல்.
5. ஹார்மோன் கோளாறுகள்: தைரொயிட் / பராதைரொயிட்/ பிட்யூட்டரி சுரப்பு குறைபாடுகள், கட்டுப்பாடற்ற நீரிழிவு
6. தீவிர நோய்த்தொற்று- Septicemia
7. ஒவ்வாமை - Allergy, விஷக்கடி
8. சத்துக்குறைபாடு - இரத்தசோகை
9. சில மருந்துகள் - மனவழுத்த/ பார்க்கின்சன் நோய் / சிறுநீரைப் பிரியச் செய்யும்/ வயாகர (viagra)போன்ற மருந்துகள்
10. உயர் இரத்த அழுத்த மாத்திரையை அளவுக்கதிகமாக உட்கொள்வது.


### மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள்

1. ஈசிஜி- ECG
2. எக்கோ - ECHO
3. வழமையான இரத்தப் பரிசோதனைகள் (Basic blood investigation)
4. Til - table test

## சிகிச்சை

- அடிப்படைக் காரணத்தை அறிந்து மருத்துவ உதவியுடன் சரிசெய்ய வேண்டும்.
- மருத்துவரின் ஆலோசனையின்படி உணவில் உப்பை அதிகரித்தல்
- நிறையத் தண்ணீர் அருந்துதல்
- காலுறைகள் அணிவது சரியான போசாக்கு விகிதாசாரமுள்ள உணவு உட்கொள்ளல் தேவையான மாத்திரைகளை மருத்துவர் பரிந்துரைப்பார்.
- உயர் இரத்த அழுத்தம்- அமைதியான ஆட்கொல்லி நோயாகும்.Silent Killer
- இதேபோல் குறை இரத்த இழுத்தம்- எரிமலை Volcano என்று அழைக்கப்படும்.
- எரிமலை எப்பொழுது குமுறும் என்று கணிப்பிட முடியாது. அதுபோலத் தான் பல நேரங்களில் இது ஆபத்தில்லாத நோயாக இருப்பினும் திடீரென்று உயிராபத்தை விளைவிக்கக் கூடிய ஒன்று. அவதானமாக இருங்கள். மருத்துவ ஆலோசனையை சரியாகப் பின்பற்றுங்கள்.!!!

| இருக்கை நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தம் Postural Hypotension | உணவுக்குப் பின்னான குறை இரத்த அழுத்தம் Postprandial Hypotension |
|---|---|
| படுக்கையை விட்டெழுகையில் கழிப்பறை கழிப்பிடத்திலிருந்து எழுகையில் கண்கள் இருட்டாவது/ தலைச்சுற்று - மயக்கம் ஏற்படுவது. | தானியங்கி நரம்புக்குறைபாடு, பார்க்கின்சன் நோயாளிகளுக்கும் ஏற்படும் பொதுவான பிரச்சினை. |
| 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பெரும்பாலும் ஏற்படுவது. | 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பெரும்பாலும் ஏற்படுவது. |
| இளம் வயதினருக்கும் ஏற்படலாம் | தவிர்ப்பதற்கு உணவைச் சிறிய அளவில் பிரித்து அடிக்கடி உண்ண வேண்டும். |
| நீண்ட நேரம் சம்மணமிட்டு உட்காருவது சில மருந்துக்கள் போதிய உறக்கமின்மை போன்றவற்றாலும் ஏற்படலாம். | |



○ கோகுலராகவன்




அறிவு தெரிந்த நாளில் இருந்தே வானொலிப் பெட்டிக்கும் எங்களுக்கும் இடையிலான இணைப்பு தொடங்கி விட்டது. றேடியோ கேட்டுக் கொண்டே தூங்கி விடுவது நல்லதொரு தூக்கத்துக்கான வழிமுறை. எங்களுடைய வீட்டில் சிவப்பு நிறத்தில், மரப்பெட்டியில் செய்யப்பட்ட றேடியோவொன்று இருந்தது. கொஞ்சம் பெரியது. பாடல் நாலு வீட்டுக்குக் கேட்கக் கூடிய பெரிய அள வான றேடியோ. பருத்தித்துறையில் அப்பா வாங்கி வந்ததாக அம்மா சொல்வார். பாடல் கேட்பதற்காகவே றேடியோக்கள் பிரபலமாகிய காலம் அது. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் வர்த்தக சேவைப் பாடல்களை ஒலிபரப்பத் தொடங்கிய போது றேடியோ இன்னும் பிரபல்யம் ஆகிவிட்டது.

நேயர் விருப்பம், நீங்கள் கேட்டவை, பொங்கும் பூம்புனல், நெஞ்சில் நிறைந்தவை என்ற நிகழ்ச்சிகள் பிரபல்யமானவை.(பாலு மகேந்திரா "நீங்கள் கேட்டவை' என்ற தலைப்பில் படமும் எடுத்தார்) இந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் பாடல்கள் மட்டுமே ஒலிபரப்பப்படும். பின்னர் ஏன் பெயரை மாற்றி வைத்தார்கள் என்று தெரியவில்லை.

பொங்கும் பூம்புனல் காலை ஏழு மணிக்குத் தொடங்கி காலை ஏழு முப்பதுக்கு முடிந்துவிடும். பொங்கும் பூம்புனல் தொடங்கும் போது புறப்பட்டால்தான், நடந்து பள்ளிக்கூடம் போய்ச் சேர முடியும். பொங்கும் பூம்புனல் ஆரம்ப இசை ஒலிக்கத் தொடங்கி விட்டால் பள்ளிக்கு தாமதமாகி விட்டது என்று வயிறு கலங்கத் தொடங்கி விடும். றேடியோ என்பதை விட இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் எங்களோடு ஒட்டி இருந்தது என்பதே உண்மை. அறிவிப்பாளர்கள் கே.எஸ். ராஜா ,அப்துல் ஹமித், பி.ஜெயகிருஸ்ணா,ராஜேஸ்வரி சண்முகம்,புவனலோஜினி, ஜோக்கிம் பெர்னாண்டோ, ராஜகுரு சேனாதிபதி கனகரட்ணம், நடேசசர்மா,சற்சொரூபவதி நாதன், வி.என். மதியழகன் எங்கள் குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் போல குரல் வழியே இணைந்திருந்தார்கள்.

வீடுகளில் காலை ஏழு மணிக்குத் தொடங்கினால் இரவு பத்து மணிக்கே நிறுத்துவார்கள். இடையில் காலை பத்து மணியிலிருந்து பன்னிரண்டு மணிவரை ஒலிபரப்பு தடைப்பட்டுவிடும். எப்படா பன்னிரண்டு மணி ஆகும் என்று காத்திருப்போம்.பின்னர் இரவு பத்து மணிக்கே றேடியோ நிறுத்தப்படும்.

கனகரத்தினம் மாமா வீட்டில் பழைய பிலிப்ஸ் றேடியோ இருந்தது. மாமா பாட்டுக் கேட்பதில் மிகப் பிரியமானவர். றேடியோவை கவனமாக துடைத்து துணியால் மூடி வைத்திருப்பார். தான் மட்டும் தான் போடலாம். மற்றவர்கள் தொட்டால் வீண் சண்டை உருவாகும். மனைவி செல்லம்மா, பாட்டு விரும்பி கேட்பார். எனவே றேடியோவை போட்டு விட்டே மாமா வெளியில் போவார்.

செல்லம் மாமிக்கு மிக விருப்பமான பாடல் நிறைய உண்டு அதிலும் 'ராஜா' திரைப்படத்தில் "கல்யாணப் பொண்ணு கடைப்பக்கம் போனால்"என்ற பாடல் ஒலிக்கும் போது என்ன வேலை செய்தாலும் அப்படியே விட்டு விட்டு வந்து பக்கத்தில் நின்று கேட்பார். ஒருநாள் இந்தப் பாடல் ஒலிக்கும் போது மாமி குளிக்கப் போய்விட்டார் .கனகரத்தினம் மாமா ஓடிப்போய் றேடியோவை நிறுத்தினார்.

"ஏன் ஐயா நிப்பாட்டினியள்?"மகள் கேட்டாள்.

"கொம்மாவுக்கு விருப்பமான பாட்டடி. அவள் குளிச்சிட்டு வரட்டும்போடுவம்.அதுதான் நிப்பாட்டினனான்"

"ஐயா அவா வரமுன்னம் முடிஞ்சிடும்"

"எனக்கு சொல்றியோ கதை? அவள் வரட்டும் போடுவம்"

மகள் எவ்வளவோ சொல்லியும் கனகரத்தினம் மாமா கேட்கவில்லை. அவருக்கு அது புரியவில்லை. றேடியோவை நிறுத்தினால் பாட்டும் நின்றுவிடும் என்பது அவரது நம்பிக்கை. மனைவி குளித்துவிட்டு வந்ததும், "இஞ்சாரப்பா உனக்கு பிடிச்ச பாட்டு போகுது கேளப்பா" என்று சொல்லிக் கொண்டே றேடியாவைப் போட்டார். அதிலே "சகோதரி" படத்தில் ஜே.பி. சந்திரபாபு பாடிய "நானொரு முட்டாளுங்க நல்லாப் படிச்சவங்க நாலு பேரு சொன் னாங்க' என்ற பாட்டுப் போய்க் கொண் டிருந்தது.

"இப்பதான் ஐயாவுக்கு பிடிச்ச பாட்டு போடுறாங்கள்"என்று மகள் சொல்லவும் றேடியோ பெட்டி வேலியைத் தாண்டிப் பறந்தது.அடுத்த நாள் புது றேடியோ வாங்க கனகரத்தினம் மாமா யாழ்ப்பாணம் போனார்.

1983 இல் "பயணங்கள் முடிவதில்லை" என்ற படம் வந்திருந்தது. இதில் எஸ். பி. பாலசுப்பிரமணியம் , எஸ்.ஜானகி பாடிய பாடல் ஒன்று "மணி ஒசை கேட்டு எழுந்து"எனத் தொடங்கும் பாடல். இதில் கதாநாயகன் மோகன் நோயாளி என்பதால் எஸ்.பி. பி.இருமி இருமித்தான் பாடுவார்.

எங்கட வீட்டில் வேலி அடைக்க வந்த சின்னராசா அண்ணை முதன் முதலில் அந்தப் பாட்டை கேட்டு விட்டு...

"சோக்கான பாட்டு . ஆனால் இருமிக் கெடுத்துப் போட்டாங்கள்'"என்றார் வெள்ளந்தியாக. நல்ல காலம், இப்ப அந்தப்பாட்டைக் கேட்டிருந்தால் "உந்தப்பாட்டு பாடேக்கையே எஸ். பி.பிக்கு கொரோனா வந்துட்டுது போல" என்றும் சொல்லி இருப்பார். ■

# சொற்சிலம்பம் போட்டி 36

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | ■ |
| | ■ | 6 | | | ■ | 7 | 8 |
| 9 | 10 | | ■ | 11 | 12 | | |
| 13 | | | 14 | ■ | 15 | | ■ |
| | ■ | 16 | | 17 | | ■ | 18 |
| ■ | 19 | ■ | 20 | | ■ | 21 | |
| 22 | | 23 | ■ | 24 | | | |
| 25 | | | | | ■ | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..................................................................

கையொப்பம்:......................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. ஒரு மதியத்தில் அண்ணளவாக ஒன்றின் பெறுமதியை தீர்மானித்தலை இவ்விதம் குறிப்பிடுவர் 6. அழிப்பு 7. சூரியனுக்கு இப்படியும் பெயருண்டு. 9. திருமணமாகாத இளம்பெண் 11. கற்றுக்கொடு/ ஊட்டு 13. ஏற்காமை 15. மறிக்குமாறான ஏவல் 16. நாட்டில் பல இடங்களில் சிலைகளாக வீற்றிருப்பவர் 20. செல்வம் 21. இணக்கச் சொல் 22. பாட்டுக்கொரு புலவன் என அடையாளப்படுத்தப்படுபவர் 24. கௌரவம் 25. மகாபாரத முக்கிய பாத்திரங்கள் 26. தனித்துவமானதொரு காட்டு மிருகம்.

## மேலிருந்து கீழ்

1. சுமங்கலிப் பெண் என அடையாளப்படுத்துவது. 2. அறுசுவைகளில் இதுவும் ஒன்று. 3. சமயம் சார்ந்த 4. இலங்கை அரசு- விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கள் இங்குதான் இடம்பெற்றன. 5. மாறுபாடு பண்ணுதல்/ வாந்திகொள்ளல் 8. பிடியைத் தளத்துமாறான ஏவல் 10. மச்சம்/ மாசு 12. எளிமையான ஆடையாக அடையா ளப்படுத்தப்படுவது. 14. மதி/ அறிவு 17. பஞ்சபாண்டவர்களில் தலைமகன் 18. சந்திரன் 19. கருத்து வேறுபாடு 21. வைரமான மரத்தைப் பிளக்கப் பயன்படுத்துவது 22. சத்தியசாயியை சுருக்கமாக இப்படியும் அழைப்பர். 23. உறுதியான/ கெட்டியான.

### சொற்சிலம்பம் போட்டி 33 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. உசாவல் 4. உதவி 7. பத்தி 8. உரைகல் 9. வாதி 10. நடு 11. வலை 12. சரிதல் 14. இல் 15. கலவன் 18. கன 19. தறுதலை 21. குடும்பம் 23. கவி 24. கைமை 25. விடுதி

**மேலிருந்து கீழ்**

1. உபவாசம் 2. சாத்திரி 3. வதி 4. உரை 5. தகவல் 6. வில்லை 8. உடு 10. நல்ல 13. தகனம் 14, இன்று 16. வதம் 17. தலைவிதி 18. கடுமை 20. தகடு 21. குகை 22. பரி.

**சொற்சிலம்பம் போட்டி இல.36**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**06.03.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 34 இல் வெற்றி பெற்றோர்


**1 ஆம் பரிசு**
**ஞானப்பிரகாசம் துரை**
85/4 கார்மல் வீதி
குருநகர், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
**திருமதி.ஆ.ருக்மணிதேவி,**
சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்

**3 ஆம் பரிசு**
**சி.தியாகேஸ்வரி**
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

**4 ஆம் பரிசு**
**தம்பயா யோகராசா**
சர்சாலை தெற்கு,
சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு**
**ம.சத்தியசீலன்**
அழகொல்லையடி,
அளவெட்டி, யாழ்ப்பாணம்.





# ஒரு அபாய எச்சரிக்கை

○ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

இலங்கையில் தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால மும் ஈடேற்றமும் எப்படியிருக்கும்? என்ற கேள்வி, சமூகத்தைக் குறித்து ஆழமாகச் சிந்திப்போரின் கவலையோடுள்ளது. ஏனென்றால், அரசியல், கல்வி, பொருளாதாரம், பண்பாடு என அனைத்துத் தளங்களிலும் பலவீனமானதொரு நிலையிலேயே தமிழ்ச் சமூகம் இன்றிருக்கிறது. இதை எவரும் மறுக்கவே முடியாது. இதிலிருந்து இப்போதைக்கு மீளக்கூடிய நிலை தென்படவேயில்லை. இதையும் நீங்கள் மறுக்கவியலாது. இந்த நிலை நீடிக்குமாக இருந்தால் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் நினைத்துப் பார்க்கவே முடியாத அளவுக்கு நெருக்கடிக்குள்ளாகிப் பின்னடைந்து விடும். இதையெல்லாம் எளிதில் யாரும் கடந்து செல்ல முடியாது. அப்படி விளையாட்டுத்தனமாகக் கடந்து செல்ல முற்பட்டால் அதற்கான தண்டனையை - நெருக்கடியையும் பின்னடைவையும் - தமிழ்ச்சமூகம் சந்தித்தே ஆக வேண்டும்.


முதலில் தமிழ்ச் சமூகம் இன்று எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளை பட்டியலிட்டுக் கொள்வோம். காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை, நிலம் மற்றும் தனியார் காணி அபகரிப்புப் பிரச்சினை, படைகளின் நிலை கொள்ளல், கடல் ஆக்கிரமிப்பும் கடலோரத்தில் தொழில் ஆக்கிரமிப்பும் , அரசியற் கைதிகள் விவகாரம், ஜனநாயக ரீதியான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலும் ஏற்படுத்தப்படும் நெருக்கடியும், மரபுரிமைகள் மீறப்படுதல், தொல்லடையாள மையங்களை இனங்காணுதல் என்ற பேரில் முன்னெடுக்கப்படும் அடையாள அழிப்பு முயற்சிகள், வரலாற்று மறுதலிப்புகள், தொழில்வாய்ப்பின்மை, தொழிற்துறைகளை மேம்படுத்துவதற்கான ஆதவற்ற நிலை, பிரதேசங்களின் அபிவிருத்தியில் சுயாதீனமற்ற தன்மையும் இடையீடுகளும், பிரதேச அபிவிருத்திக் குறைபாடுகளும் தவறுகளும் அரச நிர்வாகத்தில் அதிகரித்துக் காணப்படும் அரசியல் தலையீடுகளும் மத்தியின் அழுத்தமும், மாகாணசபையை சரியாக இயங்க விடாமல் செய்தல், அதற்கான அதிகாரப் போதாமைகள், இயற்கை வளச் சுரண்டலைக் கட்டுப்படுத்தாமை, அதை மேலும் ஊக்குவிக்கும் தவறான போக்கு, இளையோருக்கு எதன் பொருட்டும் வழிகாட்ட முடியாத நிலைமை, இனமேலாதிக்கப் பிரச்சினைகள், சமூக முரண்பாடு கள், சமூக நீதியைப் பேணமுடியாமை, ஜனநாயகப் போதாமை, போராளிகளின் போருக்குப் பிந்திய நிலைமை, பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தொடரும் அவலத்துக்கான நிரந்தரத் தீர்வு, போரில் உளச் சிதைவ டைந்தோரின் பாதுகாப்பும் மீள் வாழ்க்கையும், போராளிப் பெண்கள் பருவ வயதைக் கடந்தும் வாழ்வில் நிலைகொள்ள முடியாத நிலைமை, போரினால் உடல் உறுப்புகளை இழந்தோர் (மாற்றுவலுவுடையோரின் சிக்கல்கள்...போர்க் குற்றம் தொடர்பான விவகாரம், மீள நிகழாமைக்கான உத்தரவாதம், அரசியல் அதிகாரம் என ஒரு நீண்ட பிரச்சினைகளின் பட்டியல் உண்டு. இவற்றை விட இன்னும் பல பிரச்சினைகள் உள்ளன.

இதில் பலவற்றுக்கு அரசு தீர்வைக் காண வேண்டும். சிலவற்றுக்கு அரசும் அரசுடன் இணைந்துமே தீர்வைக் காண முடியும். சிலவற்றுக்கு தமிழ்ச் சமூகம் தனக்குள் தீர்வைக் காணலாம். ஆனால், இவை எதற்கும் எந்த நிலையிலும் தீர்வு காணப்படவில்லை. தீர்வைக் காணக் கூடிய முயற்சிகளும் விசுவாசமாக முன்னெடுக்கப்படவில்லை. அதற்கான ஏது நிலைகளும் (நம்பிக்கையும்) திட்டங்களும் இல்லை. புலம்பெயர் கட்டமைப்புகள் மற்றும் மக்கள் மூலமாக நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய விடயங்களும் உரிய திட்டமிடலும் செயல்முறையும் இல்லாமல் வீணாயின. மாகாணசபையின் மூலமாக தீர்க்கப்பட்டிருக்கக் கூடிய விடயங்கள் கூட உரிய முறையில் கவனிக்கப்படவில்லை. இதைக்குறித்தெல்லாம் பல்வேறு உரையாடல்கள், கவனப்படுத்தல்கள், சிறிய அளவிலான முயற்சிகள் நடந்தாலும் முழுக்காயத்தையும் ஆற்றக் கூடிய எந்த விதமான (உருப்படியான) நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மை.

இதனாலே நம்முடைய காலடியிலேயே அத்தனை பிரச்சினைகளும் அப்படியே எரியும் நெருப்பாகவும் கனலும் தணலாகவும் உள்ளன. வரவரப் புதிய புதிய பிரச்சினைகளும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அரசும் ஆட்சியாளர்களும் அவர்கள் மையப்பிரச்சினையைச் சுற்றி புதிய அயற் பிரச்சினைகளை, உப பிரச்சினைகளை உற்பத்தி செய்து அவற்றின் மூலம் நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டிருப்பது ஒரு உபாயமாகும். அந்த உபாயத்தில் அவர்கள் வெற்றியடைந்தே உள்ளனர்.

ஆனால், நாம்?

யுத்தத்துக்குப் பிறகு தமிழ்ச் சமூகம் எத்தகைய முன்னேற்றங்களைக் கண்டுள்ளது? அரசியலில்? பொருளாதாரத்தில்? பண்பாட்டில்? ஜனநாயக அடிப்படையில்? சமூக வளர்ச்சியில்? பிரதேசங்களின் அபிவிருத்தியில்? தன்னைச் சுற்றியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணும் வகையில்....? சில பிரச்சினைகளுக்காக அங்கங்கே அவ்வப்போது எதிர்ப்பு நடவடிக்கைகளும் போராட்டங்களும் நடந்திருக்கின்றன. இவற்றில் பலவும் மக்கள் அல்லது மாணவர்கள் நடத்தியது. இதில் பின்னர் தலைவர்களும் கட்சிகளும் பின்னிணைப்பாக இணைந்து கொண்டதே நடந்தது.






இதைத் தவிர, ஜெனிவாவில் மனித உரிமைப் பேரவையில் போர்க்குற்றம், பொறுப்புக் கூறல், நீதி பரிகாரம் போன்றவற்றுக்கான அழுத்த நடவடிக்கைகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவையெல்லாம் எந்த அளவுக்கு தமிழ்ச்சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றியுள்ளன? இவற்றின் மூலம் எந்தப் பிரச்சினை தீர்வுக்கு வந்துள்ளது? அல்லது தீரக் கூடிய நிலையில் உள்ளது என்பதை எவராவது அறுதியிட்டுக் கூற முடியுமா?

யுத்தத்துக்குப் பிறகு வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட மீள் குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டும் கூட அரசாங்கத்தின் (மகிந்த - மைத்திரி - ரணில் - கோத்தாபய ஆட்சிகளின்போது) தீர்மானம், நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதே தவிர, தமிழ்ச்சமூகத்தின் விருப்பு, ஆலோசனை, தேவைப்பாடுகளின் தார்மீகத் தன்மைகளோடு முன்னெடுக்கப்படவில்லை. ஆகவே தான் இன்னும் யுத்த நிலைமையை ஒத்ததாக வடக்குக் கிழக்கின் சூழல் உள்ளது. மக்களுடைய மனதிலும் பாரம் குறையவில்லை. இவற்றை இப்படியே வைத்திருக்கவும் தொடரவும் தொடர்ந்து அனுமதிக்கவும் முடியுமா? இதை ஏன் இங்கே கேட்க வேண்டியுள்ளது என்றால், தமிழ்ச்சமூகத்தின் இருப்பு தொடர்ந்தும் சிதைக்கப்பட்டு அபாய நிலைக் குள்ளாக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே. யுத்தத்துக்குப் பின்னர் முன்னெடுக்கப்பட்டு வரும் அரச எதிர்ப்பு - அரச ஆதரவு அரசியல் இரண்டுமே போதாக்குறைகளையும் பலவீனத்தையுமே வெளிப்படுத்தியுள்ளன. சரியான வழி எது? சரியான தரப்பு எது என்பதை விஞ்ஞானபூர்வமாக (கட்சி, அமைப்பு விசுவாசங்களுக்கு அப்பால், மக்கள் நலன், சமூகத்தின் எதிர்காலம் என்ற அடிப்படையில்) பகுத்தாராய்ந்து பார்த்தால் இந்த உண்மைகள் எளிதில் புரியும். ஆனால், இந்த அபாய நிலையைக் குறித்து புரிந்து கொண்டவர்கள் பலர் இருக்கின்ற போதும் அவர்கள் பகிரங்கமாக எதையும் சொல்லத் துணிவதில்லை. ஒன்று அவர்களுடைய கருத்துகள் நிராகரிக்கப்படுவதோடு அவர்கள் அவமதிக்கப்படுவார்கள். இரண்டாவது, யாரிடம் இதை எடுத்துச் சொல்வது என்ற கேள்வி.

இங்கே கவலையளிக்கும் விசயம் என்னவென்றால், இதெல்லாம் ஒடுக்கும் அரசுக்கும் மேலாதிக்க சிங்களா இனவாதத்துக்கும் வாய்ப்பளிப்பதேயாம். தமிழ்ச்சமூகம் தன்னைத் தயார்ப்படுத்தித் புதுமைப்படுத்திக் கொள்ளவில்லை என்றால், அது தொடர்ந்தும் பலவீனங்களுடன் இருக்குமாக இருந்தால், ஒடுக்குவோருக்கும் பலவீனப்படுத்த விழைவோருக்குமே வாய்ப்பாகும். முக்கியமாக தமிழர்கள் இலங்கைக்கு ஆபத்தானவர்கள், அவர்கள் எப்போதும் இந்தியாவுடன் அல்லது மேற்குலகத்துடன் சேர்ந்து கொண்டு இலங்கையைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்ற ஒரு தோற்றப்பாட்டைச் சிங்கள மக்களிடம் அரசாங்கமும் ஆளும் தரப்புகளும் செய்து கொண்டிருக்கின்றன. இதன் மூலம் தமிழ் மக்களுடைய உரிமைக் கோரிக்கையையும் அதிலுள்ள நியாயத்தையும் ஏற்கக் கூடாது என்ற மனநிலையை அவர்களிடம் தொடர்ந்தும் வளர்த்து வருகின்றன. இதுவும் ஒரு சூழ்ச்சிப் பொறியே.

ஆகவேதான் இதையெல்லாம் முறியடிக்கும் விதமாக தமிழ்ச் சமூகம் முற்றிலும் புதிய சிந்தனைக்கும் செயல்முறைக்கும் செல்ல வேண்டும் என்கிறோம். அப்படியென்றால் தற்போதுள்ள அரசியல் சக்திகளும் அவற்றின் செயற்பாடுகளும் என்ன என்ற கேள்வியை நீங்கள் எழுப்பக் கூடும். கடந்த பதினொரு ஆண்டுகள் அதற்குச் சாட்சியம். இதற்கான பதில் அதில் உண்டு. இது சரியென்றால், இதை விட - தற்போதைய நிலையை விட அடுத்த பத்தாண்டுகள் மிகக் கடினமான - கீழ்நோக்கிய காலமாகவே அமையும். அதற்குப் பிறகான காலம் அதை விடச் சரியும். ■

○ விஷ்ணு

# சிரிப்பால் வசமாக்கும் 'நவஜோதி நாடகக் குழு'



நவஜோதி நாடகக் குழு!"

இந்தப் பெயரைச் சொன்னாலே அதிரும். அந்தளவுக்கு தங்கள் நகைச்சுவை நாடகங்களால், வடக்கு மக்களின் மனதில் இடம் பிடித்துவிட்ட ஒரு நாடகக் குழு இது. இப்போது தமிழ் அரங்கியல் நவீனத்தின் கூறுகளை நோக்கிப் பயணித்தபோதும், ஜனரஞ்சகமான இடத்தை மக்களிடத்தே அவை இன்னும் பிடிக்கவில்லை. இருப்பினும் மரபார்ந்த நாடகங்களூடாகப் பிறப்பெடுத்து, பின்னர் தமக்கான படச்சட்ட மேடைக்கான அரங்காக நிலை நிறுத்திக்கொண்ட மேடை நாடகங்களில் நகைச்சுவை நாடகங்களுக்கு மக்களிடையே எப்போதும் வரவேற்பு அதிகம். அப்படி மக்கள் மனதை நாடி பிடித்தறிந்து, நகைச்சுவை நாடக உலகில் அசைக்கமுடியாத இடத்தைப் பெற்ற , சாவகச்சேரி நவஜோதி நகைச்சுவை நாடகக் குழுவினர் போர்க்காலத்தில் இருந்து இன்றுவரை பல நாடகங்களை சுயமாக எழுதி, தயாரித்து, இன்னும் அதே வீச்சோடு இயங்குவது பாராட்டுக்குரியதொன்றே.

இந்த நகைச்சுவை நாடகக்குழு 9 பேரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டது. அதனால் தான் தங்கள்ம் குழுவின் பெயரோடு 'நவ' என்று ஒன்பதைக் குறிக்கும் சொல்லையும் சேர்த்துக் கொண்டார்கள். மகேந்திரன், பேனார்ட், செல்வம், குகன், முருகன், திலகா, கமலன், உருத்திரமூர்த்தி, கெங்கேஸ்வரன் என்ற 9 பேருமே நவஜோதியின் அடையாளங்கள். இவர்களில் உருத்திரமூர்த்தியும், கெங்கேஸ்வரனுமே இந்தக் குழுவின் உயிர்மூச்சாக இருப்பவர்கள். கிட்டத்தட்ட நாடகக்குழுவை இயக்குபவர்கள் இவர்கள் இருவருமே.

அன்னக்கிளி உன்னைத் தேடுதே, லண்டன் மாமா, கண்டறியாத கலியாணம், சி.ஐ.டி. வாறான், பொம்மை, சட்டம்பியாரும் பெட்டையளும், கிளி ஒண்டு புலியாகுது, ஆப்பு...,? சாரு மச்சாள், அப்பு வன்னிக்குப் போறார், வெளிக்கிடடி வன்னிக்கு, அப்பு நான் தோட்டத்துக்குப் போறன்,...... என்று அவர்களின் நாடகங்கள் மட்டுமல்ல , நாடகங்களின் பெயர்களும் கூட, சிரிப்பை பொத்துக்கொண்டு வரச்செய்பவை. கோவில்கள், சனசமூக நிலையங்கள், பொது நிகழ்வுகள் போன்றவற்றில் நவஜோதி நாடகக்குழுவின் நாடகம் இடம்பெறப்போவதாக அறிவிக்கப்பட்டால், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை கூட்டம் அலைமோதும். கொஞ்சநேரமாவது வாய்விட்டு சிரித்து தங்கள் மனப்பாரங்களை இறக்கி வைக்க மக்களுக்கு நவஜோதியின் நாடகங்கள் துணையாக இருக்கின்றன.

"எங்களின் நடிப்புத் திறமையால் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் கூட எங்கள் நாடக்ககுழு மக்களைச் சிரிக்க வைத்திருக்கிறது" என்று கூறுகின்றார், இந்தக் குழுவை முன்னின்று நடத்துபவர்களில் ஒருவரான உருத்திரமூர்த்தி.

இவர் பாடசாலைக் காலத்திலிருந்தே நாடகம் நடிப்பதிலும், தவில் ,நாதஸ்வரம் போன்றவற்றை இசைப்பதிலும் வல்லவர். 15 வயதில் ஆரம்பித்த நடிப்புக் கலையை இன்று 68 வயதிலும் விடாது தொடர்கின்றார்.

நவஜோதி நாடக்குழுவின் நாடகங்களில் இடம்பெறும் அநேகமாக நகைச்சுவைகளை உருவாக்குபவரும் உருத்திரமூர்த்தியே. அவருக்குச் சற்றும் சளைக்காமல், நாடகங்களை மெருகூட்டி நாடக்குழுவின் அடுத்த தலையாக இருப்பவர் நடராஜா கெங்கேஸ்வரன்.

கெங்கேஸ்வரனும் பாடசாலைக் காலத்திலிருந்தே நடிப்புக் கலையை வளர்த்துக்கொண்டார். 8 ஆம் வகுப்புக் கற்கும்போதே இவர் நாடகத்தில் காலூன்றிவிட்டார்.

"நாங்கள் மேடையில் ஏறிவிட்டால் முன்னால் இருப்பவர்கள் எவரும் சிரிக்காமல் போக மாட்டார்கள். எங்கள் குழுவில் ஒன்பது பேர் இருந்தாலும் ஒவ்வொருவருமே வெவ்வேறு பகுதிகளில் தான் வசிக்கின்றோம். சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து,தசாப்தங்களைத் தாண்டியும் நாடகங்களை இன்றும் நடித்துக்கொண்டிருக்கின்றோம். நாடகம் என்று வந்துவிட்டால், என்ன தான் வேலை இருந்தாலும் அதையெல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு, ஒன்பது பேருமே ஒன்றுகூடிவிடுவோம். அந்த அளவுக்கு எங்கள் குழுவின் ஒன்பது பேருமே நாடகக் கலையை உயிராக நேசிக்கிறோம்" என்று கூறுகின்றார் உருத்திரமூர்த்தி. நாடகம் மூலமாக எவ்வளவு பணம் கிடைத்தாலும் அந்த வருமானம் குழுவில் உள்ள அனைவருக்கும் சமமாகவே பகிரப்படுகின்றது. நான் நாடகத்தை இயக்குபவன் என்றோ மற்றையவர் அதிகளவு நேரம் வகிபாகம் பெறுபவர் என்ற வேறுபாடோ இன்றியே பணம் சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். குடி, வெறி போன்ற கெட்ட பழக்கங்களை எங்கள் நாடகக் குழுவினரிடம் மருந்துக்கும் கூட அனுமதிப்பதில்லை. முதலில் எங்கள் குழுவில் பத்துபேர். ஆனால் அதில் ஒருவர் குடிப்பழக்கம் கொண்டவர். அதனால் அவரை நிறுத்தி விட்டோம். ஒன்பது பேரும் நவஜோதியாக மாறி விட்டோம். ஒற்றுமை குலையாமல் இன்றுவரை நாடகங்களை நடத்தி வருகின்றோம்"என்று பெருமை பொங்கக் கூறுகிறார் உருத்திரமூர்த்தி.

நவஜோதி நாடகக்குழு எளிமையான மக்கள் குழுவாகவே இயங்குகின்றது. வீணான செலவுகள் எதுவும் வைப்பதில்லை. அவ்வளவு ஏன், நாடகங்களில் ஆடம்பரமான ஆடைகள் கூடப் பயன்படுத்துவதில்லை. பெரும்பாலும் சமூக நாடகங்களையே இவர்கள் தயாரிப்பதால் சாதாரண உடைகளையே பயன்படுத்துகின்றனர். ஒவ்வொருவரினதும் உடைக்கு அவரவரே பொறுப்பு. அர்ப்பணிப்பான தங்கள் நாடகப்பணிக்காக பல விருதுகளும் சான்றிதழ்களும் நவஜோதிக் குழுவுக்கு கிடைத்துமுள்ளன.


"எனக்கு ஜனாதிபதி விருது கிடைக்க இருந்தது. அதற்கான அழைப்பும் வந்திருந்தது. எனினும், கொரோனாத் தொற்றுக் காரணமாக விருது வழங்கல் தடைப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று இல்லையெனில் எங்களுக்கு நகைச்சுவை நாடகங்களை நடிக்க நேரம் தட்டுப்பாடாகவே இருந்திருக்கும். நிறையக் கோவில்களில் நான் நாதஸ்வரம் வாசிக்கவேண்டிவரும். எனினும், நாடகம் நடிக்கவேண்டும் என்று அழைத்தால், வேறு எவரையாவது கோவிலுக்கு அனுப்பிவிட்டு நாடகத்துக்குச் சென்றுவிடுவேன்.

ஏனெனில், நாதஸ்வரம் போன்று நாடகமும் ஒரு கலை, ஒரு ரசனை. கலைகளைக் கலை அம்சங்களோடுதான் அணுகவேண்டும், நோக்கவேண்டும். மீசாலை இராக்கச்சி அம்மன் கோவில் என்னுடையது. அதில் சிறுவர்களுக்கு தவில், நாதஸ்வரம் உள்ளிட்ட கலைகளைப் பழக்குவதிலும் அயராது ஈடுபட்டுள்ளேன். கலைகள் அருகிச் செல்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது. எப்படியாவது மற்றையவர்களுக்கும் பழக்கி கலைகளைப் பேணவேண்டும். அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டுதானிருக்கின்றேன் " என்று கண்கள் முழுதும் கனவுகளோடு கலைகள் மீதான தனது தாகத்தை வெளிப்படுத்துகிறார் உருத்திரமூர்த்தி.

"எங்களுடைய நாடகங்களுக்கும் மற்றவர்களின் நாடகங்களுக்கும்,பெரும் வித்தியாசம் இருக்கும். மற்றவர்கள் ஒரு நாடகத்தை எழுதி, வசனங்களைப் பாடமாக்கி, பல நாள்கள் ஒத்திகை செய்த பின்னர்தான் மேடையேற்றுவார்கள். ஆனால் நாங்கள் அப்படியல்ல. நாங்கள் ஒத்திகையே பார்ப்பதில்லை. திடீரென்று கதைகளை உருவாக்கி ,எவ்வித முன்னாயத்த மும் இன்றி திறமையாக நகைச்சுவை நாடகங்களை நடித்துவிடுவோம். ரசிகர்களை சிரிக்கவும் வைத்துவிடுவோம்." என்கின்றார் நவஜோதியின் மற்றைய நகைச்சுவை நாடகக் கலைஞரான கெங்கேஸ்வரன்.

"கோவில்கள், சனசமூக நிலையங்கள், பொது நிகழ்வுகள் என எங்கு என்றாலும் நகைச்சுவை நாடகங்களை நடிக்கத் தயங்குவதில்லை. மற்றையவர்கள் அது வேண்டும், இது வேண்டும் என்று விழாக்குழுவினருக்கு பல நிபந்தனைகள் போடுவதுண்டு. ஆனால் எங்களுக்கு மேடை மட்டும் இருந்தால் போதும். மற்றையவற்றை நாங்களே பார்த்துக்கொள்வோம்" என்றும் கூறுகின்றார் கெங்கேஸ்வரன். நகைச்சுவை நாடகங்களில் பல்வகைக் குரலோனாக சிறப்பாகவே அரங்கை திகைப்பூட்டுவதிலும், ஆச்சரியப்படுத்துவதிலும் கெங்கேஸ்வரன் வல்லவர் . அவர் மனிதர்களின் பல குரல்களைப் போல மட்டுமன்றி, நாய் , பூனை,குருவிகள் என்று பிராணி களைப்போலவும் துல்லியமாக ஓசை எழுப்பக்கூடியவராகவும் நாடகங்களில் வலம் வருகின்றார்.

இவ்வளவு வருடங்கள் தாங்கள் நகைச்சுவை நாடகங்களை நடித்துவிட்டாலும் எங்களுக்குப் பின்னர் யார் இந்த நாடகங்களைத் தொடர்வது? என்ற கேள்வியும் இந்தக் குழுவினருக்கு உண்டு . தாங்கள் நடித்த நகைச்சுவை நாடகங்கள் தங்களது காலத்துடன் நின்று விடக்கூடாது என்பதில் நவஜோதி நாடகக்குழுவினர் மிகத் தெளிவாகவே உள்ளனர். அதனால் இவற்றை இளையோருக்குப் பயிற்றுவித்து வளர்த்தெடுக்க, தொடர்ந்து கொண்டு நடத்தக் கூடிய வகையிலான முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். பாடசாலை மாணவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இவற்றைப் பழக்குகின்றோம் என்றும் சொல்கிறார்கள். கனவுகள் நனவாகட்டும்.



தாங்கள் நடித்த நகைச்சுவை நாடகங்கள் தங்களது காலத்துடன் நின்று விடக்கூடாது என்பதில் நவஜோதி நாடகக்குழுவினர் மிகத் தெளிவாகவே உள்ளனர். அதனால் இவற்றை இளையோருக்குப் பயிற்றுவித்து வளர்த்தெடுக்க, தொடர்ந்து கொண்டு நடத்தக்கூடிய வகையிலான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.



# விதானையார் வீட்டு முற்றம் 7

○ வடகோவை வரதராஜன்

# தென்னம் தோப்புகளில் மண் ஈரத்தை பேணல்

நான் போகும்போது செல்லையா அண்ணர் தனது தென்னம் தோப்புக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார். நெற்றியில் வியர்வை முத்திட்டிருந்தது.

பர்வதம் மாமி கீழ்ச் சேலையை தூக்கி கொசுவத்தில் செருகிக் கொண்டு, தென்னம் தோப்பு எல்லைகளில் நின்ற கமுகமரங்களில் இருந்து விழுந்த பாக்குகளை பொறுக்கி கடகத்தில் போட்டுக்கொண்டிருந்தார். வெற்றிலை போட்ட வாய் இரத்தமாகச் சிவந்திருந்தது.

எனது மோட்டார் சைக்கிளைக் கண்டதும் அவசரம் அவசரமாக சேலையை கீழே இழுத்து கெண்டைக் கால் வரை மறைத்துக்கொண்டார்.

"வா! வா! உன்னைத்தான் பாத்துக்கொண்டிருக்கிறான்" என்று செல்லையர் வரவேற்றார்.

"வாங்கோ விதானையார்" என்று பர்வதம்மாமி தன் பங்குக்கு மகிழ்ச்சிச் சிரிப்புடன் வரவேற்றார்.

பருந்துப் பார்வையாக செல்லையா அண்ணரின் தென்னம் தோப்பை கண்களால் அளந்தேன்.

அரை ஏக்கர் காணியில் ஏறத்தாழ 35 இளம் தென்னமரங்கள் 24 அடி இடைவெளியில் நேராக நடப்பட்டு காய்த்து குலுங்கிக் கொண்டிருந்தன.

எல்லைவேலிகளில் கிளிசீரிடியாவும் இப்பில் இப்பிலும், அகத்தியும் நெருக்கமாக நடப்பட்டு நாலு வரி முள்ளுக்கம்பி ஓடப்பட்டிருந்தது.

செல்லையர் வீட்டு ஆடுமாடுகளுக்கு தீவனத்துக்கு பஞ்சம் இல்லை என நினைத்துக்கொண்டேன்.

"பாரு! உந்த மோட்டரை ஒருக்கா நிப்பாட்டும். தம்பியோடை கதைச்சுக்கொண்டு எப்பன் தகிப்பாறுவம்" என்றார் செல்லையர்.

அங்கு தறித்து போட்ட தென்னம் குற்றி ஒன்றில் அமர்ந்து கொண்டேன்.

துவாயால் வியர்வை துடைத்துக்கொண்டு என்னருகில் அமர்ந்த செல்லையர்,

"இறைச்சு மாளுதில்லை மோனை. எப்பிடி இறைச்சாலும் நாலாம் நாள் புழுதி பறக்குது'' என்று வெப்பியாரப் பட்டார்.

"எத்தினை நாளுக்கு ஒருக்கா இறைக்கிறனீங்கள்?

"கிழமைக்கு ஒரு இறைப்பு இறைக்கிறன். எண்டாலும் நாலாம் நாள் மண்ணிலை ஈரப்பசையைக் காணக் கிடைக்குதில்லை."

தென்னம் தோப்புகளில் மண் ஈரத்தை பாதுகாக்க சில முறையள் இருக்கண்ணை. அதைக் செய்தமெண்டால் இப்பிடி அடிக்கடி இறைக்கத் தேவையில்லை. மண்ணிலை ஈரலிப்பு தொடர்ந்து இருந்துதெண்டால்தான் தென்னை மரங்களில் இருந்து எங்களுக்கு சீரான உச்ச விளைச்சல் கிடைக்கும்."

"ஏன் விதானையார் ஈரலிப்பைப் பேண வேணும் எண்டு சொல்லுறியள்" பர்வதம்மாமியும் அருகில் இருந்த தென்னம் குற்றி ஒன்றில் அமர்ந்து கொண்டு கேட்டார் '' "அதிலை கனக்க விசயம் இருக்கு பாருங்கோ"

1) மண்ணிலை ஈரம் இருந்தால் தான் பசளையளை மரத்தாலை உறிஞ்ச முடியும்.

2) ஈரம் இருந்தால்தான் மரம் நீரை உறிஞ்சி ஒளித்தொகுப்பைச் செய்து தேங்காயை உருவாக்க முடியும்.

3) மண் ஈரப்பிடிமானத்தோடை இருந்தால்தான் மண்புழுக்கள் பெருகி மண்ணை வளப்படுத்தும்.

4) மண்ணுக்கும் மரங்களுக்கும் நன்மை செய்கிற நுண்ணுயிர்கள் பெருக வேண்டும் என்றால் மண்ணில் ஈரப்பற்று தொடர்ந்து இருக்க வேணும்.

5) மண்ணிலை ஈரம் இல்லாமல் வறட்சி நீடிச்சுது எண்டால் பிடிக்கிற குரும்பட்டிகள் எல்லாம் கொட்டுண்டு போயிடும்.

6) வறட்சி தொடர்ந்து நீடிச்சுது எண்டால் வேர்கள் தடிப்படைந்து மரத்தாலை நீரை உறிஞ்ச முடியாமல் போயிடும்.

7) வறட்சி மூண்டு மாதத்துக்கு மேலை நீடிச்சுது எண்டால், புதிதாக ஓலைகள் வராது.

8) ஒரு மரத்தில் இருவது ஓலைகளுக்கு குறைவாய் இருந்துதெண்டால் விளைச்சல் குறைவடையும்."

"உவளவு விசயமிருக்கே விதானையார்" ஆச்சரியமாக கேட்டார் பர்வதம் மாமி.

"இதாலைதான். தென்னம் தோப்புகளிலை மண் ஈரம் தொடர்ச்சியாய் பேணப்படுவேணும் எண்டு சொல்லுறது." "சரி கோப்பியை வாரும். எனக்கு அரைப் பேணி காணும். தம்பிக்கு மிச்சத்தைக் குடும்" என்றார் செல்லையர்.

"இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை எண்டபடியால் விதானையார் எப்பிடியும் வருவார் எண்டு எனக்குத் தெரியும். அவருக்குமாய் சேர்த்துத்தான் கோப்பி கொண்டுவந்தனான்"

என்றார் குறும்பாய் சிரித்த படி பர்வதம்மா...

"அப்பிடியே, நல்லதாய் ... ச்சு. தம்பிக்கு சூடு ஆறமுன்ன... வாத்துக்குடும். அவனுக்கு ... திக்க கொதிக்கக் குடிக்கவேணு... உப்பிடி கொதி சூட்டிலை... டிச் சுத்தான், ஆள் பாலிலை ... ட்ட நெருப்புத்தணல் நிறத்திலை... இருக்கிறார். செல்லையர் தன ... நளினத்தை தொடங்கினார் " ... மா இருங்கோப்பா. உங்களுக்... ப்ப வும் நளினமும் நையான... பும் தான். விதானையார் இல் ... டி எங்கடை தோட்டச் செய்... இவளவு செழிப்பாய் இருக்கே... ம? எனக்கு பரிந்து பேசிய ... தம் மாமியின் பால் கோப்பியி... வெநாவை நிறைத்தது.

கோப்பி குடித்து முடிந்த...

"மண் ஈரத்தை எப்படி... து காக்க வேணும் எண்டை... ால லன் மோனை" என்றார் செல்... ர். நேரத்தைப் பார்க்க மதியம் 12 ... க்கு பத்து நிமிடங்கள் இருந்தன.

"அண்ணை வாற கிழமை வ... மிச்சத்தை சொல்லுறன். இப்ப சி... தன் ஒருத்தனை பார்க்க ஆஸ்பத்... க்கு ஒருக்காப் போக வேணும்" என்று ... ழுந்து கொண்டேன். "வாறகிழமை ... மறக்காமை வந்து மிச்சத்தை சொல்லவேணும் விதானையார்" என்று ... ன்புக் கட்டளை இட்டார் பர்வதம்மா... மி.





# வித்துவான் பதில்கள்!

**வித்து...அன்னநடை', மின்னல் இடை என்று ஒரு பெண்ணை வர்ணிக்கலாமா?**

*க.சிந்துஜன், மன்னார்.*

அன்னநடை என்பதில் பிரச்சினை இல்லை. நடந்துவிட்டுப் போகட்டும் ஆனால் மின்னல் இடை என்பதில் இலக்கியத்துக்கும் அறிவியலுக்கும் இடையில் முரண்பாடு உள்ளது. பெண்களின் இடை நூலிடை, ஈக்காற்றுக்கு ஆற்றா இடை என்றெல்லாம் இலக்கியம் கூறும். ஆனால் அறிவியல் நோக்கில் பெண்கள் பல்வேறு விடயங்களைச் சுமக்க வேண்டி இருப்பதால் ஆண்களை விடப் பெண்களின் இடை பருத்ததாகவே கொள்ளப்படுகின்றது. அப்படியானால் கவிஞர்கள் பொய் சொல்லியிருப்பார்களா? இல்லை. அவர்கள் ஒப்பீட்டு அடிப்படையில் நோக்கினார்கள்



**டியர் வித்தூஸ் உள்ளதை உள்ளபடி கூறி, வாங்கிக் கட்டுகின்றீரே! தேவையா இந்த வம்பு?**

அமலநாதன், உருத்திரபுரம்.

யதார்த்தவாதி வெகுசன விரோதி... உள்ளதை மறைத்து சமூகத் தொற்றே இல்லை. எவரும் காணாமற் போகவே இல்லை என்றெல்லாம் கூற நான் என்ன அரசியல்வாதியா?



**வித்து அண்ணா... எதற்கு வேகம் வேண்டும்? எதற்கு விவேகம் வேண்டும்?**

சுமதி, ஆனையிறவு.

ஒரு பெண்ணை எப்படி அணுகுவது என்பதற்கு வேகம் வேண்டும். அதன்பின் விவேகம் வேண்டும்.



**வித்துா! நீங்கள் உளவாளியா?**

சாந்தினி, [redacted].

உளவாளியும் இல்லை. ஊத்தைவாளியும் இல்லை, ஓட்டைவாளி. தப்பான விமர்சனங்களை அப்படியே ஒழுக விட்டு விடுவேன்.

# அறிந்தும் அறியாமலும்



## சந்தித்த வேளையில்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்சவுக்கும், முன்னாள் அமைச்சர் மங்கள சமர வீரவுக்குமிடையில் இரகசிய சந்திப்பொன்று நடை பெற்றுள்ளது எனவும், தெற்கு அரசியலில் இது திடீர் திருப்பங்களை ஏற்படுத்தக்கூடும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. நாடாளுமன்ற அரசியலுக்கு 'குட்பை' கூறினாலும் செயற்பாட்டு அரசியலுக்கு மங்கள சமரவீர இன்னமும் விடைகொடுக்கவில்லை. பலமானதொரு சிவில் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் அவர் தீவிரமாக இறங்கியுள்ளார். எந் நேரத்தில் வேண்டுமானாலும் மங்கள அதிர்ச்சி வைத் தியம் கொடுக்கலாம் என்பதால் அவர் மீதான கழுகுப் பார்வைகள் தொடரவும் செய்கின்றன.

மறுபுறத்தில் பஸில் ராஜபக்சவும் திரைமறைவில் அர சியல் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றார். ஆளுங்கூட்டணியிலுள்ள விமல் வீரவன்ச, உதய கம் மன்பில போன்றவர்கள் பஸிலை வெளிப்படையா கவே விமர்சித்து வருவதுடன், அவர்களின் கட்சி சார்ந்த பிக்குகளும் சொற்கணைகளைத் தொடுத்துவ ருகின்றனர்.இதனால் கடுப்பில் இருக்கும் பஸில், பங் காளிகளின் கொட்டத்தை அடக்குவதற்கு மொட்டு கட்சியிலுள்ள உறுப்பினர்களை தம்பக்கம் வளைத்து போட்டுவருகிறார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தெற்கு அரசியலில் இரு முக்கிய புள்ளிகளாகக் கருதப்படும் பஸிலும், மங்களவும் சந்திப்பில் ஈடுபட்டமைதான் பலருக்குத் தலையிடியாக மாறியது. உண்மையாகவே அவ்வாறா னதொரு சந்திப்பு நடைபெற்றதா, இது பற்றி நாம் சுழியோடினோம்.

கொழும்பிலுள்ள சங்ஹரில்லா ஹொட்டலில் நடை பெற்ற நிகழ்வொன்றில் மங்கள பங்கேற்றிருந்தார். இந்நிகழ்வுக்கு பஸில் ராஜபக்சவும் வருகை தந்திருந் தார். இதன்போது இருவரும் சந்தித்துக்கொண்டனர் எனவும், ஓரிரு நிமிடங்களே இருவரும் உரையாடினர் எனவும் அறியமுடிந்தது. எது எப்படி இருந்தாலும் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இருவரும் பெயர் போனவர்கள். இருவரையும் சில பிக்குகள் வெறுக்கும் நிலையும் காணப்படுகின்றது. எனவே, எதிர்காலத்தில் நெருக்கடியான சூழ்நிலையொன்று வரும்பட்சத்தில் இருவரும் ஒன்றாகச் சங்கமித்து செயற்படுவதற்கான சாத்தியமும் இல்லாமல் இல்லை.

## மொட்டுக்கு 'கட்'


○ சுழியன்

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசா ரணை அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வறிக்கை தொடர்பில் அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் மூன்று நாள்கள் விவாதமும் இடம்பெறவுள் ளது. எனினும், இவ்வறிக்கையானது மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சினம்கொள்ள வைத்துள்ளது. 21/4 பயங்கரவாத தாக்குதலை தடுக்கத் தவறியமை, கடமையை நிறைவேற்றத் தவறியமை மற்றும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை தொடர்பில் மைத்திரிபால சிறிசேன மீது குற்றவியல் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய வேண்டும் என ஜனாதிபதி ஆணைக் குழு பரிந்துரை முன்வைத்துள்ள மையே சு.கவின் சீற்றத்துக்கு காரணம்.

நல்லாட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, சட்டம் ஒழுங்கு அமைச்சு பதவிகளை வகித்தவர்களையெல்லாம் விட்டுவிட்டு, மைத்திரி மீது 'குற்றவியல் வழக்கு' என்பது அரசியல் ரீதியில் வைக்கப்பட்ட குறியா கும் என சுதந்திரக்கட்சி கருதுகின்றது. இதனால் அறிக்கையையும் நிராகரித் துள்ளது. இது தொடர்பில் நீங்கள் ஏற்கனவே அறிந்தும் வைத்திருப்பீர்கள். ஆனால் சு.கவின் அடுத்த கட்ட அரசியல் நகர்வு என்னவென்ப துதான் 'லேட்டஸ்' தகவல். இது தொடர்பில் மத்திய மற்றும் நிறைவேற்றுக்குழுக் கூட்டங்களிலும் ஆராயப்பட்டுள்ளது. இரு கூட்டங்களிலும் கடுந்தொனியிலேயே மைத்திரி கருத்து களை வெளியிட்டுள்ளார் .



குறிப்பாக, நடைபெறவுள்ள தேர்தல்களில் கூட்டணியாக போட் டியிடும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைத் தவிர்த்து வேறு ஒரு கட்சியுடன் கூட்டணி அமைப்பது குறித்து சுதந்திரக்கட்சி ஆராய தொடங்கியுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் உடனடியாக அரசியிலில் இருந்து வெளியேறா விட்டாலும் தேர்தல்களில் மொட்டுடன் கூட்டணி வைக்காது என்றே கூறப்படுகின்றது. அதாவது மொட்டுடனான கூட்டணி உறவை துண்டித்துக்கொள்ள சுதந்திரக்கட்சி துணிந்துவிட்டது.



## ரஞ்சனால் அதிர்ந்த அதியுயர் சபை

பெப்ரவரி மாதத்துக்கான இரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் கடந்த 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை நடைபெற்றது. 23 ஆம் திகதி இடம்பெற்ற சபை அமர்வின்போது ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்களுக்கிடை யில் கடும் சொற்போர் மூண்டது.

சபாநாயகர் அறிவிப்பு,பொதுமனுதாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர், 27/2 இன்கீழ் எதிர்க்கட்சித் தலைவர் வினாக்களை எழுப்பினார். இவற்றுக்கு இராஜங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பதிலளித்தார்.

அதன்பின்னர் ரஞ்சன் ராமநாயக்க விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்புவதற்கு எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேமதாச முற்பட்டார். எனினும், அவருக்கு உரிய வாய்ப்பு வழங்கப் படவில்லை. இதனால் கடுப்பான சஜித், தனக்கு வாய்ப்பு வழங்குமாறு பிரதி சபாநாயகர் ரஞ்சித் சிலம்பலாப்பிட்டியவிடம் தொடர்ச்சியாக வலியுறுத்தினார். சஜித்துக்கு ஆதரவாக ஏனைய எதிரணி உறுப்பினர்களும் குரல் கொடுத்தனர்.

மறுபுறத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சபை நடவடிக்கையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு முயற்சித்ததுடன், சஜித் தரப்புடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டது.

இவ்வாறு கூச்சல் , குழப்பம் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில்தான் முக்கியமானதொரு தகவலை நளின் பண்டார எம்.பி. வெளியிட்டார். " ரஞ் சன் ராமநாயக்கவை சிறைச்சாலைக்குள்ளேயே மிகவும் சூட்சுமமாக கொலைசெய்வதற்கான திட்டம் இருப்பது தொடர்பில் எமக்கு தகவல் கள் கிடைத்துள்ளன." -என்பதே அவர் வெளியிட்ட தகவலாகும்.

சபை ஆரம்பமானது முதல் ஒத்திவைக்கப்படும்வரை ரஞ் சன் விவகாரமே சபையில் ஓங்கி ஒலித்தமை குறிப் பிடத்தக்கது.

## வெல்லப்போவது யார்?

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விவகாரம் இன் னும் இழுபறி நிலையிலேயே இருந்து வருகின்றது. 2021 ஜனவரி முதல் சம்பள உயர்வு வழங்கப்படும் என உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தாலும் அது இன்னும் கைகூடவில்லை.

இந்நிலையில் சம்பள நிர்ணய சபை மார்ச் முதலாம் திகதி கொழும்பில் கூடவுள்ளது. இதன்போது சம்பள உயர்வு சாத்தியப்படும் என கூட்டு ஒப் பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் நம்பிக்கை வெளியிட்டா லும், கம்பனிகளின் மௌனம் தொடர்கின்றது. தமக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 2014 ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுத்துவருகின்ற னர். எனினும், அடிப்படை நாள் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக்குவதற்கு கம்பனிகள் எதிர்ப்பை வெளியிட்டுவந்தன. இதனால் 2020 மார்ச் முதல் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா இருக்க வேண்டும் என ஜனாதிபதி கட்டளையிட்டார். அந்தக் கட்ட ளையைக்கூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை.


கம்பனிகள் இவ்வாறு இழுத்தடித்ததாலேயே சம்பள உயர்வு விவகாரம் கூட்டு ஒப்பந்தத்திலிருந்து சம்பள நிர்ணய சபைக்கு சென்றுள்ளது. அங்கு மூன்று சுற்று பேச்சுகள் நடைபெற்றிருந்தாலும் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. அதேவேளை, சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பளம் நிர்ணயிக்கப்படும் பட்சத்தில் கூட்டு ஒப்பந்தம் ஊடாக தொழிலாளர்க ளுக்கு கிடைக்கக்கூடிய சலுகைகள் இல்லாமல்போகக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

கூட்டு ஒப்பந்தம் ஊடாக தொழிலாளர்களுக்கு நலன்புரி சேவைகள் உட்பட 28 சலுகைகள் கிடைக்கின்றன. எனவே, அந்த ஒப்பந்தத்திலிருந்து கம் பனிகள் வெளியேறினால் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும். கம்ப னிகள் வேலை நாள்களைக் குறைக்கலாம், வேலைப்பழுவை அதிகரிக் கலாம். இவற்றை சட்ட ரீதியாக சவாலுக்குட்படுத்துவதும் கடினம். எனவே, சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பளத்தை பெற்றுக்கொடுக்கும் அதே வேளை, கூட்டு ஒப்பந்தம் ஊடாக கிடைக்கும் சலுகைகளையும் பாதுகாத் துக்கொள்ள வேண்டியது தொழிற்சங்கங்களின் பொறுப்பாகும். ஆக ஆயிரம் ரூபா விடயத்தில் வெல்லப்போவது யார்? என்பதை பொறுத்தி ருந்து பார்ப்போம்.



# த்ரிஷ்யம் - 2

## கத்தியின் மீது நீதி



○ ஆரதி

கமல்ஹாசனும் கௌதமியும் நடித்திருந்த பாபநாசம் உங்களுக்கு நினைவிருக்கும். அது முதலில் த்ருஷ்யம் என்ற பெயரில் மலையாளத்தில் வந்திருந்தது. அதில் கமலுக்குப் பதிலாக மோகன்லாலும் கௌதமியின் பாத்திரத்தில் மீனாவும் நடித்திருந்தனர். அப்போதே பாபநாசத்தையும் விட, த்ரிஷ்யம் பற்றியே அதிகமாகப் பேசப்பட்டது. அது, மலையாளத்தில் மட்டுமல்லாமல் ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் என மூன்று மொழிகளில் வெளியாகி மிகப் பெரிய வெற்றியையும் பெற்றது. இப்பொழுது த்ரிஷ்யம் - 02 வந்திருக்கிறது. இது முதல் படத்தின் மீதி அல்லது தொடர்ச்சியாகும். இந்த மாதிரி முன்பும் சில படங்கள் வந்ததுண்டு. நீயா படத்தின் தொடர்ச்சியாக நானே வருவேன், கல்யாணராமனின் தொடர்ச்சி யப்பானில் கல்யாணராமன் என்றெல்லாம். ஆனால் முதல் படத்தின் வெற்றியையும் கவர்ச்சியையும் பிறகு வந்த தொடர்ச்சிப்படங்கள் பெறவில்லை. ஆனால், த்ரிஷ்யத்தின் கதை வேறு. அது முதல் படத்தையும் விடக் கூடுதல் வெற்றியைப் பெற்றிருக்கிறது. இப்பொழுதே அதற்குக் கிடைத்திருக்கும் வரவேற்பு பெரிது. பார்வையாளர்களும் அதிகம். விமர்சனங்கள், பாராட்டுகளும் அதிகம்.

அடிப்படையில் பாபநாசமும் த்ரிஷ்யமும் த்ரில்லர் வகைப்படங்களே. கொலையின் மர்மத்தோடு காவல்துறையினர் மல்லுக் கட்டுகின்ற படங்கள். ஆனால், படத்தில் வழமையைப் போல காவல்துறை இங்கே நாயக அந்தஸ்தைப் பெறவில்லை. பதிலாக தன்னுடைய குடும்பத்தை கொலைக் குற்றச்சாட்டிலிருந்து காப்பாற்றுவதற்காகப் பாடுபடும் - சவால்களை எதிர்கொண்டு, அதை முறியடிக்கும் சாதாரண குடும்பமொன்றின் தலைமைப் பாத்திரமே முன்னிலைப்படுத்தப்பட்டது. அதிலும் முக்கியமாக பெண் பிள்ளைகளைப் பெற்ற அல்லது வளர்ந்த பெண் பிள்ளைகளை உடைய குடும்பத்தின் சவால்களைப் பேசுகிறது என்ற வகையில் இதற்குக் கூடுதல் ஈர்ப்பிருந்தது. ஒரு பக்கம் குடும்பக் கதைப் படமாகவும் மறுபக்கத்தில் த்ரில்லர் படமாகவும் இருந்து சுவாரஷ்யத்தைக் கொடுத்தது.

முதல் படம் (முதல் பாகம்) கொலையைக் கண்டு பிடிக்காமலே - கொலையாளி யார் என்று உணர்ந்தாலும் அதை நிரூபிக்க முடியாமலிருக்கும் காவல் துறையின் இயலாமையோடு முடிந்தது. இரண்டாவது படம் (த்ரிஷ்யம் 02) அந்தக் கொலையாளியை நீதி மன்றில் நிறுத்துவதாக உள்ளது. இது ஒரு சவாலான காரியம். அதே தொடர்ச்சி அறாமல் கதையையும் காட்சிகளையும் நடிகர்களையும் வைத்து இதைச் சாதிக்க வேண்டும். இதில் வெற்றியும் பெற வேண்டும் என்றால், அது கத்தியின் மேல் நடக்கின்ற வித்தையே. கரணம் தப்பினால் மரணம். ஆனால், இந்த வித்தையில் மோகன்லாலும் இயக்குநர் ஜித்து யோசப்பும் வென்றிருக்கிறார்கள்.

முதல் படத்தில் கொலையுண்ட இளைஞனின் தாய், காவல்துறை அதிகாரி என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். இயல்பாகவே இந்த மாதிரிக் கொலைக் கேஸில் காவல்துறை உறங்குவதில்லை. இதில் கொல்லப்பட்டவனின் அம்மாவே பொலிஸ் அதிகாரியாக இருக்கிறாரென்றால் காவல்துறை என்ன செய்யும்? அது காத்திருக்கும்? ஆனால், கேஸைக் கைவிட்டதைப்போல நடிக்கும். பதிலாக சந்தேகத்தைக் கண்காணித்துக் கொண்டேயிருக்கும். அதற்கான புலனாய்வு வேலைகள் நடக்கும். எப்போதாவது ஒரு நாள் கொலை செய்தவன் சிக்குவான், உண்மையை ஒப்புக் கொள்வான் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் கொல்லப்பட்டவனின் உடல் கிடைக்க வேண்டும். அல்லது கொலை செய்தவன் உண்மையைச் சொல்லி விவரங்களைக் காட்ட வேண்டும். இரண்டுமே சவாலானவை. இதைப் படத்தில் வரும் ஒரு வசனத்தில் சரியாகச் சொல்லிவிடுகிறது, "சார். எனக்கு இது வெறும் கேஸ் அல்ல, யுத்தம்" என்று கொலையுண்டவனின் தகப்பனிடம் சொல்லும் காவல் அதிகாரியின் பாத்திரம்.


ஒரு கட்டத்தில் அந்தப் பையனின் உடல் கிடைத்து விடுகிறது. மீண்டும் ஜார்ஜ்குட்டி (மோகன்லால்) கைது செய்யப்படுகிறார். காவல்துறை இம்முறை ஜார்ஜ் குட்டிக்கும், அவன் குடும்பத்திற்கும் குற்றத்தை ஒப்புக்கொள்வதற்காக பெரிய வலை ஒன்றை விரிக்கிறது. அதில், ஜார்ஜ்குட்டி சிக்குவான் என்று எல்லாரும் எதிர்நோக்கி இருக்க, அங்கே ஒரு மர்மம் யுத்தமாகிறது. இந்தப் போரில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதே கதை.

நமக்கு ஏற்கெனவே தெரிந்த ஜார்ஜ்குட்டியும் அவன் குடும்பமும், அந்த ஊரில் இருக்கும் தேநீர் கடை, ஆட்டோ ஓட்டுநர்கள், பொலிஸ்காரர்கள் என எல்லாரும் இயல்பாக மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். ஆண்டுகள் சென்றாலும் கொலைக் குற்றப் பதற்றம் மாறாமல் ஜோர்ஜ் குட்டியின் குடும்பம் உள்ளது. எந்தக் காவல்துறை அதிகாரியை கண்டாலும் அல்லது காவல்துறை வாகனத்தை கண்டாலும் ஜோர்ஜ் குட்டியின் குடும்பத்தார் பயப்படுகிறார்கள். முன்பு தொலைக்காட்சி இணைப்புகளை வழங்கும் ஜார்ஜ்குட்டி இப்போது திரையரங்கொன்றின் உரிமையாளர். கூடவே சினிமா ஒன்றை எடுக்கவும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், முன்பு ஜோர்ஜ்குட்டியைத் தங்களில் ஒருவராக பார்த்த ஊர்ச் சனங்கள் இப்போது அப்படிப் பார்க்கவில்லை. அந்நியமாகப் பார்க்க தொடங்கிவிட்டனர். கால மாற்றம் அப்படியான நிலையை உருவாக்கியுள்ளது.

ஜோர்ஜ் குட்டி படிக்காத பாமரன்தான். ஆனால் கூர்ந்த மதி கொண்டவன். தன்னுடைய குடும்பத்தாருக்கு பிரச்னை ஏற்படும்போது அவனை மிஞ்சும் அறிவாளி உலகில் இல்லை என்பதைப்போல் நடந்துகொள்வான் என்பது முதல் படத்தில் சொல்லப்பட்டது அல்லவா. இது தங்களுடைய பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு நம்முடைய கடந்த காலத்தில் ஒவ்வொரு பெற்றோரும் பட்ட அவஸ்தைகளைக் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. தன்னுடைய கன்றுக்கோ குட்டிக்கோ குஞ்சுக்கோ ஆபத்து என்றால் எந்த விலங்கும் பறவையும் அதைப் பொறுத்துக் கொள்ளாது. இங்கும் ஜோர்ஜ் குட்டிக்கு ஏற்படுகின்ற அபாயச் சவால் அவனை கடைசி எல்லைவரை விரட்டுகிறது. இது உயிரினங்களின் இயல்பு.

என்றாலும் மனித வாழ்க்கை சிக்கல்கள் நிறைந்தது. நாம் நினைப்பதைப்போல அது எளிதாக நிகழ்ந்து விடுவதில்லை. ஜோர்ஜ் குட்டிக்கு ஏற்படும் குடிப்பழக்கம் எல்லாவற்றையும் அவருடைய வாயினால் வெளிப்படுத்தி விட பிரச்சினை வேறு கோணத்தில் வந்து விடுகிறது. படத்தின் மையக் கண்ணி இதுவே. இதில் குடிப்பழக்கத்தினால் உண்டான சிறியதொரு பிசிறு எப்படிப் பெரிய பிரச்சினையை உருவாக்குகிறது என்ற சேதி முன்வைக்கப்படுகிறது.

படத்துக்கான பின்னணி இசை, ஒளிப்பதிவு இரண்டும் அருமை. வழமையாகவே மலையாளப் படங்களில் கமெரா வியப்பூட்டுவதாக இருக்கும். தனியாக் கதை சொல்லுவதுண்டு. எல்லாமே ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன.



உண்மையில் 'த்ரிஷ்யம்' மாதிரியான திரைப்படங்கள் இந்திய சினிமாவில் எப்போதேனும் தோன்றும் அரிய படைப்புகள். நல்ல பொக்கிஷங்கள். அதன் அழகைச் சிதைக்காமல், கண்டுணராமல் அதற்கு இரண்டாம் பாகம் எடுப்பது உண்மையிலேயே மிகச் சிரமமான காரியம். அதை இயக்குனர் ஜித்து ஜோசப் சாதித்திருக்கிறார். படத்தின் இறுதியில் ஒரு வசனம் வரும். அது ஒரு தத்துவமாகவே நம்மைத் திணறடித்து சிந்திக்கவைக்கும். இங்கே குற்றமும் தண்டனையும் குறித்த புரிதலும் நமக்குக் கிட்டும்.

படத்தை நீங்கள் நேரடியாக அமேசான் ப்ரைம் தளத்தில் பார்க்கலாம்! இதேவேளை ஒரு கேள்வியுண்டு. பாபநாசத்தின் இரண்டாவது பாகமும் வெளிவருமா என்று. அப்படி வந்தாலும் அதில் கௌதமியின் இடத்தில் யார் இருக்கக் கூடும் எனவும் இன்னொரு கேள்வியெழவே செய்யும். ■




உங்கள் படைப்புக்களும்
சஞ்சீவியில் பிரசுரமாக
வேண்டுமா?

- சிறுகதை
- ஓவியம்
- கட்டுரை
- பத்தி எழுத்து
- கவிதை

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறது.
உங்கள் படைப்புக்களை

சஞ்சீவி

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


0773165555




# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

**1990 - 1995**

**24**




○ தில்லைநாதன் கோபிநாத்

புலிகள் உருவாக்கிய தேசக் கட்டமைப்புக்களூடாக தொடங்கப்பட்ட பல்வேறு வெளியீடுகள் நாளிதழ், மாத இதழ், மாணவர் இதழ், பெண்கள் இதழ், கலை இலக்கிய இதழ், அறிவியல் இதழ் போன்றவற்றோடு நின்றுவிடவில்லை. அதுவரை காலமும் ஈழத்தில் வந்திராத மொழிபெயர்ப்பு இதழான உலக உலா போன்றவையும் அவர்களால் தொடங்கப்பட்டன. அவ்வாறான இன்னொரு சிறப்பு வெளியீடே "விளக்கு" சஞ்சிகை ஆகும்.

ஆசிரியர் வாண்மை விருத்திக்கென தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகத்தினால் வெளியிடப்பட்ட மாத இதழே விளக்கு. கல்விசார் சஞ்சிகைகளான வித்தியாபோதினி, கல்வி போன்றவை ஏற்கனவே இலங்கையில் வெளிவந்திருந்த போதும் ஆசிரியர்களுக்கானதாக வெளியான முதலாவது சஞ்சிகை விளக்கு என்றால் அது மிகையாகாது. இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் ஆசிரியம் போன்ற இதழ்களுக்கு முன்னோடியாக அமைந்த இதழ் விளக்கு ஆகும்.

1993 ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதிக்குரியதாக அதாவது அவ்வாண்டின் ஆசிரியர் தினத்தில் விளக்கு முதலிதழ் வெளியானது. விளக்கு முதலாவது இதழின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமார சுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. பெருமளவு அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி நிர்வாக சேவையினர் கலந்து கொண்ட அந்த நிகழ்வில் கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளராக இருந்த வெ. இளங்குமரன், அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச்செல்வன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஏ4 அளவில் 46 பக்கங்களுடன் அமைந்திருந்த முதலிதழில் மேலதிகமாக இரண்டு பக்கங்களில் தேசியத் தலைவரின் வாழ்த்து என்ற தலைப்பில் ஆசிரியர் நாளைத் திகதியிட்டு கல்வி மேம்பாட்டுப் பேரவைக்கும் அவர்களது விளக்கு சஞ்சிகைக்கும் வழங்கிய வாழ்த்துச் செய்தியும் பிரசுரமாகியுள்ளது. போர்க்காலச் சூழலில் ஆசிரியர் சமூகத்தின் பொறுப்பும் பங்கும் முக்கி யமானது என்பதை வலியுறுத்துவதாக அந்த வாழ்த்துச் செய்தி அமைந்தது. முதலிதழில் மேலதிகமாக இணைக்கப்பட்டிருந்த இந்த வாழ்த்துச் செய்திக்குப் பின்னர் நேரடியாகப் புலிகளுடன் தொடர்புபட்டதான செய்திகள் விளக்கில் இடம்பெறவில்லை.

முதலிதழின் ஆசிரியராக சி. சரவணபவனும் உதவி ஆசிரியராகக் க. வை. தனேஸ்வரனும் பங்களித்திருந்தனர். அக்காலத்தின் கல்வியியலாளர்கள் தொடர்ச்சியாக விளக்கு இதழுக்கு ஆலோசனைகள் வழங்கியும் ஆக்கங்கள் வழங்கியும் பங்களித்து வந்தனர். பேராசிரியர் கா. சிவத்தம்பி, வித்துவான் க. சொக்கலிங்கம், கலாநிதி சபா. ஜெயராஜா, அதிபர் அ. பஞ்சலிங்கம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், எழுத்தாளர் வல்வை ந. அனந்தராஜ், கல்வியியலாளர் பா. தனபாலன் எனப் பங்களிப்பாளர் பட்டியல் நீண்டு செல்கிறது. அவ்வகையில் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விச் சமூகத்தினரின் பங்களிப்புடன் முழுக்க முழுக்க ஒரு துறைசார் சஞ்சிகையாகவே விளக்கு அமைந்தது எனலாம்.

உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை ஆசிரியத்துவம், கல்வியியல், பாடசாலை முகாமைத்துவம், மாணவர் நலன் போன்ற பல்வேறு விடயப்பரப்புகளில் பெருமளவு கட்டுரைகள் வெளியாகின. அவ்வப்போது கல்வித்துறையுடன் சம்பந்தப்படும் சில சிறுகதைகள், கவிதைகளும் பிரசுரமாகின. வரதர் (மீள்பிரசுரம்), குறமகள், வ. அனந்தராஜ் போன்றோரது சிறுகதைகள் அத்தகையவை. சிறந்த ஆசிரியர்கள், அதிபர்கள் தொடர்பான நினைவுப் பகிர்வுகளும் அவர்களில் சிலரது நேர்காணல்களும் விளக்கில் இடம்பெற்றன. இவை தவிர பல்வேறு துணுக்குத் தகவல்கள், செய்திகளும் விளக்கில் இடம்பெற்றன. பெரும்பாலும் இரண்டு நிறங்களைப் பயன்படுத்தி அச்சான விளக்கின் அட்டைப்படங்களை ஓவியர் தயா உள்ளிட்டோரின் ஓவியங்கள் அலங்கரித்தன.

பிரமாண்டமான வெளியீட்டு விழாவுடன் விளக்கு அறிமுக நிகழ்வுகள் முடிவடைந்து விடவில்லை. வடக்கு மாகாணத்தின் ஒவ்வோரு மாவட்டத்திலும் விளக்கு அறிமுகக் கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் சில விளக்கு இதழிலும் பிரசுரமாகின.

அத்துடன் ஒவ்வொரு இதழ் தொடர்பான கலந்துரையாடற் கூட்டங்கள் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் நடத்தப்பட்டன. முக்கிய கல்வியியலாளர்கள், அதிபர்கள் அந்தக் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டு அவர்களது கருத்துக்கள் பெறப்பட்டன. 1994 மே 16ஆம் திகதியன்று விளக்குக்குத் தனியான அலுவலகமும் அமைக்கப்பட்டது.

பாடசாலைகள் தோறும் ஆசிரியர்களுக்கு விளக்கு இதழ்கள் விநியோகிக்கப்பட்டன. புலிகளின் கட்டமைப்பின் வெளியீடு என்பதால் அதிபர்கள் அனைவரும் தவிர்க்காமல் விளக்கு இதழ்களைப் பெற்று ஆசிரியர்களுக்கு விநியோகித்தனர் என ஊகிக்க முடிகிறது. அவ்வகையில் யாழ்ப்பாணக் குடாநாடு முழுதும் விநியோகிக்கப்பட்டதோடு யாழ்ப்பாணத்துக்கு அப்பாலும் பயன்பட்ட இதழாக விளக்கு அமைந்தது.

மாணவருக்கு முழுமையான கல்வி அளிக்கும் நோக்கம் பின் தள்ளப்பட்டுத் தேசிய மட்டப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறு பெற்றுப் புகழீட்ட வேண்டும் என்பதே குறிக்கோளாகி விட்டது எனக் குற்றஞ்சாட்டும் கட்டுரையை அக்காலத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த அ. பஞ்சலிங்கம் எழுதியிருந்தார். பிரபல பாடசாலைகள் தொடர்பில் இப்போதும் உள்ள குற்றச்சாட்டாக இது உள்ளது. பாடசாலைகளில் வரலாற்றுக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற சோ. சுப்பிரமணிய ஐயரின் கோரிக்கை இக்காலத்திலும் முக்கியமானதாக உள்ளது. அவ்வகையில் இக்கால ஆசிரியர்களும் விளக்கு இதழ்களை வாசித்துப் பயன்பெற முடியும்.

(தொடரும்)

# திருவள்ளுவரின் தேநீர்க்கடை



○ இ.சு.முரளிதரன்

**விமானம் ஒன்று பறப்பதற்கு நிறை, ஏறுவிசை, முன்னோக்கிய விசை, எதிர் விசை என்னும் நான்கும் அடிப்படைகளாக அமைகின்றன.** நிறை புவியீர்ப்பினாலும், ஏறு விசை இறக்கைகளின் வடிவமைப்பினாலும், முன்னோக்கிய விசை இயந்திரங்களினாலும், எதிர் விசை காற்றில் ஏற்படும் உராய்வினாலும் தீர்மானிக்கப் படுகின்றன. விமானத்தின் இறக்கைகள் மேற்புறம் வளைந்தும், கீழ்ப்புறம் சீர்மையோடும் அமைந்திருக்கும். மேற்புறத்தை வருடிச் செல்லும் வளி நிகழ்த்தும் அமுக்கமானது வளியின் வேகத்திற்கு எதிர்மறையாக அமைகின்றது.

மேற்புறத்தில் குறைவான அமுக்கமும், கீழ்ப்புறத்தில் மிகையான அமுக்கமும் காணப்படும். ஏறு விசையின் அளவு, நிறையை விட அதிகரிப்பின் விமானம் மேலெழும்பும். மாறாக ஏறு விசையின் அளவு நிறையைவிடக் குறைந்தால் விமானம் கீழிறங்கும்.

காற்று, விமானத்தைக் கடக்கும் வகையிலும், அதனால் ஏற்படும் எதிர்விசை குறைவாக அமையும் வகையிலும் விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது. முற்பகுதி கூம்பு போல அமைவதும், மேலெழுந்த பின் சக்கரங்களை உள்ளீர்ப்பதும் காற்றின் தடையைக் குறைக்கவே ஆகும். முன்னோக்கிய விசை ஏறு விசையை விட அதிகமாயின் வேகம் அதிகரிக்கும். குறைவானால் வேகமும் குறையும். ஒரு பொருளைக் காற்றிலே நிலையாக வைத்திருக்க எதிர் எதிர் விசைகளை சமனாக்க வேண்டும். திருவள்ளுவர் 111 ஆவது குறட்பாவிலே

"தகுதி எனவொன்று நன்றே பகுதியால் பாற்பட்டு ஒழுகப் பெறின்" என்கிறார்.

அதாவது ஒவ்வொரு பகுதி சார்ந்தும் சிறப்பாக செயற்பட்டாலே சமனிலைத்தன்மை நன்றாக அமையும் எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.




இன்று (28.02.2021) திருவள்ளுவரின் குருபூசை

# மாணவர் கழகம்

**214**



**பெயர்:** புஸ்பகரன் தேஜஸ்னி,
**முகவரி:** இல.24, பாரதி ஒழுங்கை கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2014.06.21
**பாடசாலை:** புனித ஜோன் பொஸ்கோ வித்தி.

**215**



**பெயர்:** அன்பழகன் திபிஷன் ,
**முகவரி:** வடலியடைப்பு, பண்டத்தரிப்பு .
**பி. திகதி:** 20.09.2012
**பாடசாலை:** யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

**216**



**பெயர்:** றமேஸ் அஸ்வியா ,
**முகவரி:** சித்திரமேழி, இளவாலை .
**பி. திகதி:** 24.11.2012
**பாடசாலை:** யா/ இளவாலை மெய்கண்டான் பாடசாலை

**217**



**பெயர்:** டெனேசன் புஸ்பரன் அக்ஷின்
**முகவரி:** இல.24, பாரதி ஒழுங்கை கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2012.11.10
**பாடசாலை:** புனித ஜோன் பொஸ்கோ வித்தி.

சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..............................
2. முகவரி: ..............................
..............................
3. பிறந்த திகதி: ..............................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................
6. தொலைபேசி இலக்கம்: ..............................

மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

**உங்கள் புகைப்படங்களுடன்...**

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

0773165555

சஞ்சீவி மாணவர் கழக அங்கத்தவர்களாக இணைய உங்கள் புகைப்படத்துடன் கீழ்காணும் முகவரிக்கோ அல்லது வட்ஸ் அப், வைபர் எண்ணுக்கோ அனுப்பி அங்கத்தவர்களாக இணையுங்கள். உங்கள் படைப்புக்களையும் அங்கத்துவ இலக்கத்தோடு எழுதி அனுப்புங்கள்.






## உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும்

பட்டுக்கோட்டை எனும் ஊரில் சுதன் என்ற விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் தனக்கென்று ஒரு பரப்புக் காணியை சொந்தமாக வைத்திருக்கின்றான். இருப்பினும் அவனுடன் உதவிக்கு யாரும் இல்லை. அவன் தனியாகத் தான் வயல்வேலைகளை பார்த்துக்கொள்ள வேண்டும். ஆதலால் களைப்பு மிகுதியால் சில நாட்கள் வயலுக்கு அருகிலுள்ள கொட்டகையில் தூங்கி விடுவதுண்டு. மழைக் காலம் தொடங்கியது. சுதன் தனியாகவே வயலைச் சுத்தம் செய்து உழுது நாற்றுக்களை நட்டான். சில நாள்கள் கழிந்த பின் காலநிலை மாற்றம் காரணமாக புயலும், அடை மழையும் பெய்தது. இதனால் வெள்ளம் வயல் எங்கும் தேங்கி நின்றது. சில நாள்கள் கழிந்தும் அது வற்றவே இல்லை.

இதன் காரணமாக நாற்றுக்கள் எல்லாம் அழுகிப் போய்விட்டன. இதைக் கண்டு மனம் வருந்தினான் சுதன். வயலில் விளைச்சல் இல்லாததால் சுதனுக்கு உணவே இல்லை. அவனைப் பசி எனும் பிணி தாக்கியது. அந்த நேரத்தில் ஒரு மரத்தில் ஒரேயொரு மாம்பழம் மட்டுமே இருப்பது அவன் கண்களில் தென்பட்டது. உடனே அந்த மரத்துக்கு அருகில் சென்று மாம்பழத்தைப் பறிக்கும் போது அம் மரக்கிளையில் கிளி ஒன்று காயப்பட்டு தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். உடனே அருகிலுள்ள மூலிகை இலையை பயன்படுத்தி அக் கிளியைக் குணப்படுத்தி உண்பதற்கு தன்னிடமிருந்த அந்த மாம்பழத்தையும் கொடுத்தான். அதை உண்ட பின் பழைய நிலைக்கு திரும்பியது கிளி. ஆனால் கிளியாக இருந்தது ஒரு தேவதை. ஆகவே அத் தேவதை தன்னை குணப்படுத்தியதற்காக சுதனுக்கு வயிறு நிறைய உணவையும் சில வேலையாள்களை அளித்து விட்டு மறைந்தது.

**த. துளசிகா**, தர
யாழ் இந்த மகளிர் கல்
அங்கத்துவ இல



இறகுகள் பேசும் பறவைகள் உணர்வும்
சிறகுகள் முளைத்த மனிதனின் பண்போ

இருள் வனம் மிக்க ஈழம் தனில்
சிறகுகள் முளைத்த ஓரினம் ஏனோ?

சிறையடைத்த புதல்வருக்கு
தீர்வின்றிய போது
சிறகு முளைத்த புதல்வர்கள் ஏனோ?

மனிதம் அற்ற இவ் உலகு
சிறகினை கொண்டு செழித்திடுமோ?

**ந.விதுஷன்**
யா/கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை



## இலங்கை நம் நாடு

1. இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூ பட்ட 65,610 சதுர கிலோ மீற்றர் பரப்ப கொண்ட ஓர் அழகான சிறிய தீவு ஆகு
2. எமது நாட்டின் வளம் காரணமாக போ துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என பல அந்நியர்கள் மாறி மாறி நாட்டை ஆக்கிர மித்தனர். பின்னர் பல அறிஞர்களது முயற் சியினால் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி ஆங்கிலேயர்களால் எமது நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது.
3. இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் என பல்லின சமூகத்தவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் முறையே பௌத்தம், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமயங்களைப் பின்பற்றுகின்றனர்.
4. இலங்கையின் தேசிய மரம் நாகமரமாகவும், தேசியப் பறவை காட்டுக் கோழியாகவும், தேசிய மலர் நீல அல்லியாகவும், தேசியக் கொடி வாளேந்திய சிங்கமாகவும் இருந்து வருகின்றன.
5. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி யாக அதிமேதகு கோட்டாபய ஜனாதிபதி யாக அதிமேதகு கோத்தாபய ராஜபக்ச உள்ளார்.
6. எமது நாட்டில் ஏறத்தாழ 20 மில்லியன் வ யான மக்கள் வாழ்கின்றனர்.
7. நாம் இலங்கையர் என்பதில் மகிழ் அடைகிறோம்.


**ஞா.அட்ச**
தரம் 4, யா/ யாழ் இந்து ஆரம்பப் பாடசால

## மனிதம்....

வண்ணம் கொண்ட என் தோழா
எண்ணம் ஒன்று கேளாயோ
மண்ணில் இந்த வாழ்வதனை
எண்ணில் நெஞ்சு வேகுதடா

அடியும் உதையும் நாம்பட்டு
மடியும் வரையும் உழைத்தாலும்
அடிமாடாய் விலை சொல்வார்
விடியல் என்றும் எமக்குண்டோ

**க. கிருஷிகன்**
யா/சத்திய சாயி பாடசாலை



# இன்று நான் பெரிய பெண்




ம.பா. மகாலிங்கசிவம்

பெண்களின் பல்வேறு உடல் வளர்ச்சிக் கட்டங்களில் பருவமடைதல் என்பது முக்கியமான ஒன்றாக உள்ளது. உலக நாடுகளில் உள்ள பெண்களில் அனைவருமே எதிர் கொள்ளும் வளர்ச்சிக் கட்டமாக இப்பருவம் இருந்த போதும் பெரும்பாலான நாடுகளில் இது ஒரு சாதாரண விடயமாகவே கருதப்படுகிறது.

ஆனால் தமிழர் பண்பாட்டிலோ இந்நிகழ்வு இரு துருவ நிலைப்பட்ட மிகப்பெரிய மாறுதல்களுக்குக் காரணமாக அமைகின்றது. ஏறத்தாழ ஒரு மாதம் வரையான தனிமைப்படுத்தல் போன்ற போசாக்குணவுகளைச் செறிவாக வழங்கும் கண்காணிப்புடன்தொடங்கும்இப்பருவமடைந்ததற்கான சடங்கு பின்னர் ஆடம்பரமான மிகப்பெரிய பூப்புனித நீராட்டு விழாச் சடங்குடன் நிறைவு பெறுகின்றது. இவ்வளவு மிகப்பெரும் பணச் செலவுடன் அமைந்த சடங்கின் நோக்கம் என்னவென ஒருவர் சிந்திக்கலாம். பெண்களுக்குச் சிறு வயதிலே திருமணம் செய்துவைக்கும் ஒருகாலத்தில் எமது வீட்டிலும் ஒரு பெண் திருமணத்துக்குத் தயாராகிவிட்டாள் என்பதை ஊருக்கு உணர்த்துவதற்காக இந்த ஏற்பாடு எனச் சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். இதேவேளை தமிழ்ப் பெண்களுக்குப் பாடசாலைக் கல்வி கிடைக்கத் தொடங்கிய ஆரம்ப கால கட்டங்களில் பருவமடைதல் என்பதைக் கல்வியை இடைநிறுத்திப் பெண்களை வீட்டில் வைத்துப் பக்குவமாகப் பராமரிக்க வேண்டிய குறியீடாகவும் தமிழர்கள் கொண்டனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலப் பண்பாட்டோடு இன்றைய தமிழப் பண்பாட்டை ஒப்பிட்டால் மிகப் பெரியளவிலான மாற்றங்கள் ஏற்பட்டதைக் காணமுடிகிறது. இலை, குழைகளால் ஆன தழையாடை அணிந்த நிலை மாறி எட்டுமுழ வேட்டி, சேலை மூலம் தம்மை மறைத்தது ஒரு காலம். இன்றோ புதிதாகத் தைத்து இடை இடையே கிழித்து நீளக்காற்சட்டைகளோடு ஆண்களும் இரண்டு கைக்குட்டைகளோடு பெண் நடிகைகளும் தங்கள் ஆடைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் மாற்றத்தைக் காண்கிறோம்.

மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பது போல எல்லாத் துறைகளிலுமே மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் பருவம் அடைந்ததைத் தொடர்ந்து வருகின்ற தமிழ்ப் பெண்களுக்கான கட்டுப்பாடுகள் எந்தவித மாற்றமும் இல்மால் அப்படியே தொடர்ந்து வருவது ஆச்சரியத்திற்குரியதாகும்.

இவ்வகையில் சங்க அகத்திணை இலக்கியமான அகநானூற்றுப்பாடல் ஒன்றையும் சமகாலக் கவிதை ஒன்றையும் ஒப்பிட்டுக் காட்டுவதாக இன்றைய தேன்கூடு அமைகின்றது.

அகநானூறு 7 ஆம் பாடல் கயமனார் என்றும் புலவரால் பாடப்பட்டது. பாலைத்திணைக்குரியது. பருவம் அடைந்த பெண் ஒருத்திக்குக் கூறப்பட்ட அறிவுரையாக அமையும் பாடலில் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது.

“முலைமுகம் செய்தன; முள் எயிறு இலங்கின;
தலைமுடி சான்ற; தண்தழை உடையை;
அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல்;
மூப்புடை முதுபதி தாக்கு அணங்கு உடைய;
காப்பும் பூண்டிசின்; கடையும் போகலை;
பேதை அல்லை; மேதைஅம் குறுமகள்!
பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை புறத்து.....”

என்பது பாடற் பகுதியாகும். செவிலித்தாய் பருவமடைந்த தன் மகளிடம் “அறிவு நிரம்பிய சிறிய மகளே. உனக்கு மார்பகங்கள் வெளித் தெரியத் தொடங்கிவிட்டன. பற்கள் ஒளி வீசுகின்றன. தலைமுடியோ பின்னி முடிக்குமளவுக்கு வளர்ந்துள்ளது. இனி நீ மேலே மறைக்க வேண்டிய தழை ஆடையை அணிந்து கொள்ள வேண்டும். தொன்மையான இந்த ஊர் பெண்களைத் தாக்கி வருத்தும். கொடிய தெய்வங்களை உடையது. எனவே ஓடித்திரியும் தோழிப் பெண்களுடன் நீ எங்கும் செல்ல முடியாது. உனக்குக் காவல் இடப்படுகிறது நீ வீட்டு வாசலுக்கு வெளியே செல்ல முடியாது. ஏனெனில் சிறுமிக்குரிய பேதைப் பருவத்திலிருந்து இளைய பருவமான பெதும்பைப் பருவத்துக்குள் நீ ஒதுங்கியிருக்கிறாய் எனக் கூறப்படுகின்றது. பருவம் அடைவதால் பெண் உடலில் ஏற்படும் மாற்றங்களும் உடையணிவதிலிருந்து, வெளியே செல்வது வரையான கட்டுப்பாடுகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இனி இக்கவிதைக்குள் செல்லலாம்.

**பூவைப் போலவும்
காற்றைப் போலவும்
நீரைப் போலவும்
குதித்துத் திரிந்து
சுற்றிய பருவத்தில்**

**காலை உதைத்து
வீரிட்டு அழவும்
கல கல என்று
கை தட்டிச் சிரிக்கவும்
கோபம் வந்தால்
கொப்பியைக் கிழிக்கவும்
முடிந்த காலம்,**

**மரத்தில் ஏறவும்
மாங்காய் பிடுங்கவும்
பக்கத்து வீட்டுப்
பிள்ளைகளுடனே
கிட்டி அடிக்கவும்
ஒளித்துப் பிடிக்கவும்**

**ஒன்றும் பேசிலர் எவரும்,**

**இன்று
நான் பெரிய பெண்
உரத்துச் சிரித்தல் கூடாது,
விரித்த புகையிலை
அடக்கம்; பொறுமை;
நாணம்
பெண்மையின் அணிகலம்.
கதைத்தல்; சிரித்தல்;
பார்த்தல்; நடத்தல்;
உடுத்தல்
எல்லாம் இன்னபடி என்றெழுதி....**

**நான்
கல்லாய்
பாறையாய்
பனியாய்
பெண்ணாய்...............**



‘இன்று நான் பெரிய பெண்’ எனும் தலைப்பில் அமைந்த இக் கவிதையை எழுதியவர் ஈழத்தின் புகழ் பெற்ற கவிஞர்களில் ஒருவரான அ.சங்கரி பல்கலைக்கழக விரிவுரையாளரான சித்திரலேகா மௌனகுருவே அ.சங்கரி என்ற புனைபெயரிற் கவிதைகளை எழுதி வருபவர். மட்டக்களப்பில் பிறந்தவர். கவிஞர், எழுத்தாளர், ஆய்வாளர், பெண்ணியச் செயற்பாட்டாளர் எனப் பல தளங்களில் செயற்பட்டு வருபவர். பல தொகுப்பு நூல்களின் உருவாக்கத்திற் பணியாற்றியவர். இவரின் சொல்லாத சேதிகள் என்றும் கவிதைத் தொகுப்பு குறிப்பி டத்தக்கதாகும். பருவம் அடைந்ததன் பின் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால் தன்னில் ஏற்பட்ட, சுதந்திரம் மறுக்கப்பட்ட, மாற்றங்களைக் கூறுவதாகக் கவிதை ஆரம்பிக்கின்றது.

**நான்
கல்லாய் மாறிய பூ
பாறையாய் இறுகிய காற்று
பனியாய் உறைந்த நீர்”**

எனக் கவிஞர் கூறுகின்றார். பருவம் அடைவதற்கு முன் பூவாகவும் காற்றாகவும் நீராகவும் இருந்த பெண் பருவம் அடைந்த பின்னரான சமூகக் கட்டுப்பாடுகளால் உணர்விழந்து கல்லாய் மாறும், பாறையாய் இறுகும் பனியாய் உறையும் நிலை இங்கு சுட்டிக்காட் டப்படுகிறது. பருவமடைவதற்கு முன் பெண் மிகச் சுதந்திரமாகவே இருந்தாள். காலை உதைத்து வீரிட்டு அழுதல், கல கல என்று கையைத் தட்டிச் சிரித்தல், கோபம் வந்தால் கொப்பியைக் கிழித்தல், மரத்தில் ஏறி மாங்காய் பிடுங்குதல், ஏன் பக்கத்து வீட்டுப் பையன்களுடனே ஒளித்துப் பிடித்தல் ஆகியவை அனைத்துமே பெண்ணுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தன.

ஆனால் பருவம் அடைந்தவுடன் நிலைமை தலைகீழாக மாறுகின்றது. முதலில் கூறப்படும் கட்டுப்பாடு புகையிலை விரிச்சாப் போச்சு, பொம்பிளை சிரிச்சாப்போச்சு என்னும் பழமொழிக்கிணங்க உரத்துச் சிரித்தல் கூடாது என்பதாகும். அடக்கம், பொறுமை, நாணம் என்பவற்றை அணிகலன்களாகப் பூட்டிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம், கதைத்தல், சிரித்தல், பார்த்தல், நடத்தல் உடை உடுத்தல் ஆகிய எல்லாவற்றுக்கும் கட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இந்தச் சட்டங்களால் உணர்ச்சிகள் மரத்துப் போகச் செய்யப்பட்டு பெண் கல்லாய், பாறையாய் உறைந்து போன பனியாய் மாற்றப்படுகிறாள். இவற்றோடு பெண்ணாகவும் வாழவேண்டியிருக்கிறதே என்ற விரக்தி நிலையை

“நான்
கல்லாய்
பாறையாய்
பனியாய்
பெண்ணாய்......” என்னும் கவிதையின் இறுதிப் பகுதி வெளிப்படுத்துகின்றது. சங்ககாலத்தில் இருந்த இந்தக் கட்டுப்பாடுகள் இன்றுவரை தொடர்வதையே இரு கவிதைகளும் எடுத்துக்காட்டுகின்றன.

## புலிகேசியின் லங்கன் + இலங்கையன்

நீல நீர்ப் போர்வைக்குள்
ஒடுங்கிக் கிடக்கிறது
புலிகேசியின் சண்டை மைதானம்

மலைகளே மத்தியஸ்தர்கள்
புவி மாந்தர் பார்வையாளர்கள்
அலை கரங்கள் கரவொலிக்க
சண்டை சடுகுடு ஆரம்பமாகிறது.

“நீங்கள் எந்த அணி
மலைகள் கேட்கின்றன.


“நாங்கள் லங்கன் அணி,
அரசிலை எங்கள் சின்னம்
‘அப்பே ரட்ட’ எங்கள் கோஷம்
நாங்களே வென்றோம்
இனியும் வெல்வோம்
எங்கள் பற்களில் இன்னும்
ரத்தக்கறை மறையவில்லை
கண்களில் குரூரம் இன்னும்
அப்படியே இருக்கிறது.

“எதிரணி நீங்கள் யார்
மலைகள் மறு கேள்வி கேட்கின்றன.


“நாங்கள் இலங்கையன் அணி.
எங்கள் சின்னம்
அழிக்கப்பட்டிருக்கிறது
கோஷம் எழுப்ப முடியாமல்
குரல்கள் கட்டப்பட்டிருக்கின்றன
கைகளில் காணாமல்
போனோர் பதாதைகள்
கண்களில் எதிர்காலம்
பற்றிய பயம் ஆனாலும்
நாங்களும் மனிதர்கள்.

சண்டை சடுகுடு
மெல்ல மெல்ல தொடங்குகிறது.
சண்டையின் அதிர்வில்
நிலம் பிளந்து
போதி மாதவன்
வெளிக் கிளம்பலாம்
ஆதிசிவனை அகழ்ந்து
எடுக்கலாம் பவுர்ணமி நாளில்
ஞானம் பெறலாம்
அமாவாசை தினத்தில்
அடங்கி போகலாம்
சண்டை சடுகுடு
நிகழ்ந்துகொண்டே இருக்கும்
புலிகேசியின் எதிர்பார்ப்பும்
அதுதான்.

கவிஞர் வேல். லவன்.



# இதற்குத்தான் ஆசைப்பட்டோமா?







ந.பரமேஸ்வரன்

**"சமஷ்டி"**
இது விக்னேஸ்வரனினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் கனவு.

**"ஒரு நாடு இரு தேசம்"**
இது கஜேந்திரகுமாரின் மூச்சு.

இலங்கைத்தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகளால் நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வரும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முன்மொழிவுகள் இவை . இந்த மூன்று தரப்பினரின் கோரிக்கைகளும் ஒரு போதும் நிறைவேறப்போவதில்லை என்பது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற உரையாடல்கள் மூலம் தெளிவாகப் புரிகிறது. கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் போராளியுமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கூறியது போன்று "ஒரு பொலிஸ்காரனைக்கூட இடமாற்றம் செய்ய முடியாத எந்த வித அதிகாரங்களுமற்ற மாகாணசபையே 1948 முதல் 2009 வரை இடம்பெற்ற சாத்வீக ரீதியிலான போராட்டங்களுக்கும், ஆயுத வழியில் இடம்பெற்ற போராட்டங்களுக்கும் பரிசாக கிடைக்கப்போகிறது "என்ற உண்மையை விரும்பியோ விரும்பாமலோ ஈழத்தமிழர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

1978 ஆம் ஆண்டு ஒக்ரோபர் ஐந்தாம் திகதிக்குப் பின்னர் இலங்கைத்தமிழர் பிரச்சினை இப்போது தான் ஐ.நாவில் பலமாக ஒலித்திருக்கிறது.1978 ஆம் ஆண்டு ஒக்ரோபர் ஐந்தாம் திகதி கிருஷ்ணா வைகுந்தவாசன் ஐ.நா.பொதுச்சபைக்கூட்டத்தில் அதிரடியாகப் புகுந்து இலங்கைத்தமிழர்களின் இன்னல்கள் பற்றியும் இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்டுவரும் அடக்குமுறை பற்றியும் இரு நிமிடஇரத்தினச்சுருக்க உரையொன்றை ஆற்றினார். அதன் பின்னர் இப்போது ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இந்தியப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே, இலங்கைத்தமிழர்களின் பிரச்சனை பற்றி உரையாற்றியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற கூட்டத்தொடர்களில், இலங்கை உள்நாட்டுப்போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே யன்றி, தமிழர் பிரச்சினை அல்லது இனப்பிரச்சனை குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. இப்போது முதல் தடவையாக ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி இந்திரா மணிபாண்டே "இலங்கையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து, பன்னிரண்டு ஆண்டுகள் கடந்த பின்னரும் இலங்கைத்தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை" என உரையாற்றியுள்ளார்.

அவர் மேலும் தனது உரையில் "இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளுக்காக இந்தியா அர்ப்பணிப்புடன் செயற்படும். இலங்கைத் தமிழர் நீதியாகவும் கௌரவமாகவும் கண்ணியமாகவும் சமத்துவமாகவும் வாழ்வதற்கு இந்தியா அர்ப்பணிப்புடன் செயற்படும் .அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும்" எனக் கூறியுள்ளார். அடுத்ததாக அவர் கூறிய விடயம் தான் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

"தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக அமுல்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்ப்படுத்துமாறு கோருகிறோம்" என பாண்டே கூறியுள்ளார்.

ஆக மொத்தத்தில் 1987 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக்கூட்டணி கூட ஏற்றுக்கொள்ளாத, இந்தியாவினால் திணிக்கப்பட்ட காணி ,பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய மாகாணசபை தான் (13 முழுமையாக அமுல்படுத்தப்பட்டால்) இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளினதும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களினதும் உயிர்த் தியாகத்துக்கும், பல்லாயிரம் கோடிக்கணக்கான சொத்து இழப்புக்கும் கிடைக்கப் போகும் பரிசு. இலங்கையின் மீது யுத்தக்குற்றச்சாட்டுகளை முன்வைத்தால் ,இலங்கை அரசாங்கம் அதனை மறுக்கலாம், நிராகரிக்கலாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அதிகாரப்பகிர்வு ,தமிழர்களுக்கு சம உரிமை போன்ற விடயங்களை ஐ.நா.பொதுச்சபைக்கு கொண்டு சென்றால் யாரும் அதை நிராகரிக்க முடியாது.

> **இலங்கையின் மீது யுத்தக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தால் , இலங்கை அரசாங்கம் அதனை மறுக்கலாம், நிராகரிக்கலாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் ஆனால் அதிகாரப் பகிர்வு, தமிழர்களுக்கு சம உரிமை போன்ற விடயங்களை ஐ.நா.பொதுச்சபைக்கு கொண்டு சென்றால் யாரும் அதை நிராகரிக்க முடியாது.**

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குங்கள் என்று ஐ.நா. வலியுறுத்தும் போது நாங்கள் "தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க மாட்டோம்" என அடம்பிடிக்க முடியாது. எந்த ஒரு நாடும் அதற்கு ஆதரவு வழங்கவும் மாட்டாது. ஐ.நாவில்13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் இலங்கை அரசு நிச்சயம் அதற்கு செவிசாய்க்கத்தான் வேண்டும்.

""நாங்கள் தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்க மாட்டோம் "என இலங்கை அரசாங்கம் ஐ.நா வில் கூறினால் அது கேலிக்கூத்தாகவே பார்க்கப்படும் .13 ஆவது திருத்தச்சட்டம் இனப்பிரச்சனைக்கு தீர்வாக அமையாது என்பதை புரிந்து கொண்ட படியால் தான், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தனது இலங்கைக்கான விஜயத்தின் போது அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு (meaningful develotion) என்ற சொற்பதத்தை பாவித்திருந்தார். பாண்டேயும் இதே சொற்பதத்தை பாவித்துள்ளார்.

எனினும் 13 இல் ஒன்றுமே இல்லை என்ற விடயம் பாண்டேக்கு தெரியுமோ தெரியாது இப்போது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இணைந்து செய்ய வேண்டிய ஒரேயொரு வேலை 13 முழுமையாக அமுல்படுத்தப்பட்டாலும் அதில் எந்த வித பிரயோசனமுமில்லை, 13 ஒரு போதும் இனப்பிரச்னைக்குத் தீர்வாக அமையாது என்பதை சர்வதேசத்துக்கு விளங்கப்படுத்த வேண்டும் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்ற சொற்பதங்களை ஒருபுறம் மூட்டை கட்டி வைத்து விட்டு 13 இன் உள்ளடக்கம் பற்றி சர்வதேசத்துக்கு தெளிவு படுத்த வேண்டும். இது தான் இப்போது முன்னுரிமை கொடுத்து செயற்பட வேண்டிய விடயம். இல்லா விட்டால் எந்தவித அதிகாரமுமில்லாத மாகாணசபையை காலம் முழுதும் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய கட்டாய விதிக்குள் தமிழர்கள் தள்ளப்பட்டுவிடுவர்.

---

## மின்*மினிக்கதை

அகமது ஃபைசல்


உதடு வார்த்தைகளின் காவல் நாய்" என்றாள். "அதுதான் நன்றாகக் குளிப்பாட்டி உன் அறையிலிருக்கும் மெத்தையில் உறங்கவைத்திருப்பதைக் கண்டேன்" என்றதும் அவள் கண்கள் கலங்கின. அவள் சிரிக்கட்டுமே என்று "யாரைக் கண்டாலும் சிரிக்கும்" என்றேன். அவள் ஓங்கி என் கன்னத்தில் அறைந்துவிட்டாள். "உதடு நீ மை பூசும் சுவர். யார் கண்ணையும் கவரும்" என்றேன் அடியை வாங்கியும் பொறுமையுடன். "உதடு உன் சிறகு. நீயேதான் உயரே பறக்கிறாய். நீயேதான் தாழ விழுகிறாய்" என்றேன் மூச்சைப் பிடித்தபடி. "உதடு உன் மந்திரக் கோல். என்னிலே தட்டி என்னைப் பிழைக்க வைத்தாய். மிருகமான என்னை மனிதனாக்கினாய்" என்றேன். "இன்னும் எதுக்கு என் முன்னால நிற்கிறாய்? போ" என்றாள் எங்கிருந்தோ வந்து தொற்றிய கோபத்துடன். நான் தரையில் விழுந்தேன். என்னைப் பார்த்து அவள் உதடு புன்னகைத்தது ஒரு வருத்தக்காரனைப் போல.

"எல்லாப் போருக்கும் உன் விழிகளை அழைத்து வந்து நீயே வெற்றி பெறுகிறாய்" என்னிடம் பெரும் படையிருந்தும் என்ன பயன்?" என்றேன் அவளுக்குக் கேட்காத குரலில். "என் கவிதைகளை உன் கையால் அள்ளி முத்தமிட்டாயே அப்போது உன் கைக்குள்ளிருந்து சூடேறித் துள்ளிப் பாய்ந்ததே ஒரு கவிதை தெரியாதா உனக்கு?" என்று கேட்டேன். "நீ கவிதையைக் கொல்வதற்கு முன் ஒரு முறை முத்தமிடலாம் என்று நான் நினைத்ததை நீ காதலாகப் புரிந்துகொண்டாயோ" என்றாள் இமைகள் பட படக்க. "நீ முத்தமிட்டு எனது ஒரு கவிதையைக் கொன்று விட்டாய். உன் முத்தங்கள் பற்றி விசாரிக்க இன்னொரு கவிதை எழுதப்போகிறேன்" என்று அவளிடம் சவால் விட்டேன். அவள் என்னைக் கட்டியணைத்து தோற்கடித்தாள். விமானம் புறப்பட நேரமாகிவிட்டது. நான் போய் வருகிறேன் என்றது அவள் கண்கள் கடைசியாக என்னைப் பார்த்து.



# பஞ்சவர்ண கனவுகள்

○ தொல்புரம் சி.கதிர்காமநாதன்




தர்சினி!!!"

அவள் அழைத்தபோது ஒரு பதிலும் இல்லை. மறுபடியும் சற்றுப் பலமாகக் கூப்பிட்டாள் . பதில் வந்தது. ஆனால் குரல் வித்தியாசமாக இருந்தது. அது தோழி தர்சினியின் குரலாகத் தெரியவில்லை. கரகரத்த கீச்சுக் குரல். அழுத்தம் திருத்தமாக இல்லாது , கொஞ்சம் குழறலாக இருந்தது.

"யாரது?"

மறுபடியும் அது ஒலித்தது.

"யாரோ வந்திருக்கினம்-

வெளி விறாந்தையில் சற்று உயரமான இடத்திலிருந்து அந்தக் குரல் வந்தது.

அவள் தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தாள். அங்கே... அழகாக கம்பியால் அமைக்கப்பட்டிருந்த நீள சதுரக் கூட்டில் அந்தப் பச்சைக்கிளி இவளை உற்றுப் பார்த்து... சிறகடித்தது.

"இதுவா... கதைத்தது?"

அவளால் நம்பமுடியவில்லை. அப்போது தோழி வந்துவிட்டாள்.

"என்ன கிளியைக் காவலுக்கு விட்டுட்டு...

"கிளிதான் எங்கட வரவேற்பாளர். ஆரும் வந்தால் அது எங்களை சத்தம் போட்டுக் கூப்பிடும்"

"நல்லாய் பேசுது, எங்க பிடிச்சனீங்கள்?" "உங்க மீசாலையில வீட்டுத் தேவைக்குப் பனைமரம் வாங்கப் போகேக்க, அங்க பொந்துக்குள்ள இருந்து பிடிச்சுக்கொண்டு வந்திட்டினம். சின்னப் புலுட்டையா இருந்தது. இப்ப வளர்ந்திட்டுது"

வந்தவள் கொஞ்சம் கதைத்துவிட்டுப் போய்விட்டாள்.

உண்மையில் கிளி தர்சினி வீட்டின் வரவேற்பாளர்தான்.

கிளி குஞ்சாக வந்தபோது வீட்டில் கொஞ்சம் எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது.

"உதையேன் கொண்டு வந்தனீங்கள்?

"கண்ணும் முழிக்கல்லே...செட்டையும் முளைக்கேல்லை .செத்தெல்லே போகும்"

"பார்க்க அந்தரமாய் கிடக்கு...."

"பட்டமரத்தை தறிச்சு விழுத்த, பொந்துக்குள்ள இது கிடந்தது. தாயைக் காணேல்ல. பார்க்கப் பாவமாக் கிடந்தது. விட்டிட்டு வந்தா செத்துப் போயிருக்கும். அதான் தூக்கிக்கொண்டு வந்திட்டன்."

தர்சினியின் கணவன் தன் பக்க நியாயத்தைச் சொன்னார்.

"தம்பி எப்படி வளக்கிறது?"

"இங்க கனபேர் இருக்கினம். ஒவ்வொருத்தரும் தங்கட சாப்பாட்டில கொஞ்சம் கிளிக்கு கொடுத்தா கிளிக் குஞ்சு தானாய் வளர்ந்திடும்- நல்ல கூட்டை வாங்கி விட்டால் பிரச்சினை இல்லை"

அவன் சொன்ன தீர்வுக்கு பின்னர் எவரும் மறுப்புச் சொல்லவில்லை.

கிளி வளர்ந்தது. கதைக்கவும் தொடங்கியது. எல்லோரும் கிளியின் மேல் பாசம் கொண்டார்கள் .வேலை முடிந்து வீடு திரும்பியவர்கள் ஓய்வு நேரத்தைக் கிளிக் குஞ்சோடு செலவழித்தார்கள். நிறையக் கதைத்தார்கள். அது அவர்கள் வாய் அசைவுகளை அவதானித்தது. ஆட்களை இனம் கண்டது. அனைத்து ஆகாரங்களையும் கொடுத்தார்கள். அது அலகுகளால் கொத்தித் தின்னப் பழகியது. சோற்றிலிருந்து ' ரீ'வரை அது உண்ண, குடிக்கப் பழகிவிட்டது. அவர்களது ஒவ்வொரு அசைவுகளையும் அது கூர்ந்து கவனிக்கத் தொடங்கியது. வேலைக்கு ஆட்கள் போன பின்பு வீட்டில் தர்சினியின் அம்மாதான் தனித்து இருப்பாள். அவளும் நிறையக் கதைப்பாள்.ஆனந்தாமாயிருந்தது. உணவு, தண்ணீர் என தனித்தனி குவளை கிளிக்கு வைக்கப்பட்டிருந்தது. அது பாடி ஆட ,உள்ளே சிறு ஊஞ்சலும் வைக்கப்பட்டிருந்தது.

வெளி விறாந்தையின் ஜன்னல் அருகே கிளியின் கூடு தொங்கியபடியிருந்தது. ஜன்னல் கம்பிகள் ஊடாகப் பார்த்தால் உள்ளே தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் அத்தனையும் கிளியின் கண்களில் படும். மாலையில் வீட்டில் உள்ளவர்களோடு சேர்ந்து அதுவும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கும். செய்திகள், நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் அவதானிக்கும். பின் சிலவேளை சிரித்து இறக்கைகளை விரித்து ஆட்டம் போட்டு குதூகலிக்கும். அன்று மாலை தொலைக்காட்சியில் செய்தி போய் கொண்டு இருந்தது.

காணாமல் போனவர்களைத் தேடும் உறவுகளின் போராட்டம். உறவுகள் சுலோக அட்டைகளைத் தாங்கிக் கத்தியபடி கண்ணீருடன் போராட்டம் நடத்திக் கொண்டு இருந்தார்கள்.

"எவ்வளவு வருசக் கணக்காய் சனங்கள் அலைஞ்சு கொண்டு இருக்குதுகள் ஒருத்தரையும் விட்டபாடில்லை. ஜெயிலுக்க வைச்சுக் கொண்டு இழுக்கிறாங்கள். விசாரிச்சுப் போட்டுவிடலாம் தானே"

"இங்க வாற கார்த்தியின்ரை அப்பாவையும் இன்னும் விடேல்ல. தாய் பாவம் .இன்னும் அலைஞ்சு கொண்டு திரியுது"

"சொன்னாப் போல, கார்த்தியையும் ரண்டு நாளாக் காணேல்ல"

"சோதனை போல... பள்ளியும் தொடங்கிட்டுது. இல்லாட்டி இந்தக் கிளியோட தானே அவனின்ரை .பொழுது போறது"

"நேற்று அவனின்ர பேர் சொல்லி கிளி கூப்பிட்டது"

வீட்டிலுள்ளவர்கள் கதைத்துக் கொண்டார்கள். கிளி எல்லாவற்றையும் கவனித்தது.

அதிகாலையில் அதற்கு விழிப்பு வந்துவிடும். அவர்கள் எழும்பாவிட்டால்... கிளி கூப்பாடு போடும்.

"எழும்புங்கோ எழும்புங்கோ..." விடிஞ்சதும் அது கண்ணில் படும் அனைவருக்கும் காலை வணக்கம் சொல்லும்.

அவர்களும் பதிலுக்கு காலை வணக்கம் சொல்வார்கள்.

"பஞ்சவர்ணம் காலை வணக்கம்"

"என்ன அது பஞ்சவர்ணம்?" அது கிளிக்கு அவர்கள் வைத்த பேர் ,பஞ்சவர்ணம்.

இந்தப் பேரை வைத்தது தர்சினியின் அம்மாதான். அவா தனது தாயாரது ஞாபகத்துக்கு அந்தப் பெயரைக் கிளிக்கு வைத்துவிட்டார். பதிலுக்கு கிளியும் அவரைப் பத்தினியென்று கூப்பிட்டது. பத்தினியின் மேல் கிளிக்கும் நல்ல விருப்பம் தான்.

வீட்டில் எப்போதும் கிளியின் கண்களுக்கு தென்படும் ஜீவன் அவள்தானே. ஆனால் கார்த்தி அங்கு வந்தபின்னர் நிலைமை மாறிவிட்டது. அவள் வேறு பிள்ளைகளுடன் விளையாடப் போவதில்லை. எப்போதும் கிளியோடு பேசுவான். கிளி அவன் சொல்வதை அமைதியாகக் கேட்கும்.

" நான் என்ர அப்பாவைப் பார்த்ததில்லை. ஆமி பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். தேடுறம்... ஜெயிலுக்கு வைச்சிருக்கிறாங்கள் எண்டு கதைக்கினம்.

அம்மா பாவம் அலைஞ்சு கொண்டு திரியுறா. ஒரே கஸ்டமாய் கிடக்கு.. அப்பாவை எங்க வைச்சிருக்கிறாங்கள்... நீ... சொல்லுவியே?"

கிளி கண்களை உருட்டி அவனைப் பார்க்கும் "கார்த்தி... கார்த்தி" என்று சொல்லி ஆறுதல் படுத்தும்.

"பாவம் நீ... நீயே கூட்டுக்குள்ள நிக்கிறாய். நீ எங்க போய் தேடுறது...?" அது புரிந்தது போல் இறக்கைகளை அடித்து ஊஞ்சலில் ஆட்டம் போடும்.

"என்ன ஆட்டம் போடுறாய்... நீ எப்படி இங்க வந்தனீ? உன்ரை அப்பா ,அம்மா எங்க?"

அவன் கிளியை பார்த்து கேட்பான். அது பதில் சொல்வதில்லை.

"பாவம் நீ அப்பா இல்லாமல் இருப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? நீ எப்படி நெடுகலும் இந்தக் கூட்டுக்குள்ள இருக்கிறாய்?"

கிளியிடம் கதைக்கும்போது இவ்வாறு அடிக்கடி அதனிடம் கேட்டுக் கொள்வான்.

அது பதில் சொல்லாமல் முழித்தபடி இருக்கும்.

"என்ரை அம்மா ,அப்பாவைத் தேடி அலைஞ்சு கொண்டு திரியுறா. ஒரு நாளும் நிம்மதியாய் வீட்டில் இருந்ததுமில்லை. நித்திரைகொண்ட துமில்லை. காணுW ஆக்களெல்லாம் அவள் பாவம் பாவமெண்டு சொல்லிப்போட்டு போயிடுவினம். அந்தக் கஷ்டம் உனக்குத் தெரியுமே?" கிளி மெல்ல தலையை ஆட்டும்

"அம்மா ஆரிட்டையும் உதவியை எதிர்பார்க்கிறதேல்லை. சந்தையில யாவாரம் செய்துதான் என்னைப் பாக்கிறா. வெளிநாட்டிலயிருந்து காசு அனுப்பி அதில் சாமான்கள் வாங்கிக் கொண்டு வந்து எங்களுக்கு தந்து படம் எடுப்பினம். எங்களுக்கு வெக்கமா இருக்கும். அப்பா இருந்தா இப்படி நடந்திருக்குமே... சொல்லு?"

கிளி இறக்கைகளை அடித்து ஏதோ சொல்லும்.

" நான் இனி என்ன செய்யப் போறன். என்ன செய்யப் போறனெண்டு அம்மா அழுது கொண்டு திரியுறா... என்னால நிம்மதியாய் இருக்க முடியாமல் கிடக்கு .படிக்கேலாது. படிச்சாலும் அது மண்டைக்க ஏறுதில்லை"

அவன் பூட்டை பிடித்தபடி அழுது கொண்டு நிற்பான். கிளி அவன் பக்கமாக நெருங்கி முகத்துக்கு முன் அமைதியாக வந்து நிற்கும்.

கார்த்தி தன் கஷ்டங்களை கிளிக்குச் சொல்லிவிட்டு போய்விடுவான். சில நாள்கள் கழித்து அவன் வழமைபோல் கிளியிடம் கேட்டான்.

"என்ன பேசாமல் இருக்கிறாய்? எனக்கு உன்ரை அம்மா அப்பாவிட்ட போக ஆசை இல்லையா? சொல்லு, பதில் சொல்லு."

"ஆசை"

அவன் அதிர்ச்சியடைந்தான்.

"என்ன உனக்கு ஆசையா?"

"ஆசை ,ஆசை...!!"

அது பறந்தபடி கரணமடித்தது.

கார்த்தி கண் கலங்கினான்.

"எனக்குத் தான் அப்பாவை பார்க்க முடியேல்லை. நீயேன் உப்பிடி அடைபட்டுக் கிடக்கிறாய்?"

கிளி ஆர்வமாக அவனையே பார்த்தபடி இருந்தது. கண்களில் கவலை தெரிந்தது. அது காணாமல் போன அப்பா தன்னைப் பார்ப்பது போல அவனுக்குத் தெரிந்தது. அவனுக்குத் தொண்டை இறுகியது. என்ன செய்வது?

"கூட்டை திறந்துவிடு" கிளி சொன்னது. கார்த்தி திகைத்து நின்றான். கிளி என்ன சொல்கிறது?

"என்ன சொல்றாய்?"

"கூட்டை திறந்துவிடு நான் அப்பாட்ட போறன்"

யோசிக்க நேரமில்லை. சரியா, தவறா தெரியவில்லை. அவன் கூட்டை நெருங்கி சிறிய கதவில் கை வைத்தான்...

"நீ உன்ரை அப்பாட்ட போ... " அவன் குரல் விம்மியது. மறுநாள் காலை வணக்கம் சொல்ல பஞ்சவர்ணம் அந்தக் கூட்டிலுமில்லை, வீட்டிலுமில்லை.

*(யாவும் சிந்தனையே)*

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

# என்ன....



14

### சந்தேகம் 1

ராகுலை யாரோ கடத்திச்சென்றனர் என்று ஒரு கட்டுக்கதையை லொயித் முதலில் சொல்லியிருந்தான். அத்துடன் ராகுலின் புத்தகப்பையை அயற்காணியில் வீசினேன் என வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறான். ஆனால் அந்தபையில் ராகுலின் பாதணிகளும் இருந்துள்ளன.பாதணிகளை அதற்குள் யார் வைத்தது? ஒரு குற்றத்தை மறைக்கும் நோக்குடன் பத்து வயதுச் சிறுவனால் சுயமாக இவ்வாறு சிந்திக்க முடியுமா?அல்லது ஊர் மக்கள் தெரிவிப்பது போல அப்படிக் கூறுமாறு அவனுக்கு யாரும் சொல்லிக் கொடுத்தார்களா ?

15

### சந்தேகம் 2

ஒடிவிளையாடும் போது கிணற்றில் ராகுல் தடுக்கிவிழுந்தான் என லொயித் தெரிவித்துள்ளான். குறித்த கிணற்றைச் சுற்றி சுவர் அமைக்கப்பட்டு பாதுகாப்பாகவே இருக்கிறது. அண்ணளவாக ராகுலின் கழுத்துளவு உயரம் வரை அந்த சுவர் கட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் ராகுல் ஓடிச்சென்று சுவரைத் தாண்டி தடுக்கி விழுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு. அப்படியானால் எப்படி விழுந்தான் ராகுல்?



16

### சந்தேகம் 3

லொயித் கிணற்றுப் பகுதியில் வழமையாக விளையாடுபவன் என்று அயலவர்கள் தெரிவிக்கின்றனர். அப்படியானால் இரண்டு பேரும் கிணற்றுக் கட்டில் ஏறி விளையாடிக்கொண்டிருந்தபோது இந்த அசம்பாவிதம் இடம்பெற்றதா?அல்லது இருவரும் சண்டையிட்டமையால் கிணற்றுக்குள் ராகுல் வீழ்ந்தானா? பதில்கள் ராகுல், லொயித் இருவருக்கும் மட்டுமே தெரியும்.

17

### சந்தேகம் 4

"ராகுல் எங்கே ?"என்று லொயித்திடம் ஊர் மக்கள் விசாரிக்கும்போது அவனின் தாய் ஏன் அதற்கு இடையூறுகளை ஏற்படுத்தினார்? அப்படியானால் கிணற்றில் சடலம் இருக்கின்றமையை ஏற்கனவே அவர் அறிந்திருந்தாரா? அத்தோடு பொலிஸ் மோப்பநாய் ஏன் அவருக்கு அருகில் சென்று நின்றது.?

### பிள்ளைகளோடு அருகிருங்கள் 18

வடக்கைப் பொறுத்தவரை சிறு வயது திருமணம் மற்றும் வறுமை போன்ற காரணங்களால் குடும்ப உறவுச் சிக்கல்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றால் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக தங்களது பிள்ளைகளையும் இங்கே விட்டே செல்ல வேண்டிய சூழல் அந்தப் பெண்களுக்கு. அப்படி தாயில்லாமல் வளரும் அந்தப் பிள்ளைகள் சமூகத்தில் தடம் மாறி பயணித்து துஷ்பிரயோகங்களையும் பாதிப்புக்களையும் சந்திக்கின்றனர். சிறுபிள்ளைகளைக் கொண்ட தாய்மார்கள் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்கு செல்லமுடியாது என்று அரசாங்கம் சொல்கிறது. எனினும் அது எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது கேள்விக்குறியே. சில முகவர்கள் சட்டவிரோதமான முறையில் அந்தச் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர். ராகுலின் தாய் அவனோடிருந்திருந்தால், இப்படி ஒரு சாவு அவனுக்கு வந்திருக்குமா? பிள்ளைகளோடு அருகிருந்து வாழப்பழகுங்கள். ராகுலைப் போல இன்னொரு பிள்ளைக்கும் அப்படி ஒரு அவலம் வராமல் காத்திடுங்கள்.

# புதிர்மலை மர்மங்கள்





மாயன்

32

கூன் விழுந்த உடல். ஓரிரண்டு வெள்ளைத் தலைமுடிகள். கந்தல் ஆடை. இடுங்கிய கண்கள். நடக்கவியலாத உடல்நிலை. இவற்றோடு ஒரு மூதாட்டி அங்கே நின்றிருந்தார்.

" இல்லை, அப்படி இறக்கத் தேவையில்லை. நீங்கள் அதே இளமையோடு மீளச் செல்லமுடியும் தீபவர்மரே" என்று அந்த மூதாட்டி சொன்னதும் இவர்களுக்கு ஒரே ஆச்சரியம், எப்படி அந்த மூதாட்டிக்கு தீபவர்மனைத் தெரியும் என்று. ஆனால் தீபவர்மனுக்கு எவ்வித ஆச்சரியமும் இல்லை. ஏனெனில் அவன் அந்த மூதாட்டியை முன்னரே கண்டிருக்கிறான். அது வேறுயாருமல்ல, சாட்சாத் பவளராணியேதான். அவள் இரவொன்றில் கதவை தாழிட்டு விட்டு, மாயக்கண்ணாடியின் முன்னால் இதே உருவத்தோடு தான் நின்றிருந்தாள். அதனால் இதழ்களில் புன்னகை தவழ,

" பவளராணி, தாங்கள் நலமா உள்ளீர்களா?" என்று இயல்பாகக் கேட்டான் தீபவர்மன்.

இப்போது அதிர்ச்சி அடையும் முறை பவளராணிக்கு.

" தீபவர்மரே, எப்படி என்னை அடையாளம் கண்டுகொண்டீர்?" என்று அதே ஆச்சரியத்தோடு அவள் கேட்டாள்.

" இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. நாங்கள் இருவரும் நன்கு பரிச்சயமானவர்கள் தானே. இதில் அடையாளம் காண்பதில் சிரமமில்லையே"

" சிரமமில்லைத்தான். ஆனால் நீங்கள் பார்த்த பவளராணி இப்படி இல்லையே. அப்போது நான் இளமையாக அல்லவா இருந்தேன்"

"தவறு, இளமையாக அல்ல. இளமை போன்று" என்று திருத்தினான் தீபவர்மன்.

" அதெப்படி உங்களுக்குத் தெரியும்?" மீண்டும் ஆச்சரியத்தைக் குரலில் காட்டினாள்

" அன்றிரவு நீங்கள் பூட்டிய அறைக்குள் இதே கோலத்தோடுதான் இருந்தீர்கள்"

அவன் சொன்னதும் அவள் முகம் இருண்டது.

"அப்படியானால் என்னைப் பற்றிய இரகசியம் தங்களுக்கு முன்னரே தெரியுமா?"

"தெரியும் பவளராணி, ஆனால் நான் தான் இப்போது உண்மையில் முதியவனாகி உருவம் மாறிவிட்டேன். எப்படி என்னைக் கண்டுபிடித்தீர்கள்?" என்று அவளிடம் பதில் கேள்வியை வீசினான் தீபவர்மன்.

" நல்ல கேள்விதான். ஆனால் உங்களையே நான் பின் தொடர்ந்து வந்ததால் அடையாளம் காண்பதில் சிரமம் இருக்கவில்லை"

என்ற பவளராணி, தான் மாயக்கண்ணாடிக்குள் புகுந்த பின்னர் நடந்த கதையைச் சொல்லத் தொடங்கினாள். அந்தக் கதையைக் கேட்க கேட்க அங்கிருந்த அனைவருக்கும் பெருவியப்பு ஏற்படத் தொடங்கியது.

( புதிர்கள் தொடரும்)

மின்னல்

# திரடி அரங்கு



## கொரோனாப் பழிவாங்கல்

( முகப்புத்தகத்தில் வெளிவந்த பதிவொன்றின் செம்மையாக்கம் இது. மக்கள் நலன் கருதி பிரசுரிக்கப்படு கின்றது)

"கொரோனா என்பது ஓர் தொற்றும் வைரஸ் தாக்கம் மட்டுமே. ஆனாலும் தொற்றாளர்களை சமூக விரோதிகளாகக் காட்ட முனைவதும் விநோதமாக பார்ப்பதும் இவ்வளவு நாள்கள் கடந்தும் நோய் பற்றிய போதிய அறிவில்லாதவர்களின் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றது.

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் ஒரே நிறுவனத்தில் பணிபுரியும் 5 ஊழியர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்தார்கள். அவர்களது குடும்பங்கள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டன. அவர்களில் மிருசுவில் பகுதியில் வசிக்கும் ஊழியர் ஒருவரது குடும்ப உறுப்பினர்கள் ஐவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மிருசுவில் பகுதியில் பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டதுடன் பல கிராமங்கள் மிகவும் ஆபத்தானவையாகவும் பதற்றமானவையாகவும் வெளிக்காட்டப்பட்டன.

ஆனால் மூன்று நாள்களின் பின்னால் தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் யாருக்குமே தொற்றுப் பரவல் இடம்பெறவில்லை என அறியப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் எல்லா இடங்களிலும் இடம்பெறுவது தற்போது சாதாரணமாகிவிட்டாலும் மிருசுவில் பகுதியில் உருவாக்கப்பட்ட பதற்றமானது முழுவதும் செயற்கையானதாகவும் சுகாதாரப் பரிசோதகரது அதிகார துஷ்பிரயோகத்தாலுமே இடம்பெற்றுள்ளது. இங்கு இடம்பெற்ற தவறுகள் வெளிக்கொணரப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது விட்டால் நாளை மற்றைய இடங்களிலும் இதே தவறுகள் இடம்பெறலாம். செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட இப் பதற்றமானது கொரோனா பரவல் பற்றிய போதிய விழிப்புணர்வு அற்ற மிருசுவில் பகுதி இளைஞர்கள் ஒரு சிலரால் அவர்களது தனிப்பட்ட சமூக மக்கள் மீதான முன்விரோத வெளிப்பாடாக உருவாக்கப்பட்டது.

இவர்கள் இந்தப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகருடன், தங்களுக்கு உள்ள நெருக்கத்தை தவறாகப் பயன்டுத்தி தங்கள் கிராமத்தில் தங்களுடன் முரண்பட்ட சில குடும்பங்களை மிகப்பிழையாக இனங்காட்டினர். இதனால் பொதுச்சுகாதாரப் பரிசோதகரால், உரிய தரவுகள் ஆய்வு செய்யப்படாமல் அந்தக் குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

பெரும்பாலும் தவறாக தனிமைப்படுத்தப்பட்ட அந்தக் குடும்பங்கள், அன்றாடம் வேலைக்கு போனால் தான் அடுப்பெரியும். அப்படியான நிலையில், 5 நாள்கள் உழைப்பின்றி இருப்பது மிகவும் கடினமானது. அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு 5 நாள்களாகியும் கிராம சேவையாளரால் உடனடியாக வழங்கப்பட வேண்டிய நிவாரணப் பொருள் உதவிகளும் இது வரையிலும் வழங்கப்படவில்லை.

இன்றைய இக்கட்டான கொரோனாக் காலகட்டத்தில் பெரும்பாலான சுகாதாரப் பரிசோதகர்கள் மிகவும் அர்ப்பணிப்போடு மக்கள் பணி செய்கின்றனர். ஆனால் இவ்வாறான , தனிப்பட்ட நலனுக்காகமக்களைத் தவறாகக் கையாளும் சிலரும் இருக்கவே செய்கின்றனர். அவ்வாறு தொழில் நேர்மையின்றி நடகப்பவர்களைச் சரிசெய்யவேண்டியது உரிய அதிகாரிகளது பொறுப்பாகும்.

# சொற்களால் வரைதல் அல்லது ஒன்றும் பலவும்

பா.அகிலனின் கவிதைப் பரிசோதனைகளை முன்வைத்து சில குறிப்புக்கள்

யோகி

பதுங்குகுழி நாட்கள்' என்ற அகிலனின் முதலாவது கவிதைத் தொகுதியில் தொண்ணூறுகளின் யாழ்ப்பாணத்தையும் போரினால் அலைக்கழிக்கப்பட்ட அதனிருப்பையும் காணலாம். அதற்குமப்பால் வாழ்வின் மீதான முடிவுறா வேட்கையையும், பெருங்காதலையும் கொண்டு தனித்தலையும் ஆன்மாவின் மெய்யுருவையும் தரிசிக்கலாம். 'சரமகவிகள்' மற்றும் 'அம்மை' ஆகிய கவிதை நூல்கள் பெருமளவுக்கு இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின், அவலங்களைப் பாடுபொருளாகக் கொண்டவை. அவருடைய தனி மனிதத் துயரின் சாட்சியங்களாக இருப்பவை.





பொதுவாக அகிலனின் கவிதைகள் அதன் மொழிதலாலும், கட்டமைப்பினாலும் தனித்துத் தெரிபவை. சொற்களின் மீதான பித்தையும், புதிய சொற்களைக் கண்டடைவதற்கான அவாவையும் அவற்றில் காணலாம். அந்த வகையில் 'ஒன்றும் பலதும்' என்ற இந்தக் காட்சி நிகழ்வும் கவிதை பற்றி புதிய உரையாடலுக்கான வெளிகளை உதைத்துத் திறக்கிறது.

ஏலவே கவிதைக்கான பிற்குறிப் பொன்றில் அவர் குறிப்பிட்டதைப் போல "சொற்களால் சொற்களை களையும் வித்தையே கவிதை" என்னும் கோட்பாட்டையும் தாண்டி கவிதைக்கான மொழிவரம்பைக் கட்டுடைத்து, தனது கவிதை வசித்துக் கொண்டிருந்த சொல்லுடலை உருவிக் களைந்து கவிதையின் ஆன்மாவைப் பேரனுபவ வெளியாகாக் கொண்டுவருகிறார்.

> கவிதை என்பது ஓர் இலக்கிய வடிவமாகும்.
>
> அது சொற்களை அடிப்படை யாகக் கொண்டது.
>
> மனவெளியை வரிகளமாகக் கொண்டது.
>
> காண்பியக் கலைக்கென்று தனியான மூலக்கூறுகளும் வெளிப்பாட்டு முறைகளும் உண்டு.

கவிதைகளை ஒரு கலைக்கூடத்தில் ஸ்தாபிக்கிறார். கலைக்கூடம் என்பது இங்கே ஒரு கவிதைப் புத்தகமாக உருமாறுகின்றது. இங்கே அவருடைய கவிதைகளின் படிமங்கள் காட்சி வடிவம் பெறுகின்றன. ஒலிக்குறிப்புக்களாகின்றன. தொட்டுணரும் பண்பை எட்டுகின்றன. கவிதானுபவத்தை வாசித்துப் பெறுதல் என்பதற்கு அப்பால் இங்கே கவிதை கண்களால் பார்க்கப்படுகிறது செவிகளால் கேட்கப்படுகிறது. காணுதலும் கேட்டலும் கூட ஒரு வகையில் வாசித்தலின் இன்னொரு வகைதான்.

இன்னும் கூறினால், அகிலன் தனது கவிதைகளை மீள எழுதுகிறார். ஆனால் சொற்களால் அல்ல. சிலவேளை களில் ஒலியினால் எழுதுகிறார், சில வேளைகளில் ஒளிகொண்டு எழுதுகிறார்; இன்னும் சில வேளைகளில் எழுதுவதற்கான மேற்பரப்பை மாற்றுகிறார்; எழுதியதைப் பாடிப்பார்க்கிறார்; சொல்லிக் காட்டுகிறார் ,பிறரைச் சொல்ல வைத்துக் கேட்கிறார். மேலும் சொல்லின் வரிவடிவங்களோடும் பரிசோதனை செய்து பார்க்கிறார். இதன் பேறாகக் கவிதைக்கான புதிய மொழிதலையும், சொல்முறையின் உத்தி நுட்பங்களையும் கண்டுபிடிக்கிறார். இவையனைத்தையும் அவர் கவிதைப்புலம் மற்றும் கவிஞர் என்ற எல்லைக்குள்ளே நின்றுதான் நிகழ்த்துகிறார். கவிதை எழுதுதலின் சாத்தியங்களையும் கேள்விக்குள்ளாக்குவதன் மூலம் சொற்களின் வெவ்வேறுவகைப் பரிமாணங்களைத் தரிசிக்கிறார்.

**கவிதை என்பது ஓர் இலக்கிய வடிவமாகும். அது சொற்களை அடிப்படையாகக் கொண்டது. மனவெளியை வரிகளமாகக் கொண்டது.** ஆனால் காண்பியக் கலைக்கென்று தனியான மூலக்கூறுகளும் வெளிப்பாட்டு முறைகளும் உண்டு. கலைவரலாற்றில் இந்த இருவேறு கலை வடிவங்களும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்தும் ஒன்று மற்றையதை இட்டு நிரப்பியும், எதிர்வினை புரிந்தும் பயணித்திருப்பதைக் காண முடியும். தற்குறிப்பேற்றக் கலை என்னும் (FUTURISM) நவீன ஓவியக் கோட்பாடானது கவிஞர்களுக்கும் ஓவியர்களுக்குமிடையிலான இடையூடாட்டத்தின் விளைவாகத் தோற்றம் பெற்றது. 1909 இல் பரிஸ் நகரத்துக் கவிஞரான எவ்.ரீ.மரிநெற்றி என்பவரால் இக்கலைக் கோட்பாட்டுக்கான அறிக்கை முன்வைக்கப்பட்டது. 1912 இல் இவர் 'கட்டற்ற சொற்கள்' என்ற கவிதைக் கொள்கையை வெளியிட்டதைத் தொடர்ந்து தற்குறிப்பேற்ற ஓவியர்கள் தமது ஓவியங்களில் சொற்களையும் பயன்படுத்தத் தொடங்கினர்.

ஓவியப்படிமங்களோடு (IMAGES) சொற்களும் (WORDS) ஒருங்கிணைந்து ஓவியத்தின் அர்த்தங்களை அடுத்த தளத்துக்கு எடுத்துச் சென்றன. மேலும் 1919 இல் பிரான்சில் ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப்பட்ட மீயதார்த்த வாதம் (SURREALISM) கவிதை ,சிறுகதை மற்றும் பிறநுண்கலைகளின் மீது தாக்கம் செலுத்தியது. இரு வேறுபட்ட யதார்த்தங்களை ஒருங்கே இணைக்கும் புதியவகைக் கனவு யதார்த்தமற்றதாகி இந்த ஓவியப்பாணி கவித்துவம் மிக்கதாக உணரப்படுகின்றது.

அகிலனின் வெற்றி பெற்ற கவிதைகளின் படிமங்கள் பல மீயதார்த்தவாத மற்றும் அரூப வெளிப்பாட்டுவாதப் பண்புகளைக் கொண்டிருப்பதைக் காணலாம். மேலும் இவருடைய 'தலைப்பிடப்படாத காதல் கவிதைகள்' கீழைத்தே சத்துக்கே உரித்தான சிற்றோவியங்களில் வரும் நிலவுருக்களையும் , காலநிலைகளையும், மனநிலவரங்களையும் சித்தரிப்பதைக் காணலாம். கலைவரலாற்றில் கவிஞர்களுக்கும் ஓவியர்களுக்கும் இடையிலான நட்பும் தொடர்ந்தேச்சையான உரையாடல்களும் பயணங்களும் பரிமாற்றங்களும் பல வெற்றிபெற்ற பரசோதனைகளை நிகழ்த்துவதற்கு ஏதுவாகின. ஈழத்திலும் தொண்ணூறுகளில் நிலாந்தனால் வரை யப்பட்ட 'பதுங்குகுழிக் குடும்பம்' என்னும் உலர்பசைவர்ண ஓவியம் (PASTEL PAINTING) அகிலனை அருட்ட, அதிலிருந்து 'பதுங்குகுழி நாட்கள்' என்ற தனது கவிதையை எழுதினார். பின்னர் அக்கவிதைக்கு எதிர்வினையாக ஓவியர் சனாதனன் தனது எச்சிங்வகை (ELCHING) ஓவியத்தை உருவாக்கினார்.

இங்கு ஒரு ஓவியம் கவிதையாகிப் பின்னர் மீளவும் ஓவியமாகிறது. அத்தோடு இது மூவர் சம்பந்தப்பட்ட படைப்பாகச் செயல்முறை. இந்தவகை எதிர்வினையாற்றுதலின் ஆகப்பிந்திய முயற்சியே 'ஒன்றும் பலதும்' என்ற இக்காட்சி நிகழ்வு. கலைவரலாற்று விரிவுரையாளராக பல்வேறு வகைக் கலைக் கோட்பாடுகளோடு அதிலும் குறிப்பாகக் கருத்துருவக் கலையோடு (CONCEPTUAT ART) அவருக்குண்டான பரிச்சயமும் தேடலும் இந்தக் காட்சி நிகழ்வுக்கான போஷிப்புக்களை தனக்கு வழங்கியதாகக் குறிப்பிடும் அகிலன் ,இக்காட்சியை கவிதைகளின் ஸ்தாபிப்புக்கள் (POETRY INSTALLATIONS) என்று அடையாளப்படுத்த விரும்புகிறார். இன்னொரு வகையில்கூறின் இவை வரையப்படாத ஓவியங்கள் அல்லது எழுத முடியாக் கவிதைகள் ஆகும். ■



# ஐ.நா...

அவை அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவுகளின் அடிப்படையில் தீர்மா னிக்கப்படுகின்றன. அரசுக்கும் அரசுக்கும் இடையிலான இராணுவ பொருளாதார நலன்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. ஐ.நா. எனப்படுவது அரசுகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உருவாக்கிய ஒரு கட்டமைப்புத்தான். எனவே ஐ.நா. தீர்மானங்களுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைகளுக்கும் இடையே இடைவெளிகள் இருக்கும். இந்த இடைவெளியை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த இடைவெளிக்குள் தான் தமிழ் மக்கள் அதிகம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

வரவிருக்கும் தீர்மானத்துக்கான முதல் வரைபு மென்மையான பொத்தாம் பொதுவான வார்த்தைகளால் எழுதப்பட்டிருக்கிறது. பொதுவாக தீர்மானத்தின் முதல் வரைபுகள் அவ்வாறுதான் அமையும் என்று கூறப்படுகிறது. அரசுகளின் அரங்கான மனித உரிமைகள் பேரவையில் ஓர் அரசு குறித்து நிறைவேற்றப்ப டும் தீர்மானத்தை உருவாக்கும் பொழுது முதல் வரைபில் அரசுகளுக்கு நோகாத விதத்திலேயே வார்த்தைகள் உள்ளடக்கப்படும் என்றும் கூறப்படு கிறது. பின்னர் படிப்படியாக உறுப்பு நாடுகளோடு கலந்துரையாடி அவற்றின் அறிவுறுத்தலுக்கு அமைய தீர்மானம் கடுமையாக்கப்படலாம் என்றும் ஒரு கருத்தும் உண்டு. ஆனால் இதை இப்படி எழுதுவதன் மூலம் இந்தகங கட்டுரையானது ஐ.நா. தீர்மானம் அரசாங்கத்தை தண்டிக்கக் கோரும் ஒன்றாக அமையும் என்றோ அல்லது தமிழ் மக்களுக்கு விடிவைத் தரும் என்ற மாயையையோ கட்டியெழுப்பத் தயாரில்லை.

ஐ.நா.வைப் பொறுத்தவரை இப்பொழுது ஜெனிவாவில் உள்ள சவால் உண்மையாக என்னவென்றால் இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைப்பது அல்ல. மாறாக ஏற்கனவே சீனாவை நோக்கி சாய்ந்திருக்கும் அரசாங்கம் இதற்கு மேலும் சீனாவை நோக்கி போகக் கூடிய விதத்தில் நெருக்கடிகளை கொடுக்காமல் அரசாங்கத்தை எப்படிக் கையாளுவது என்பது தான். ஐ.நா. தீர்மானம் இந்த அடிப்படையில்தான் வெளிவருமா?

ஆனால் இந்த இடத்தில் தமிழ் மக்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்து மகா சமுத்திரத்தில் எதைத் தமது பேரபலமாக சிங்கள மக்கள் பயன்படுத்தி வருகிறார்களோ அதையே தமிழ் மக்களும் தமது பேரபலமாகப் பயன்படுத்தலாம். சிங்கள மக்களுக்கு உள்ள அதே கேந்திர முக்கியத்துவம் தமிழ் மக்களுக்கும் உண்டு. ஆனால் கடந்த பல தசாப்தங்களாக இலங்கைத்தீவின் கேந்திர முக்கியத்துவம் சிங்கள மக்களுக்கு பேரபலம் ஆகவும் தமிழ் மக்களுக்கு துயரத்தின் ஊற்றாகவும் ஏன் மாறியது? என்ற கேள்விக்கு தமிழ் மக்கள் பொருத்தமான விடையைக் கண்டுபிடிக்க வேண்டும். ■



# "விசாரணையென்று போனவர் வீடு திரும்பவில்லை இன்னும்!"

## தமிழ் அரசியல் கைதியான சின்னப்பர் பாக்கியநாதனின் மனைவியின் கண்ணீர்க்கதை



சந்திப்பும் தொகுப்பும்:
பொ.சோபிகா

விசாரிச்சுப் போட்டு விடுறம் எண்டுசொல்லிக் கூட்டிக்கொண்டு போனவங்கள் 10 வருசம் ஆச்சுது. இன்னும் விடுதலை செய்யேல்லை அஞ்சு பிள்ளைகளையும் வைச்சுக்கொண்டு நான் படுகிற கஷ்டம் ஆருக்கு தெரியப்போகுது.?" இந்தக் கண்ணீர்க் கதறலுக்குச் சொந்தமானவர் , ஆயுள் தண்டனை கைதியாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியான சின்னப்பர் பாக்கியநாதனின் மனைவி செல்வராணி தான். இவர் மன்னார் பெரியமடு ஈச்சளவக்கையில் தனது 5 பிள்ளைகளுடன் வசித்து வருகிறார். தனது கணவரின் கைதுக்கான காரணம் அதன் பின்னர் நடந்த சம்பவங்கள் தான் பட்ட துன்பங்கள், தனது கோரிக்கைகள் என்ன என்பதை அவர் ' உதயன் - சஞ்சீவி ' வாசகர்களுக்கு இந்தப் பகுதியூடாகத் தெரியப்படுத்த முனைகின்றார்.

"எனது கணவர் அல்லும் பகலும் விறகுவெட்டி கூலித்தொழில் புரிந்து தானும் தன்பாடும் என்று குடும்ப வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தார். நாம் வாழ்ந்து வந்த பெரிய மடு பிரதேசம் அப்போது போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. 2003 ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கும் விடு தலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுல் படுத்தப்பட்டிருந்த காலம். அன்றொரு நாள் எனது கணவர் போரளிகளின் பயண அனுமதியை பெற்றுக்கொண்டு உயிலங்குளம் தடை முகாமைத் தாண்டி பேசாலையில் உள்ள உறவினரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். பஸ்ஸில் இருந்து இறங்கி உறவினரின் வீடு நோக்கி நடந்து சென்றுகொண்டிருக்கும் போது அவ்வீதி வழியாக மேலும் 4 இளைஞர்கள் சைக்கிளை உருட்டிக்கொண்டு அவருடன் சேர்ந்து நடந்திருக்கிறர்கள்.

நேரம் இரவு 8 மணி. பேசாலை முகாமிலிருந்து புறப்பட்ட விசேட அதிரடிப்படையினர் வீதியின் எதிர்த் திசையில் இருந்து ரோந்து வந்துள்ளார்கள். திருப்பமொன்றில் எதிர்பாராமல் அதிரடிப்படையினரை சந்தித்த அந்த இளைஞர்கள், சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர். சுற்றிவளைத்து சோதனையிட்ட அதிரடிப்படையினர் உரப்பையில் சுற்றப்பட்டவாறு ஒரு துப்பாக்கியையும் அதற்கான 3 ரவைக்கூடுகளையும் சைக்கில் கரியலில் இருந்து கைப்பற்றி , அந்தப் பழியை எனது கணவர் மீது போட்டு அவரைக் கைதுசெய்துவிட்டனர்.

பேசாலை முகாமுக்கு என் கணவரைக் கொண்டு சென்றார்கள். அங்கு சிங்கள மொழியில் ஏதேதோ கேட்டு அச்சுறுத்தி, விசாரித்து, எழுதப்படிக்கத் தெரியாத அவரிடம் கையொப்பங்களை பெற்றுக்கொண்டு மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

உண்மையில் எனது கணவருக்கும் அந்த வழியே வந்த இளைஞர்களுக்கும் எந்த வித தொடர்பும் கிடையாது. கணவரின் கைது தொடர்பில் நான் மன்னாரில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டேன். அவர்கள் சட்டத்தரணி ஒருவரை அனுப்பி நீதிமன்றின் ஊடாக கணவரைப் பிணையில் விடுவித்தனர்.

தொடர்ந்து மன்னரார் நீதவான் நீதிமன்றம் முதல் வவுனியா மேல் நீதிமன்றம் வரை வழக்கு தவணைகளுக்கு செல்வதற்கான பயண அனுமதியை வழங்கி வந்த விடுதலைப்புலிகள், ஒரு கட்டத்தில் அந்த அனுமதியை தர மறுத்து விட்டனர். ஆகையினால், புலிகளது கட்டுப்பாட்டு பகுதியை கடந்து அரச கட்டுப்பாட்டு பகுதியான வவுனியா மேல் நீதிமன்ற வழக்குத் தவணைகளுக்கு அவரால் சமுகமளிக்க முடியாமல் போனது.

கணவரது சார்பில் மேல்நீதிமன்றில் ஆஜராகிவந்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் , எனது கணவர் மன்றில் முன்னிலையாக முடியாமைக்கான காரணத்தை எடுத்துக்கூறிய போதும் அவர் இல்லாமலே நீதிமன்றம் வழக்கை நடத்தியது. என் கணவர் பக்க நியாயங்கள் எந்த அளவில் கவனத்தில் எடுக்கப்பட்டதோ, இல்லையோ நாமறியோம்.

எனினும் எனது கணவருக்கு பதிலாக நீதிமன்றம் கதிரை ஒன்றை வைத்து ஆயுள் தண்டனை தீர்ப்பளித்து வழக்கை முடிவுறுத்தியுள்ளது. போர்க்காலம் ஆகையால் இடப்பெயர்வு மற்றும் முறையான தொடர்பாடல் வசதிகள் இன்மையால் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட விடயம் தொடர்பில் கணவர் உட்பட நாம் எவரும் அறிந்திருக்கவில்லை.

2009 இறுதி யுத்தத்தின் பின்னர் மீளக் குடியேறி கூலிவேலை செய்து, முழுமையாக அழிந்துபோன மனைப்பொருளாதாரத்தை மீட்டெடுத்து குடும்பத்தை கொண்டெழுப்புவதற்கு போராடிக்கொண்டிருந்தார் எனது கணவர். இது இவ்வாறிருக்க, 2011 ஒக்ரோபர் 5 ஆம் திகதி எங்களது வீட்டுக்கு வந்த கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர், கணவரிடம் சிறியதொரு வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும் என அவரை அழைத்துச்சென்றனர். 4 ஆம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் அவரிடம், கடந்த 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வில்பத்து காட்டுக்குள் புலிகள் இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாக சொல்லப்படும் கிளைமோர் குண்டுத்தாக்குதல் சம்பவத்தை மையப்படுத்தி விசாரணை செய்துள்ளனர்.

எனது கணவர் ஒரு விறகுவெட்டி என்பதை மாத்திரம் வைத்துக்கொண்டு "குறித்த தாக்குதலுக்கு காட்டு பாதை வழிகாட்டியாக இவரே செயற்பட்டார்" என்ற கோணத்தில் குற்றச்சாட்டை முன் வைத்தனர். 4 ஆம் மாடி விசாரணையை அடுத்து பூசா தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்ட கணவர், பின்னர் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை , மகசின் சிறைச்சாலை, அனுராதபுரம் சிறைச்சாலை என பல இடங்களுக்கும் மாற்றப்பட்டார் இறுதியில் வில்பத்து வெடிப்புச் சம்பவத்துடன் அவரை தொடர்பு படுத்தி அனுராதபுரம் மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

மனித உரிமைகள் அமைப்பு ஒன்றின் ஊடாக சட்ட உதவியைப் பெற்று வழக்கை நடத்தி முடித்த போது, 2017 டிசம்பர் 6 அன்று கணவர் உட்பட இன்னும் 6 அரசியல் கைதிகளுக்கு தலா 7 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதன் போது தண்டனைக் கைதியாக்கப்பட்ட எனது கணவரின் கை ரேகைப்பதிவுகள் மன்றினால் பெறப்பட்டு தடயவியல் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் தான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. ஏற்கனவே வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்றிருந்த வழக்கில் கணவருக்கு பதிலாக கதிரையை வைத்து ஆயுள் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டிருந்த விடயம் அப்போதே வெளிப்பட்டது. உடனடியாக கருமமாற்றிய பொலிஸார் வெறும் 7 ஆண்டு சிறை தண்டனை கைதியாக இருந்த கணவரை மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றில் முற்படுத்தி ஆயுள் தண்டனையையும் பெற்றுக் கொடுத்துவிட்டார்கள்.

இதற்கு யாரிம் நியாயம் கேட்பது? நீதிமன்ற வழக்கிற்காக அரச கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் செல்வதற்கு அனுமதி தராமல் மறுத்த புலிகள் இயக்கத்தை குறை கூறுவதா? அல்லது போர்காலச் சூழலை கருத்தில் எடுக்காமல் வழங்கப்பட்ட தீர்ப்பைக்க் குறை கூறுவதா..? ஒன்றும் புரியவில்லை.

மீண்டும் ஒரு முறை இலங்கை தேசத்து நீதி தேவதையிடம் நியாயத்தை எதிர்பார்த்து எனது கணவருக்கு வழங்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனை தீர்ப்பினை எதிர்த்து, கொழும்பு மேல் முறையிட்டு நீதிமன்றில் மேல் முறையீடு செய்துவிட்டு அவரது விடுதலைக்காக நானும் பிள்ளைகளும் கடவுளை பிரார்த்தித்துக்கொண்டு இருக்கிறோம்.

கடந்த 10 ஆண்டுகளாக கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கணவருக்கு தற்போது 69 வயதாகிறது. இரத்த அழுத்தம், பார்வைக்கோளாறு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள கணவருக்கு இப்போது கொரோனா தொற்றும் ஏற்பட்டு உடல், உள ரீதியில் பெரும் பலவீனமுற்று காணப்படுகிறார்.

சிறைக்குள் அவரது நிலை அப்படியிருக்க இந்த வயதான காலத்தில் வறுமையின் பிடியில் ஐந்து பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு குடும்பத்தை கொண்டிழுக்க நான் படாத பாடு படுகிறேன். பலபேரிடம் உதவிக்கோரிக்கை விடுத்த போதும் இதுவரை ஒன்றும் கைகூடி வரவில்லை. தினமும் நாட் கூலிக்கு வேலை செய்தும் கூட,வீட்டு நிலைமையை சமாளிக்க முடியவில்லை. இத்தகைய பரிதாப நிலை எமது வீட்டில் மட்டுமில்லை அநேகமான அரசியல் கைதிகளின் வீடுகளிலும் இதே கதிதான். ஆகவே , அரசாங்கமும் ஜனாதிபதியும் அரசியல் கைதிகள் விடயத்தில் மனிதாபிமானத்தை முன்னிறுத்தி செயற்பட வேண்டும் என ஐந்து பிள்ளைகளின் தாயாக இந்த வேண்டுகோளை முன் வைக்கின்றேன்.

# சவூதி அரேபிய மாற்று வணிகம்



உலக உலா

ஆர். பிரகாஷ்

ஐக்கிய நாடுகள் சபையின் ஏகப்பட்ட தொடர்ச்சியான கோரிக்கைகள், அமெரிக்காவின் வலியுறுத்தல்கள், உலகப் பெண் தலைமைகள் மற்றும் ஆளுமைகளின் அழுத்தங்கள் இவற்றுக்கெல்லாம் பணிந்து கொடுக்காமல் பெண்கள் விவகாரத்தில் 'முயலுக்கு மூன்றுகால்' போக்கைக் கடைப்பிடித்துவந்த சவூதி அரேபியா, தற்போது பெண்களுக்குச் சுதந்திரத்தை வழங்குவதற்குத் தானாக முன்வந்துள்ளது. பெண்கள் வாகனம் செலுத்துவதற்கு அனுமதி, விடுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதி, கால்பந்தாட்டங்களை நேரில் பார்ப்பதற்கு அனுமதி, ஆண்களின் துணையில்லாமல் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு அனுமதி என்று ஒவ்வொன்றாக அவிழ்க்கப்பட்டுக் கொண்டிருந்த இந்தச் சுதந்திர முடிச்சுக்களில் தற்போது பெரும் பாய்ச்சல் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. அதுதான் சவூதிப் பெண்கள் இராணுவத்தில் சேரலாம் என்கின்ற அனுமதி.

**காரணம் என்ன?**

சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் மொகமட் பின் சல்மான், பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளை ஏன் இவ்வளவு தூரம் கைவிடுகின்றார்? அவர் ஒரு பெண்ணியவாதியா? பெண்கள் அடிமைத்தனத்தை ரியாத் வெறுக்கின்றதா? இல்லவேயில்லை. பணம்தான் இங்கே பிரதானம். 'பணம் மற்றும் அதுசார் முதலீடுகள்' என்பதை வைத்துத்தான் சவூதிப் பெண்களுக்கான சுதந்திரம்கூடத் தீர்மானிக்கப்படுகின்றது என்பதுதான் கசக்கும் உண்மை.

சவூதியின் பெரும் பொருளாதாரம் கச்சா எண்ணெய்தான். உலகின் கச்சா தேவையில் குறிப்பிடத்தக்க அளவை தனித்து நின்று நிறைவேற்றுகின்றது சவூதி. கச்சாவுக்கு இதுகாலும் இருந்த கேள்விகளின் அடிப்படையில் பணவீழ்ச்சியென்பது சவூதிக்குத் தொலைதூரம். ஆனால், இனிவரும் காலங்கள் அப்படியாக இருக்காது. அள்ளஅள்ளக் குறையாத கச்சா வளம் சவூதியில் இருந்தாலும் ஈரானும் சவூதிக்கு நிகராக கச்சாத் துறையில் வளர்ந்துவிட்டது. சவூதியில் இருப்பதை விடவும் மிகப் பெரும் கச்சா வயலை ஈரான் அடையாளப்படுத்தியுள்ளது. அதேநேரம் உலக நாடுகள் கச்சாவுக்கு மாற்றான திட்டங்களைத் தேடிக்கொண்டிருக்கின்றன. உதாரணமாக எரிபொருளில் இயங்கும் வாகனங்களுக்குப் பதிலாக சூரிய ஒளியில் இயங்கும் வாகனங்கள் தற்போது தாராளமாகவே பயன்பாட்டுக்கு வந்துள்ளன. அத்துடன் ஒவ்வொரு அரசும் இந்தத் தன்னிறைவு வாகனங்களைக் கொள்வனவு செய்யும்படியே தன் மக்களுக்கு அறிவுறுத்தி - ஊக்குவித்து வருகின்றது. இவ்வாறானதொரு நிலையில் வெறுமனே கச்சாவைச் சார்ந்திருக்காமல் வேறு பொருளாதாரத் தேடல்களை சல்மான் மேற்கொண்டார். அதன் விளைவே இந்தப் பெண்ணியத்தனம்.

**பெண்கள் விடுதலையும் சவூதிப் பொருளாதாரமும்**

பெண்களுக்கு விடுதலை வழங்குவதற்கும் சவூதியின் பொருளாதாரம் மேம்படுவதற்கும் என்ன தொடர்பு இருந்துவிட முடியும்?. சவூதி பாரம்பரியங்கள் மற்றும் பழைமைகளுக்குப் பஞ்சம் இல்லாத நாடு. மக்கா, மதீனா போன்ற நகர்கள் இதற்கு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டுகள். சுற்று லாத்துறையை அங்கு வெகுவாகக் கட்டியெழுப்பலாம். ஆனால் பெண்ணடிமைத்தனச் சிந்தனைதான் சவூதி மீது பெரும் கறுப்புப் புள்ளியை உலக அளவில் ஏற்படுத்தியுள்ளது. இதனால் பெண்ணியவாதிகளும், தம்பதிகளும், பெண்களும் சவூதிக்குச் சுற்றுலா மேற்கொள்ள விரும்பார்கள். இந்த நிலையில் பெண் சுதந்திரத்தை வழங்கி தன்னையும் சராசரி நாடு என்ற பிம்பத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை சவூதிக்கு இருந்தது. இதனால்தான் சவூதியில் சுற்றுலாத்துறை தொடர்பான விடயங்களில் எல்லாம் பெண்ணடிமைத்தனம் கைவிடப்படும் பாங்கு பூதாகரமாக்கப்பட்டு விளம்பரப் படுத்தப் படுகின்றது. அத்துடன் வெறுமனே ஆண்களை மட்டும் சார்ந்திருக்காமல் பெண்களையும் உழைப்பை நோக்கித் தள்ள வேண்டிய நிலை சவூதிக்கு. இவையெல்லாம் ஒருசேரச் சேர்ந்துதான் தற்போது சவூதிப் பெண்களின் விலங்குகள் ஒடிக்கப்படக் காரணமாகியுள்ளன. சவூதிப் பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ள துறைகளின் பட்டியலே இதை மெய்ப்பிதம் செய்கின்றது.

ஆக, சவூதி மேற்கொண்டிருப்பது ஒரு முதலீட்டுத் திட்டம். மற்றும்படி ரியாத்தை மெச்சுவதற்கு ஒன்றுமில்லை. காசேதான் கடவுளப்பா. அந்தக் கடவுளுக்கும் இது தெரியுமப்பா.

---

விளையாட்டு

# சதிகளால் வென்றதா இந்தியா?

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் கடந்த வியாழனன்று முடிவடைந்த மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் கிரிக்கெட் அரங்கில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. வாதப்பிரதிவாதங்கள் என்பதைவிட 'சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது' என்றால் அது இன்னும் பொருத்தம். ஆசிய ஆடுகளங்கள் சுழற்பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கும் வகையில்தான் அமைக்கப்படும். இது எழுதப்படாத விதியும் கூட. இந்தியாவில் அமைக்கப்படும் டெஸ்ட் ஆடுகளங்களும்சரி, இலங்கையில் உள்ள காலி, கொழும்பு ஆடுகளங்களும்சரி, பாகிஸ்தானில் அமைக்கப்படும் டெஸ்ட் ஆடுகளங்களும்சரி, பங்களாதேஷ் ஆடுகளங்களும்சரி சுழற்பந்துவீச்சுக்குத்தான் இதுவரை ஒத்துழைத்துள்ளன. ஆனால், அனைத்திலும் இருந்து வேறுபடுகின்றது இந்தியா– இங்கிலாந்து இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெற்ற அஹமதாபாத் ஆடுகளம்.

சுழற்பந்துவீச்சுக்கான ஆடுகளங்கள் என்று மேலே அடையாளப்படுத்தப்பட்ட ஆடுகளத்தில் முதலிரு நாள்கள் துடுப்பாட்ட வீரர்களும், பகுதியளவில் வேகப்பந்து வீச்சாளர்களும் சொல்லிக்கொள்ளும்படியான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்தனர். இவ்வளவு ஏன், இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலிரு ஆட்டங்களும் நடைபெற்ற சென்னை ஆடுகளத்திலும்கூட வேகப்பந்து வீச்சாளரான அண்டர்சன் பந்துவீச்சில் சாதித்தமையையும் துடுப்பாட்ட வீரரான ரூட் இரட்டைச் சதத்தையும் ரோகித் 150க்கும் அதிகமான ஓட்டங்களையும் பெற்றமையையும் இதற்கு உதாரணங்களாகக் கோடிட்டுக் காட்டலாம். ஆனால், அஹமதாபாத் ஆடுகளம் முதல் நாளின் முதலாவது பருவ ஆரம்பத்திலேயே சுழலுக்கு ஒத்துழைக்க ஆரம்பித்துவிட்டது. பந்து தன் பளபளப்புத் தன்மையை இழக்கும் முன்னரே காட்டுத்தனமாகத் திரும்பத் தொடங்கிவிட்டது.

இதனால் இங்கிலாந்தால் வெறும் 112 மற்றும் 81 ஓட்டங்களையே தமது இரு இன்னிங்ஸ்களில் எடுக்க முடிந்தது. இந்திய அணி தன் முதல் இன்னிங்ஸில் 99 ஓட்டங்களுக்கு 3 இலக்குகள் என்றிருந்து அதன்பின்னர் ரூட்டிடம் 5 இலக்குகளைப் பறிகொடுத்து 145 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

சுழற்பந்துவீச்சு ஆடுகளங்களிலும்கூட வேகப்பந்து வீச்சாளர்கள் ஒரு நாளின் அல்லது ஒரு பருவ ஆரம்பத்தில்



பந்துவீச அழைக்கப்படுவார்கள். காரணம் என்னவெனில், வேகப்பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சுக்களால் ஆடுகளங்கள் உடைக்கப்படும். அதன் பின்னர் தூசுகளும் மணல்களும் வெளிக்கிளம்பும்போது தேய்ந்த பந்துகளால் சுழற்பந்துவீச்சாளர்கள் வீசினால் பந்து நன்றாகத் திரும்பும். ஆனால் அஹமதாபாத்தில் இதுவொன்றும் நடக்கவேயில்லை. பொதுவாக உள்ளூர் ஆடுகளங்கள் அந்தந்தத் தேசிய அணியின் நலன்களை இலக்குவைத்துத்தான் அமைக்கப்படும் என்பது வெளிப்படையான போதிலும், அஹமதாபாத் ஆடுகளம் கொஞ்சம் கண்டனத்துக்கு உரியதுதான். இங்கு இங்கிலாந்து அணி தோற்கடிக்கப்படவில்லை. பரிதாபத்துக்கு உரியவர்கள் இரு அணிகளின் வேகப்பந்து வீச்சாளர்களும், துடுப்பாட்ட வீரர்களும்தான்.

**"கிரிக்கெட்டுக்கு 'பிட்ச்' போடச் சொன்னால் கிட்டிப்புள்ளுக்கு போட்டிருக்கிறாங்கள்"**



# மீள உறுமட்டும் டைகர் வூட்ஸ்!

விளையாட்டு உலகில் இந்த வாரம் இறங்கியுள்ள பெரும் இடி, 'டைகர் வூட்ஸ் படுகாயமடைந்தார்' என்ற செய்திதான் . அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்வொன்றின் படப்பிடிப்புக்காகச் சென்றபோதுதான் இந்தப் பேரிடர் அவருக்கு நேர்ந்துள்ளது.

வூட்ஸ் காயமடைந்தமைக்கு என்ன காரணம் என்று பலமுனை விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. உலகில் கோல்ப் விளையாட்டு மூலம் அதிகளவான பணத்தைச் சம்பாதித்த வீரராக உள்ள வூட்ஸ், 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை எந்தவொரு சர்வதேச அங்கீகாரத்தையும் பெறவில்லை. அத்துடன் தனது முதலாவது இடத்தையும் அவர் பறிகொடுத்திருந்தார். இந்த மன உளைச்சல்களில் வூட்ஸ் இருந்தமையால் ஏற்பட்ட அழுத்தங்கள் மற்றும் கவனக்குறைவுகள் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்று ஒரு கருத்து நிலவுகின்றது. அதேநேரம் வூட்ஸ் பயணித்த பாதை 60 பாகை சரிவுகொண்டது.

இதன் காரணமாகவே இந்த விபத்துச் சம்பவித்தது என்றும் சொல்லப்படுகின்றது. எது எவ்வாறு இருந்தாலும் வூட்ஸ் மீண்டு வரவேண்டும். அது தனிப்பட்ட வாழ்வாக இருந்தாலும்சரி, மைதானச் சவாலாக இருந்தாலும்சரி.

**" காயப்பட்ட புலி வீறுகொண்டு நலம் பெறட்டுமே"**